

வைரவிழா ஆண்டு
கல்கி
KALKI
14.10.2001
ரூ. 6.00
சாமிலி Vs சக்கரம்!

அனல் பறக்கும் மேயர் தேர்தல்:

"ஓடும் மேகங்களே. ஒரு சொல் கேளீரோ!" என்ற எம்.ஜி.ஆர். படப் பாடல் டெம்போ வண்டியி லிருந்து ஒலிக்க, பாண்டு கோஷ்டியின் வாசிப்பு, வடபழனியில், ஜே.ஆர்.கே. பள்ளியின் பின் பக்கம் உள்ள குறுகலான தெருக்களில் அதிர்கிறது. அதைத் தொடர்ந்து அமைச்சர் வளர்மதி விறுவிறுப்பாக லெப்ட் - ரைட் போடுவதுபோல் நடந்து வருகிறார். கூடவே, கையில் பிரேஸ்லெட், கழுத்தில் கனமான தங்கச் சங்கிலியுடன் அ.தி.மு.க. கரைவேட்டி உடன்பிறப்புகள்.





• பாலகங்கா



• வசந்தகுமார்

"அன்பான பொதுமக்களே... சென்னை மாநகர மேயர் பதவிக்குப் புரட்சித் தலைவியின் வேட்பாளராக நிற்கும் உங்கள் வேட்பாளர் பாலகங்காவுக்கு இரட்டை இலைச் சின்னத்தில் வாக்களியுங்கள்." திறந்த ஆட்டோவில் கை கூப்பியபடி வாக்கு வேட்டையாடி வருகிறார் பாலகங்கா. இத்தனை ஆர்ப்பாட்டங்களும், தெருவில் உள்ள தண்ணீர்த் தொட்டியில் தண்ணீர் பிடித்துக் கொண்டிருக்கும் பொது மக்களிடம் எந்தப் பாதிப்பையும் ஏற்படுத்தவில்லை.

"சென்னையின் குடி தண்ணீர்ப் பிரச்னைக்கு யார் காரணம். தி.மு.க.வும், மேயர் ஸ்டாலினும் தான். 1996ம் ஆண்டு கிருஷ்ணா நீர் சென்னைக்கு வந்துவிட்டது என்று உங்களை ஏமாற்றி மேயர் தேர்தலில் வென்றுவிட்டார் ஸ்டாலின். சென்னையின் தண்ணீர் கஷ்டத்தைத் தீர்க்க புரட்சித் தலைவியின் அரசு புதிய வீராணம் திட்டத்தைக் கொண்டு வர உள்ளது. எனவே, நீங்கள் இரட்டை இலைக்கு வாக்களிக்க வேண்டும்" என்று பேசுகிறார் பாலகங்கா!

வெள்ளை மாளிகையின் அடுத்த வெண்புறா?

கல்கி இண்டர்நெட் முகவரி : www.kalkiweekly.com
ஈ மெயில் : kalkiweekly@vsnl.com

"வீராணம் எப்போ வந்து, எங்கள் கஷ்டம் எப்போது தீருவது?" என்கிறார் குடத்துடன் வரும் பெண்மணி ஒருவர். அதுபோன்ற குரல்களைக் கேட்பதற்கெல்லாம் பாலகங்கா வுக்கு நேரம் கிடையாது. பத்து, பன்னிரண்டு நாட்களில் பதினான்கு சட்டமன்ற தொகுதிகள் அடங்கிய மேயர் தொகுதியைச் சுற்றி வந்து வாக்கு கேட்க வேண்டும். இருபத்தி நான்கு மணி நேரம் பிரசாரம் செய்தால்கூட நகரின் எல்லா முக்கியத் தெருக்களுக்கும் செல்வது சாத்தியமில்லை.

மேயர் பதவிக்கு அ.தி.மு.க. சார்பாக, ராதா ரவி, விஜயசாந்தி (அ.தி.மு.க. உறுப்பினராக இல்லாவிட்டாலும் கூட) ஆகியோரின் பெயர்கள் அடிபட, பாலகங்காவை வேட்பாளராக நிறுத்தியதில் அ.தி.மு.க. தொண்டர்களுக்கு ஏக சந்தோஷம். காரணம் கட்சியின் துவக்க காலத்திலிருந்தே இருப்பவர். அடிமட்ட தொண்டர்களை அணைத்துக் கொள் பவர். மத்திய சென்னை மாவட்டச் செயலாளர். புதுப் பேட்டையில் நெரிசலான தெரு ஒன்றில் வசிக்கிறார் பாலகங்கா. 1996 முதல் 2001 வரை கட்சிக்காக எட்டு முறை சிறை சென்றிருக்கிறார் இவர்.

"கடந்த ஐந்தாண்டுகளில் மாநகராட்சியில் ஏகப்பட்ட ஊழல் நடந்திருக்கு. ஒரு காரியமும் உருப்படியாக நடக் கலை" என்கிறார் பாலகங்கா.

ஜெயித்து வந்தால் பாலகங்காவின் முன் னுரிமை என்ன? "குடி தண்ணீர் தாங்க. மெட்ரோ வாட்டர் அரசு நிறுவனமாக இருந் தாலும் மாநகராட்சிக்கும் பொறுப்பு இருக்கிறது. நகரத் தைச் சுத்தமாக வைத்திருக்க முயற்சி செய்வோம். இதன் மூலம் சென்னை, தானாகவே சிங்கப்பூராக மாறிவிடும். மாநக ராட்சி கல்வி நிலையங்கள் இன்னமும் சிறப்பாக இயங்க பாடுபடுவேன்" என்கிறார்.



தி.மு.க. சார்பில் ஸ்டாலின் போட்டியிட மாட்டார் என்ற நிலை ஒரு கட்டத்தில் இருந்தபோது பாலகங்கா வேட் பாளராக அறிவிக்கப்பட்டார். இப்போது ஸ்டாலினே களத்தில் குதித்துவிட்டார். "தான் போட்டியிடவில்லை" என்ற செய்தியைக் கிளப்பிவிட்டால் ஜெயலலிதா பலவீனமான வேட்பாளரைப் போடுவார் என்று திட்டமிட்டு யுக்தியோடு செயல்பட்டாரா ஸ்டாலின்? என்று கேட்பவர்களும் உண்டு. ஸ்டாலின் களத்தில் குதித்தபோது பாலகங்கா நான்கு சட்டமன்றத் தொகுதிகளில் பிரசாரத்தை முடித்திருந்தார். துறைமுகம் பகுதியில் ஸ்டாலின் பிரசாரம், ஆர்ப்பாட்டம் ஏதுமில்லாமல் அமைதியாக நடக்கிறது. ஸ்டாலின் அதிகம் பேசுவதில்லை. "எங்கள் பணி தொடர உதய சூரியனுக்கு வாக்களியுங்கள்' என்று சொல்வதோடு சரி. உடன்வரும் மாவட்டச் செயலாளர்கள் மைக்கில் ஸ்டாலினின் சாதனை களை அடுக்குகிறார்கள். மேம்பாலங்கள், தனியார் மூலம் சிறப்பாக நடக்கும் குப்பை அள்ளும் பணி, சோடியம் விளக்குகள், சாலை வசதிகள் என்று சாதனைகள் பட்டியலிடப் படுகின்றன. தண்ணீர்ப் பிரச்னை அடக்கி வாசிக் கப்படுகிறது. சந்திரபாபு நாயுடுவிடம் சுமுகமாகப் பேசி கிருஷ்ணா தண்ணீர் பெறத் தவறியதால்தான் சென்னை யில் பஞ்சம் என்று சொல் கிறார்கள் தி.மு.க.வினர்.

ஸ்டாலின் போட்டியிட வில்லையென்றால் அடுத்த வேட்பாளர் என்று கழகத் தினரால் சொல்லப்பட்ட மத்திய சென்னை மாவட்ட தி.மு.க. செயலா ளர் பரிதி இளம்வழுதி, "சென்னை தி.மு.க.வின் கோட்டை என்று மீண்டும் நிரூபிப்போம்" என்கிறார். தி.மு.க. தொண்டர்களி டையே ஒரு புதிய உற்சாகம் பளிச்சிடுவதைச் சொல் லித்தான் ஆக வேண்டும். கலைஞர் கைது விவகாரத் திற்குப் பிறகு மக்களிடம் கழகத்துக்கு அனுதாப அலை வீசுவதாகச் சொல்கிறார்கள் அவர்கள். "ஜெயலலிதா ஆட்சிக்கு வந்த இந்த நான்கு

மாத காலத்தில் சென்னை நகரத்துக்கு எந்த திட்டத்தையும் அ.தி.மு.க. அரசு அறிவிக்கவில்லை. அது தவிர நகரத்தில் நடக்கும் பல வளர்ச்சிப் பணிகளுக்கு முட்டுக்கட்டை போட்டு, மேயரைச் செயல்படவிடாமல் தடுத்தார்கள். இந்த அநியாயத்திற்கு ஜெயலலிதாவுக்கு நல்ல பாடம் கற்பிக்கப் போகிறார்கள் சென்னை மக்கள்'' என்று சொல்கிறார் பரிதி. சென்னை நகரின் மூன்று தி.மு.க. செயலாளர்களும் ஸ்டாலினை பல லட்சம் வாக்குகள் வித்தியாசத்தில் வெற்றி பெற வைக்க இரவும், பகலுமாக உழைக்கிறார்கள்.

இரண்டு பயில்வான்கள் கோதாவில் மோதும்



போது தயிர்வடை தேசிகன் பக்கத்தில் சென்றால் பார்ப்பவர்களுக்குச் சிரிப்பு வராமல் இருக்குமா? தி.மு.க.வும் அ.தி.மு.க.வும் களத்தில் எதிர், எதிராக நிற்கும் நிலையில் தனி அணி அமைத்திருக்கும் காங்கிரஸும் களத்தில் குதித்துவிட்டது. வேட்பாளர் வசந்தகுமார். ஆனால் இவரை யாரும் அலட்சியமாக ஒதுக்க முடியாது. மக்களுக்கு நன்கு அறிமுகமானவர். பெரிய கட்சிகளுக்குச் சமமாக செலவழிக்கக் கூடியவர், அடுத்ததாக தனிப்பட்ட முறையிலும்கூட நகரெங்கும் இளைஞர்களைத் தன் வசப்படுத்தி வைத்திருப்பவர் - இவையெல்லாம் வசந்தின் ப்ளஸ் பாயிண்டுகள்.

"நாடு முழுவதும் சோனியா காந்திக்குச் செல்வாக்கு உயர்ந்து கொண்டே இருக்கிறது. தி.மு.க. - அ.தி.மு.க. இரண்டையும் மக்கள் வெறுக்கிறார்கள். எனவே இந்த முறை கண்டிப்பாக காங்கிரஸுக்கு ஓட்டுப் போடுவார்கள்'' என்கிறார் வசந்த். 1985லிருந்தே கட்சியில் எம்.எல்.ஏ., எம்.பி. என்று மாறி, மாறி சீட் கேட்டு வருகிறாராம். "இப்போதுதான் கொடுத்திருக்கிறார்கள். மாநகராட்சி மேயராக'' என்று சொல்லி வியக்கிறார். ஜெயித்தால், அவருடைய அணுகுமுறை எப்படி இருக்கும்? "முதலில் மக்கள் குறைகளைக் கேட்பேன். அதைச் செய்தாலே பெரிய நிம்மதி அவர்களுக்கு. தினமும் ஒரு குறிப்பிட்ட நேரத்தில் பொது மக்கள் யார் வேண்டுமானாலும் தொடர்பு கொள்ளலாம் என்று அறிவிப்பேன்'' என்கிறார்.

களத்தில் ம.தி.மு.க. சார்பாக மனோகரன் என்பவரும் டஜனுக்கு மேற்பட்ட சுயேச்சைகளும் இருக்கிறார்கள்.


"மேயர் தேர்தலில் வேண்டுமானால் ஸ்டாலின் வெற்றி பெறலாம். மாமன்ற உறுப்பினர்கள் தேர்வில் அ.தி.மு.க. வேட்பாளர்கள்தான் பெரும்பாலோர் வெற்றி பெறுவார்கள். எனவே மேயர் வென்றாலும் அவரால் ஒன்றும் செய்ய முடியாது. தவிர ஆட்சியும் எங்களுடையதுதானே'' என்கிறார் இப்போதைய ஆளும்கட்சி கவுன்சிலர் ஒருவர்.

ஜெயலலிதாவின் பதவி பறிப்பு விவகாரத்தை மக்களின் அனுதாபத்தைப் பெறும் வகையில் திசை திருப்பிப் பேசுகிறார்கள் அ.தி.மு.க. பேச்சாளர்கள். சென்னை நகர காவல் துறையின் உதவியோடு வாக்குப் பதிவு நாளன்று கலவரங்களை அரங்கேற்றி வாக்காளர்களை வோட்டுச் சாவடிக்கு வரவிடாமல் தடுக்கும் முயற்சி நடக்க இருப்பதாகச் சொல்கிறார்கள் தி.மு.க.வினர். நடுத்தர மக்கள் திரண்டு வந்து வோட்டுப் போட்டால் தி.மு.க.வுக்குத் தான் சாதகமாக இருக்கும். அதைத் தடுக்கும் முயற்சிகளை நடத்த திட்டமிடுகிறார்கள்'' என்கிறார்கள்.

முப்பத்தியேழு லட்சம் வாக்காளர்களைக் கொண்டது மேயர் தொகுதி. பதிவாகும் வோட்டு சதவீதத்தை வைத்தே வெள்ளை மாளிகையை (அதாவது ரிப்பன் பில்டிங்) ஆளப்போவது யார் என்று முடிவு செய்ய முடியும்'' என்கிறார்கள் தேர்தல் பண்டிதர்கள். முடிவு எப்படி இருந்தாலும் மேயர் தேர்தல் கிளப்பும் சூடு அடங்க நெடுங்காலமாகும்.

- ப்ரியன்

படங்கள் : ராஜன்





சர்மிலி Vs சக்கரம்!

ஜெயா டீ.வி.யில் 'காசுமேலே' நிகழ்ச்சியில் கலக்கோ கலக்கென்று கலக்கிக் கொண்டிருக்கும் சர்மிலியை கலாய்த்து விட்டு வருவது என்ற முடிவோடு புறப்பட்டார் நிருபர் சக்கரம். அந்த கடி மாநாட்டில் நிறைவேறிய தீர்மானங்கள்!

லயோலா கல்லூரியில் எம்.சி.ஏ. இறுதியாண்டு படித்து வரும் சர்மிலியைக் கல்லூரி வளாகத்திலேயே கண்டுபிடித்த சக்கரத்திற்கு ஒரே அதிர்ச்சி.

"சர்மிலி என்ன இது ஜீன்ஸ் டீஷர்டில் வந்து தூள் கிளப்புகிற நீங்கள் தழையத் தழைய புடைவை அணிந்திருப்பதாவது?" - சக்கரம்.

"ஃபோட்டோ வேற எடுப்பேன்னு சொன்னீங்களா அதான் கல்கிக்காக புடவை கட்டியிருக்கேன். ஆனா எனக்கு ரொம்ப பிடிச்சது ஜீன்ஸ்தான். இப்போ மியூசிக் வீடியோவில் நிறைய நடிக்கிறேன். அதனாலே சென்னைக்கும் மும்பைக்கும் அடிக்கடி பறக்க வேண்டியிருக்கு. டிராவலுக்கு ஜீன்ஸ் தான் வசதி மிஸ்டர் சக்கரம்."

"துவைக்காமல் ஆறுமாசம் போடலாம்கிறது ரொம்ப வசதியா இருக்குன்னு சொல்லுங்க?"

"எங்க ஏரியாவிலே (கீழ்ப்பாக்கம்) தண்ணீர்க் கஷ்டம் இல்லே!" என்று சர்மிலி பதிலடி கொடுக்கிறார்.

"நேர்ல அச்சம், மடம், நாணம் எல்லாம் வெளிப்படுத்துறீங்க. ஆனா உங்க டீ.வி. நிகழ்ச்சியில் ஜாலி பேர்வழியா மாறிடுறீங்களே எப்படி?"

"எனக்குக் கூச்ச சுபாவம் ஜாஸ்தி. நிகழ்ச்சிக்காக அதையெல்லாம் மூட்டை கட்டிவெச்சேன். இப்போ நிஜமாகவே அரட்டை அதிகமாயிடுச்சு. கடி ஜோக்லே என்னை யாரும் அடிச்சுக்க முடியாது. தெரியுமா?"

"கடவுளே நான் கொஞ்சம் தள்ளியே நிக்கிறேன்." - என்றபடி நாம் பின்வாங்க,

"பயப்படாதீங்க சக்கரம். ரொம்ப எக்ஸ்ட்ரீமா கடிக்கமாட்டேன். ப்ராமிஸ்.."

"சரிசரி.. விஷயத்துக்கு வர்றேன். உங்களுக்கு மட்டும்தான். கொஸ்டீன் ரவுண்ட், ஜி.கே. ரவுண்ட், மீடியா ரவுண்ட்னு நடத்த தெரியுமா.. இப்போ நான் நடத்தப் போறேன் பாருங்க. அதுலே கலந்துக்கப் போறது நீங்கதான். நான் ரெடி; நீங்க ரெடியா" என்று

சக்கரம் தொண்டையைக் கம்பீரமாக கனைத்துக் கொள்ள, சர்மிலி ஜுஜுபி என்பதுபோல் அலட்சியமாய் ஒரு ஜிலேபி பார்வை பார்க்க... டாபிகல் ரவுண்ட் தொடங்கியது. "நம்ம புதிய முதல்வர் பன்னீர்செல்வம் ஜெயலலிதாவுக்குக் கடிதம் எழுதினா எப்படித் தொடங்குவார்?" - சக்கரம்.

"அன்புள்ள அம்மாவுக்கு... சரியா..?" - சர்மிலி.

"ரொம்ப சந்தோஷப்படாதீங்க. அடுத்த கேள்வியைக் கவனிங்க. இந்த தபா காவிரித் தண்ணீர் வராமல் கஷ்டப்பட்ட தஞ்சாவூர் விவசாயிக்குக் கடிதம் எழுதினா எப்படித் தொடங்குவார்?"



"அய்யோ... தெரியலையே.. சீக்கிரம் சொல்லுங்க சக்கரம்.."

"நிலம் நிலமறிய ஆவல்... ஹா.. ஹா.. ஹா.. எப்படி?" - சர்மிலி சறுக்கியதில் சக்கரத்திற்குச் சந்தோஷம்.

"சிரிப்பு கொஞ்சம் மிச்சம் இருக்கட்டும் இப்போ நான் கேக்கறேன்."

"என்ன இது விதியை மீறி கேட்குறீங்க. எனக்குக் கேட்க மட்டும்தான் தெரியும்." - சக்கரம் முகத்தில் கொஞ்சம் கிலி.

"விதின்னு சொன்னது உங்க தலைவிதி தான்னு எனக்கு நல்லா புரிஞ்சு போச்சு. இப்போ என்னோட கேள்வி, பயில்வான் கடிதம் எழுதினா எப்படித் தொடங்குவார்?"

"பிஸ்கோத்து இது தெரியாதா? பலம் பலமறிய ஆவல்.."

"அடப்பாவி! சரியா சொல்லிட்டியே. சரி அடுத்த கேள்வி கேக்கறேன். செந்திலுக்குக் கவுண்டமணி எழுதினா எப்படித் தொடங்குவார்?"

"சாரி. ஐடியாவே இல்லை."

"மிதிப்பிற்குரிய... எப்படி நம்ம மீடியா அறிவு?"

"சூப்பர்!"

"வீரப்பனைத் தேடி களைச்சுப் போன எல்லைப் பாதுகாப்புப் படை திரும்பிப் போயிடுச்சு, கேள்விப்பட்டீங்களா?"

"ஆமா அதுக்குத் தேவாரம்தானே வருத்தப்படணும்?"

"இப்போ இந்த மாதிரி பாரா மிலிட்டரி அதிரடிப்படை எதுவும் இல்லாமல் பால், பழம் இருந்தா வீரப்பனைப் பிடிச்சுடலாம். எப்படின்னு தெரியுமா?"

"சாரி கேள்வி ரொம்ப கஷ்டமா இருக்கு. நீயே சொல்லித் தொலை..."

"நக்கீரன் கோ'பால்', 'பழ.' நெடுமாறன் இரண்டுபேரும் காட்டுக்குப் போகணும்..."

"கடவுளே... என்னைக் காப்பாத்து..." என்று சர்மிலி கைகளைக் கூப்பி குழந்தை மாதிரி பிரார்த்திக்க...

சக்கரம் அடுத்த கேள்வியைத் தொடுத்தார்.

"வீரப்பனுக்குப் பிடிச்ச சங்கீதம் எது?"

"கர்நாடக சங்கீதம்"

"ஆ...ஆ.. எப்படி சர்மிலி இத்தனைத் துல்லியமா பதில் தெரிஞ்சுது?"



"ஹா.. எல்லாம் நம்ம டேலண்ட்.." சட்டைக் காலரை ஸ்டைலாய் இழுத்துவிட்டுக் கொள்வது போல... புடவை முந்தானையை எஜமான் ஸ்டைலில் சுழற்றித் தோளில் போட்டுக் கொள்கிறார்.

"இந்த காந்தி ஜெயந்திக்கு என்ன செஞ்சீங்க?"

"சிக்கனைத் தியாகம் பண்ணிட்டு தக்காளி சாதம் சாப்பிட்டேன்."

"வெரிகுட்.."

"அதிருக்கட்டும் சக்கரம்... காந்திஜிக்கும் கும்ப்ளேவுக்கும் என்ன ஒற்றுமை?"

"தெரியலியே?"

"இரண்டு பேருமே ஸ்பின்னர்ஸ்... காந்திக்கு ராட்டை, கும்ப்ளேவுக்குக் கிரிக்கெட் பந்து."

"சரி சரி. கிரிக்கெட் பக்கம் வந்துட்டதாலே இப்போ நாம் கிரிக்கெட் ரவுண்டுக்குப் போறோம்." - சக்கரம் இரண்டாவது கட்ட தாக்குதலைத் தொடங்கினார்.

"கிரிக்கெட் வீரர்லேயே சிறந்த அறிவாளி யார்?"

"இதுகூடத் தெரியாதா பிரைன் லாரா தான்."



"ஆஆ.. என்னடா இது சோதனை. (கொஞ்சம் கடுகடுப்புடன்) எங்க தாத்தா வோட பல் சச்சின் மாதிரி, ஏன் தெரியுமா?"

"அய்யோ தெரியலையே?"

"நல்ல ஆடுதே!!! சரி போகட்டும் காந்திக்குப் பிடிச்ச கிரகம் எது?"

"பூமி!"

"அதான் இல்லே... சத்தியாகிரகம்!"

"அய்யாசாமி. அடுத்த ரவுண்டுக்கு போங்க. யாரு விக்கெட்டுன்னு பார்த்துடலாம்."

"உங்களுக்குப் பிடிச்ச மீடியா ரவுண்ட். மிஸ் சர்மிலி ரெடியா?" என்றபடி சக்கரம் கேள்வியை வீசினார்.

"உலகத்திலேயே பெரிய எஞ்ஜினீயர் யார்?"

"இந்தக் கேள்விக்கும் மீடியாவுக்கும் என்ன சம்பந்தம்?"

"ஏன் இல்லே. அந்த எஞ்ஜினீயர் நடிகர் அஜீத்!"

"எப்படி?"

"அவர்தானே சோலையிலேயே வீடு கட்டுவேன்னாரு."

"இப்போ நான் கேக்குறேன்.. கழுதையை வெச்சுப் படம் எடுத்தால் என்ன டைட்டில் வைப்பாங்க?"

"சுகமான சுமைகள்."

"ரொம்ப தப்பு. கனைத்தேன் வந்தாய்."

"தப்பிச்சுட்டீங்க. இப்போ அடுத்த கேள்வி. ஒரு தியேட்டரில் எலித்தொல்லையைக் கட்டுப்படுத்தவே முடியலே ஏன் தெரியுமா?"

"அது எலிகண்ட் தியேட்டர்."

"அதான் இல்லே அந்த தியேட்டர்லே மசாலாப் படம்தான் அதிகமாப் போடுவாங்க" - சக்கரத்தின் காரமான கடியில் சர்மிலி ஒருமுறை தும்மினார். அடுத்து பொது அறிவுச் சுற்றுக்குள் வந்தார்கள். கேள்வியைத் தொடங்கியவர் சர்மிலி.

"கன்னியாகுமரியில் அதிகம் கிடைக்கிற காபி எது?"

"கேரளத்தில் விளையறதுதான்.."

"சாரி மிஸ்டர் சக்கரம். 'சன்ரைஸ்' காபி."

"தாயே. இப்போ நான் கேக்கலாமா..? (கெஞ்சியபடி) பூமிக்குப் புவி ஈர்ப்பு விசை இருக்குன்னு எப்படித் தெரிந்து கொள்வது?"

"ரொம்ப ஈஸி. தென்னை மரத்துல பாதி மரம் ஏறி, பிறகு கையைவிட்டா தெரிஞ்சுக்கலாம்."

"மன்னிச்சுடுங்க சர்மிலி; தெரியாமல் இப்படியொரு கேள்வியைக் கேட்டுட்டேன்." - சக்கரம் வருத்தத்தோடு அடுத்த கேள்வியை அமைதியாகக் கேட்டார்.

"குளிர்காலத்தில் நடுங்காத பூச்சி ஒண்ணு இருக்கு?"

"கம்பளிப் பூச்சி..?"

"ஆஹா... எத்தனை துல்லியம்!"

"மிஸ்டர் சக்கரம் நீங்க இதுவரையும் எத்தனை ஜோக்ஸ் சொன்னீங்க. ஆனா ஜோக்ஸ் எதுவுமே சிரிக்கிற மாதிரி இல்லையே?"

"ஜோக்ஸ் எப்படி மேடம் சிரிக்கும். நாமதான் சிரிக்கணும்."

(சக்கரத்திற்குக் கடிகளை வாரி வழங்கிய வள்ளல் வில்லிவாக்கம் அழகு சங்கர்)

அட்டை, வண்ணப் படங்கள் : ஸ்ரீஹரி.

கல்கி - பி.எம்.சில்க்ஸ்
இணைந்து வழங்கும்
பட்டுப்புடைவை
பரிசுப் போட்டி முடிவு - 8

எத்தனை 'வை', எத்தனை 'ரம்' என்று கண்டுபிடிக்கச் சொல்லி யிருந்தோம்.

ஆறு 'வை', நான்கு 'ரம்' என்று சரியாக எழுதியிருந்த பலரில் குலுக்கல் முறையில் தேர்ந்தெடுக்கப்பட்டவர்.

பி. ரேணுகா,
21/5, 10வது தெரு,
பி.வி. நகர், நங்கநல்லூர்,
சென்னை - 114.

"ஏமாற்றங்களைத் தாங்க முடியாது!"

திருமாவளவன்



எதிரும் புதிருமாக இருந்த விடுதலை சிறுத்தைகளும், பா.ம.கவும் ஒரே கூட்டணியில் நீடிப்பதை எல்லோரும் வரவேற்ற நிலையில், திடீரென்று வெட்டிக் கொண்டு தனியாகக் களம் இறங்கிவிட்டார் திருமாவளவன். ஏனிந்த திடீர் மாற்றம்? அவரிடமே கேட்டோம்:

தி.மு.க கூட்டணியில் தொடர முடியாமல் போனதற்கு பா.ம.கதான் காரணமா?

பா.ம.கவையோ வேறு யாரையோ காரணமாகச் சொல்ல விரும்பவில்லை. அதற்கு நாங்களேதான் காரணம் என்பதை வலியுறுத்திச் சொல்ல விரும்புகிறேன். எங்கள் இயக்கத்துப் பிரமுகர்களுக்கு உள்ளாட்சியில் பரவலாகப் பொறுப்பு வகிக்கும் வாய்ப்பைப் பெற்றுத் தரும் கடமை எனக்குள்ளது. தாழ்த்தப்பட்ட மக்களுக்கு உண்மையான அதிகாரப் பகிர்வு என்பது உள்ளாட்சி நிர்வாகத்தில் பங்கு பெறுவதன் மூலம்தான் சாத்தியப்படும் என்பதை நாங்கள் உணர்ந்திருக்கிறோம். தவிர எங்கள் வலிமை என்ன என்று தெரிந்துகொள்ளக்கூடிய ஒரு நல்ல வாய்ப்பு உள்ளாட்சித் தேர்தலில் தனித்துப் போட்டியிடுவதன் மூலம்தான் கிடைக்கும்.

ஒரு கட்டத்தில் தி.மு.க கூட்டணியில் தொடரும் வாய்ப்பு இருந்தது போலத் தெரிந்ததே; நிலைமை மாறியது எப்படி?

"டாக்டர் ராமதாஸ், எங்களோடு கூட்டணி அமைப்பதற்கும், பேச்சு வார்த்தைக்கும் தயார் என்று சொன்ன பிறகும் நாங்கள் விலகி ஓடினால் "இரு சமூகத்து மக்களிடையே உள்ள பிளவை நிரந்தரமாக்கி அரசியல் ஆதாயம் தேடுகிறார்கள் சிறுத்தைகள்" என்று குற்றச்சாட்டு வந்திருக்கும். எனவே எங்களுக்கும் பா.ம.க.வுக்கும் நேரடி தொடர்பில்லாத நிலையில் அந்தக் கட்சியுடன் தி.மு.க. கூட்டணி அமைத்தபோது நாங்கள் எங்கள் நிலையிலேயே தொடர நினைத்தோம். ஆனால், மனப்புழுக்கத்தைத் தாங்கிய எங்கள் தோழர்கள் ஏமாற்றங்களைத் தாங்கக்

கூடிய நிலையில் இல்லை. பலவீனமான பா.ஜ.கவுக்குத் தாராளமாக இடங்கள்; பரவலாக உள்ள எங்களுக்கு ஒன்றிரண்டு இடங்கள். என்ன நியாயம்? இணங்கிப் போகலாம், வணங்கி நடக்கலாம்; ஒடுங்கிப் போக முடியாது. இரண்டு இடங்களில் எங்களுக்குத் தோள் கொடுத்துவிட்டு நூற்றுக்கணக்கான இடங்களில் எங்களைத் தோள் கொடுக்கச் சொல்வது சரிதானா? எனவேதான் இந்த உள்ளாட்சித் தேர்தலில் யாரையும் தூக்கிச் சுமக்கக் கூடாது என்று முடிவு செய்தோம்.

ராமதாசும் நீங்களும் இணைந்து செயல்பட்டால் இரு சமூகத்து மக்களும் நல்லிணக்கத்துடன் வாழும் நிலை வருமே?

ராமதாசுக்கும் எனக்கும் தனிப்பட்ட விரோதம் ஏதுமில்லை. உண்மையில் பார்க்கப் போனால், தமிழ் தேசியம், மொழிக் கொள்கை, சமூக நீதி, ஈழப்பிரச்னை, பெரியார், அம்பேத்கர் கருத்துக்கள் போன்றவற்றில் எங்களுக்கும் பா.ம.கவுக்கும் நிறையவே ஒற்றுமை உண்டு. கலைஞர், மறைந்த மூப்பனார் ஆகியோரைவிட, ராமதாஸோடு நீண்ட காலம் தொடர்பும் உண்டு. டாக்டரிடம் நாங்கள் வெறுக்கும் விஷயம் ஒன்று உண்டென்றால் அது, எங்கள் சேரி மக்களின் குடிசைகளைக் கொளுத்துபவர்களை, அவர் கண்டித்துத் திருத்தாமல் ஊக்கப்படுத்துவதுதான். இந்தச் சேரி எரிப்புக்கு எதிராக அவரது மக்களைத் திருத்தும் பெரிய பொறுப்பு அவருக்கிருக்கிறது. அந்த முயற்சியில் அவர் வெற்றி பெறுவாரேயானால் ஒரே தளத்தில் வாழும் இரு சமூக மக்களிடையேயும் நல்லிணக்கம் வரும். எங்கள் கைகளும் இணையும்.

தி.மு.கவோடு நட்பு தொடரும் என்று சொல்லும் நீங்கள் தி.மு.க வேட்பாளர்களை எதிர்த்து உங்கள் வேட்பாளர்களை நிறுத்துவது ஏன்?

நான் ஏற்கெனவே சொன்னது போல் தி.மு.க மீது எங்களுக்கு எந்த கசப்புணர்வும் இல்லை. நட்பு தொடர்கிறது. ஆனால் தேர்தல் உடன்பாடு கிடையாது; தனித்துப் போட்டி என்று வந்த பிறகு விட்டுக் கொடுத்துப் போவதில் என்ன அர்த்தம்!

சந்திப்பு: **தில்லப்பா**
படம்: **ராஜன்**

உயிர் கொடுத்த தாலி!

தாலி என்றதுமே ஆயிரத்தெட்டு சென்டிமென்ட் பேசும் நம்மூர் கிராமத்துப் பெண்களுக்கு மத்தியில் தாலியை அறுத்து ஒரு உயிரைக் காப்பாற்றியிருக்கிறார் குன்றங்குடி அரு



• கவிதா

கிலுள்ள நேமம் கிராமத்தைச் சேர்ந்த பழனியம்மாள்.

“கவிதாவைப் பாம்பு கடிச்சதும் உடனேயே சுற்றிப் பார்த்தேன். கயிறு எதுவும் கிடைக்கவில்லை. படக்குன்னு என் தாலியை அவிழ்த்து கையிலே விஷம் ஏற விடாமல் இறுக்கிக் கட்டி விட்டு, புல் அறுக்கிற அரிவாளால் கடிபட்ட இடத்தை அறுத்துவிட்டேன். அக்கம் பக்கத்தில் உள்ளவங்க அப்புறமா ஓடி வந்து ஆஸ்பத்திரிக்குக் கூட்டிட்டுப் போனாங்க... தாலி இல்லாமல் வெறும் கழுத்தோடதான் நான் வீட்டுக்குப் போனேன்... ஒரு உயிரைக் காப்பாத்த இதைக்கூட செய்யாட்டா எப்படி?” என்கிறார் பழனியம்மாள்.

நேமம் கிராமத்தில் உள்ள மக்கள், தங்கள் வீட்டுக் கால் நடைகளுக்குத் தினந்தோறும் பக்கத்திலிருக்கும் பழத்தோட்டத்திலிருந்து புல் அறுத்துச் செல்வது வழக்கம். அன்றும் அப்படித்தான் பழனியம்மாளும், கவிதாவும் புல் அறுத்துக் கொண்டிருக்கும்போது கவிதா பாம்பு கடித்து அலற... வலது கையில் இரத்தம் சொட்டியபடி நின்ற கவிதாவையும், ஓடி ஒளிந்த பாம்பையும் பார்த்த பழனியம்மாளுக்குச் சட்டென்று தோன்றிய ஐடியாதான் இது.

உயிருக்குப் போராடிய கவிதா உயிர் பெற்று பிழைத்துக் கொள்ள ஊரின் பாராட்டு மழையில் இப்போது பழனியம்மாள்!

“மஞ்சள் கயிற்றில் இருந்த தங்கத் தாலியைக் கூட கழற்ற மனம் வரலை. அந்த நேரத்தில் விஷம் ஏறிவிட்டால் என்ன செய்யறது? அதனாலே அப்படியே கட்டினேன். வெறும் கழுத்தோட வீட்டிற்கு வந்த என் கணவர் ஏற்கெனவே விஷயத்தைக் கேள்விப் பட்டிருந்தார். என்னைப் பார்த்து அவர் சொன்ன வார்த்தை... ‘தாலியை நீயாகக் கேட்க வேண்டாம். அவர்கள் கொடுக்கிறபோது வாங்கிக் கொள்ளலாம்’ என்பது தான். காரைக்குடி ஆஸ்பத்திரிக்குச் சாயங்காலம் கவிதாவைப் பார்க்கப் போனபோது டாக்டர் என்னை வரச் சொல்லி பாராட்டி விட்டுத் தாலியைக் கொடுத்தார். அப்புறமாக நானே கட்டிக்கொண்டேன்” என்கிறார் பழனியம்மாள்.

• பழனியம்மாள்



“அந்த இக்கட்டான நேரத்தில் தாலியை அவிழ்த்துக் கட்டணும்னு யோசனை என் பெண்டாட்டிக்கு வந்தது பாருங்க. அதை நினைச்சு நான் சந்தோஷப்படுறேன். ஒரு உயிரைக் காப்பாற்றுவது என்பது சாதாரண விஷயமா?” என்கிறார் பழனியம்மாளின் கணவர் பெருமாள்.



• பெருமாள்

“இன்னைக்கு உயிரோட இருந்து உங்களோட பேசிக் கொண்டிருக்கேன்னா அது பழனியக்கா போட்ட பிச்சை... என் வாழ்நாளில் என்னைக்குமே அவங்களை மறக்க முடியாது” என்று கண் கலங்குகிறார் கவிதா!

— கி. சிங்காரவடிவேல்

வானமும் வையமும் வளர்ந்த வான்புகழ்

ஜெயகாந்தன் நாவல்கள்

முன் வெளியீட்டுத் திட்டம் !

14 நாவல்கள் – 4000 பக்கங்கள் – 5 தொகுதிகள் – விலை ரூ.1200

சலுகை விலை ரூ.800 மட்டுமே



1. வாழ்க்கை அழைக்கிறது
2. உன்னைப் போல் ஒருவன்
3. பாரீசுக்குப் போ
4. ஒரு மனிதன் ஒரு வீடு ஒரு உலகம்.
5. சில நேரங்களில் சில மனிதர்கள்
6. கங்கை எங்கே போகிறாள் ?
7. ஜய ஜய சங்கர
8. ஈஸ்வர அல்லா தேரே நாம்
9. ஒரு நடிகை நாடகம் பார்க்கிறாள்
10. இந்த நேரத்தில் இவள்
11. பாட்டிமார்களும் பேத்திமார்களும்
12. அப்புவுக்கு அப்பா சொன்ன கதைகள்
13. சுந்தர காண்டம்
14. காற்று வெளியினிலே

இந்த 14 நாவல்களும் உயர்தர மேப்லித்தோ தாளில் 4000 பக்கங்களில் (டெம்மி சைஸ்) சர்வதேச தரம் வாய்ந்த கெட்டியான கட்டமைப்பில் 5 தொகுதிகளாக வெளிவருகிறது.

விலை ரூ.1200

சலுகை விலை ரூ.800 மட்டுமே

முன்பணம் செலுத்த கடைசி நாள்
5.11.2001

புத்தகம் வெளிவரும் நாள்
1.12.2001

தபாலில் பெற : சலுகை விலையான ரூ.800 இல் ரூ.400 யினை மட்டும் M.O அல்லது D.D. மூலம் (D.D. - Varthamanan Pathippagam என்ற பெயரில் சென்னையில் மாற்றத்தக்கதாக) 5.11.2001 க்குள் அனுப்பிப் பதிவு செய்து கொள்க. 1.12.2001 லிருந்து பணம் வந்த வரிசைப்படி 5 தொகுதிகளும் V.P.P.யில் அனுப்பப்படும். மீதித் தொகை ரூ.400 தபால் மற்றும் கட்டுச் செலவு ரூ.100 சேர்த்து ரூ.500 மட்டும் தபால்காரரிடம் செலுத்தி 5 தொகுதிகளையும் பெற்றுக் கொள்ளலாம்.


நேரில் பெற : எமது அலுவலகத்தில் ரூ.400 மட்டும் செலுத்தி (5.11.2001 க்குள்) முன் பதிவு செய்து ரசீது பெற்றுக் கொள்க. ரசீதில் குறித்த தேதியில் மீதித் தொகை ரூ.400 மட்டும் செலுத்தி 5 தொகுதிகளையும் பெற்றுக் கொள்ளலாம்.

நேரம் : காலை 10.00 மணி முதல் இரவு 8.00 மணி வரை. ஞாயிறு விடுமுறை.

வர்த்தமானன் பதிப்பகம்
15, சரோஜினி தெரு, தியாகராயநகர்,
சென்னை -17 ✆ : 4350561
(உஸ்மான் சாலை - கீதாஞ்சலி ஹோட்டல் அருகில்)

முக்கிய குறிப்பு : Cheque (Local உள்பட) ஏற்கப் படமாட்டாது. M.O/D.D அனுப்புவோர்க்கு நூல்கள் தபாலில்தான் அனுப்பப்படும். நேரில் தரப்படமாட்டாது. ஒரே தடவையில் சலுகை விலையினைச் செலுத்துவோர்க்குச் சிறப்புச் சலுகை எதுவும் கிடையாது.

ADVT





2001 அக்டோபர் 14
விஷு புரட்டாசி 28
மலர் : 60
இதழ் : 11

கல்கி

தமிழ்த்திரு நாடுதன்னைப் பெற்ற
தாயென்று கும்பிடடி பாப்பா - பாரதியார்.



காஷ்மீர் பயங்கரம் - அமெரிக்காவுக்கு எச்சரிக்கை!


ஸ்ரீநகர் சட்டமன்ற வளாகத்தில் நடந்த கோர சம்பவம் இந்திய அரசுக்கு மேலும் ஒரு சவால் என்றாலும் வாஷிங்டனைப் பார்த்தும் பயங்கரவாதம் எள்ளி நகையாடுவது போல்தான் அமைந்தது.

பின் லேடன் சார்ந்த பயங்கரவாத அமைப்புகளைக் கண்டித்தும் எச்சரித்தும் பொருளாதார ரீதியாக நெருக்கடிகள் ஏற்படுத்தியும் கப்பல்களையும், போர் விமானங்களையும் தயார் நிலையில் வைத்து அச்சுறுத்தியும் பார்த்துவிட்டது, அமெரிக்க அரசு.

'அவ்வளவையும் மீறி உலகில் ஏதேனும் ஒரு பகுதியில் எங்கள் கைவரிசையைக் காட்டிக் கொண்டிருப்போம்' என்பதுபோல் செயல்பட்டுள்ளனர் பயங்கரவாதிகள். செப்டெம்பர் 11 தாக்குதலைப் போலவே ஸ்ரீநகர் தாக்குதலும் அமைந்ததானது ஒரே இயக்கத்தின் நாசவேலைதான் இந்தப் பயங்கரங்கள் என்று காட்டிக் கொடுக்கிறது.

உலகெங்கும் கிளைபரப்பி பரவிக்கிடக்கும் இப்பயங்கரவாதத்துக்கு நமது அண்டை நாடு அடைக்கலமும் புகலிடமும் தந்து வருவதை இனியேனும் அமெரிக்கா போன்ற வல்லரசுகள் உணர்ந்து செயல்பட வேண்டும்.

காஷ்மீர்ப் பிரச்னையானது இரு நாடுகளுக்கிடையேயான சிக்கல் (bilateral issue).



அதில் மூன்றாவது நாடான நாங்கள் தலையிட முடியாது என்று அமெரிக்காவும், வேறு நாடு தலையிடலாகாது என்று இந்தியாவும் இத்தனை காலமாகப் பேசி வந்ததெல்லாம் அர்த்தமற்றதாகியிருக்கிறது.

காஷ்மீர்ப் பிரச்னை இந்தியப் பிரிவினையினால் எழுந்த பிரச்னைதான். ஆனால் காலப்போக்கில் அது பிரிவினைப் பிரச்னை என்ற நிலையிலிருந்து பயங்கரவாதப் பிரச்னை என்கிற பரிணாமத்துக்கு வளர்ந்து விட்டது.

காஷ்மீரில் இயங்கும் பயங்கரவாதிகள் இந்தியாவுக்கு மட்டுமே எதிரிகள் அல்ல. அவர்கள் அமைதியின் எதிரிகள்; உலக நலனின் எதிரிகள்; மனித நேயத்தின், ஜனநாயகத்தின் எதிரிகள் என்பது அழுத்தமாக நிரூபணமாகியிருக்கிறது.

உலக வர்த்தக மையக் கட்டடங்கள் தாக்கப்பட்டதைத் தொடர்ந்து, அதற்குக் காரண மான பயங்கரவாதிகளை எதிர்த்து ஒன்று சேரும்படி அமெரிக்கா உலக நாடுகளுக்கெல்லாம் அரைகூவல் விடுத்தது. பாகிஸ்தான் உள்பட பல நாடுகளும் அமெரிக்காவுக்கு ஆதரவுக் குரல் கொடுத்தன. ஆனால், பாகிஸ்தான் விஷயத்தில் எச்சரிக்கை தேவை. நல்ல பெயர் தட்டிச் செல்லும் அதன் திட்டத்தில் உள்நோக்கும் சூதும் வாதும் நிறையவே உண்டு.

பாகிஸ்தான் நமது அண்டை நாடாகவும் காஷ்மீர் எல்லைத் தகராறினால் நம்மிடம் விரோதம் பாராட்டும் நாடாகவும் அமைந்துள்ளது.

பாகிஸ்தானால் தனக்கு எவ்வித பிரச்னையுமில்லை என்று ஒதுங்கியிருந்த அமெரிக்க வல்லரசு இனியும் அவ்வாறு இருக்க முடியாது. காஷ்மீரில் பயங்கரவாதம் வளர்ந்து தழைக்க, பாகிஸ்தான் காரணமாக இருந்ததை ஒப்புக் கொண்டுதான் ஆக வேண்டும். அந்த பயங்கரவாதத்துக்கு பாகிஸ்தான் புகலிடம் அளித்து, ஊக்குவித்து வருவதற்கு ஏராளமான சாட்சியங்கள் உள்ளன. அவை நாள்தோறும் தொலைக்காட்சி செய்திகளிலும் வீடியோ படங்களாக இடம் பெறுகின்றன. பாகிஸ்தானின் இந்த இரட்டை வேடம்



இந்தியாவுக்கு மட்டுமல்ல... உலகுக்கே ஆபத்து என்று உணர்ந்து அமெரிக்கா கடுமையான நடவடிக்கை எடுக்க வேண்டும்.

ஸ்ரீநகர் தாக்குதலின்போது நமது அயலுறவுத் துறை அமைச்சர் ஜஸ்வந்த் சிங் அமெரிக்காவில் இருந்ததும், அச்சம்பவத்தினைத் தொடர்ந்து அமெரிக்க அரசு அவருக்கு ஆதரவை உத்தரவாதம் செய்ததும் குறிப்பிடத்தக்க முன்னேற்றங்கள். அமெரிக்காவைத் தொடர்ந்து ஜஸ்வந்த் சிங் பிரிட்டன் செல்ல, அங்கும் ஆதரவுக் கரம் நீண்டிருக்கிறது.

'காஷ்மீரில் காணப்படும் பயங்கரவாதத்தை எதிர்ப்பதும் எங்கள் செயல்திட்டத்தில் சேர்க்கப்படுகிறது' என்று அமெரிக்க செக்ரடரி ஆஃப் ஸ்டேட், ஜெனரல் காலின் பாவெல் அறிக்கை விடுத்துள்ளார். எனினும் அமெரிக்க அரசு நேரடியாக பாகிஸ்தானை எச்சரிக்கவோ தாக்கிப் பேசவோ தயாராக இல்லை.

ஸ்ரீநகரில் சட்டமன்றத் தாக்குதலைத் தொடர்ந்து, "பாகிஸ்தானுக்கு எதிராக உடனடியாகப் போர் அறிவிப்புச் செய்யுங்கள்." என்று முதல்வர் ஃபாரூக் அப்துல்லா உணர்ச்சி வசப்பட்டுக் கோருவதில் ஆச்சரியமில்லை.

காஷ்மீரில் தழைக்கும் பயங்கரவாதத்துக்குப் பாகிஸ்தானே ஊற்றுக்கண் என்று வல்லரசுகள் மட்டும் ஏற்றுச் செயல்பட்டால் ஃபாரூக் கோரும் யுத்தத்துக்கு அவசியம் இராது.

பயங்கரவாதத்துக்கு எதிராகப் பொருளாதார ரீதியில் போர் தொடுக்க அமெரிக்க தலைமையில் பல நாடுகள் முன் வந்துள்ளன. ஆனால் பயங்கரவாதப் பிரிவுகள் பலவும் தங்கள் பெயர், விலாசத்துடன் வங்கிக் கணக்குகளையும் அடிக்கடி மாற்றிக்கொண்டு, போய்விடுகின்றன. எனவே இந்த நடவடிக்கை மட்டும் போதாது. பயங்கரவாதத்துக்கு நேரடியாகவோ மறைமுகமாகவோ ஆதரவு தரும் நாடுகளை இனம் கண்டு அவற்றுக்கு எச்சரிக்கை விடுக்க வேண்டும். அப்படிச் செய்தால் அதில் முதலிடம் பெறுவது பாகிஸ்தானாகத்தான் இருக்க முடியும். ○

✉ 'புஷ்'க்கு வழி காட்டும் பீமா' தலையங்கம் படித்தேன். அமெரிக்காவுக்கு நீங்கள் கொடுத்திருக்கும் உபதேசம் எந்த அளவுக்கு நடைமுறைக்குச் சாத்தியமானது



நெஞ்சில் வெயில்; கண்ணில் மழை!

என்பதுதான் எனக்குப் புரியவில்லை.
பாண்டிச்சேரி, எஸ்.ராமையா.

✉ மெட்ராஸ் பாஷையில் பேசி நடிப்பதில் மறைந்த சிரிப்பு நடிகர் சந்திரபாபுவை மிஞ்சக் கூடிய ஒரு நடிகர் பூமியில் இதுவரை பிறந்ததில்லை என்று ரிமோட்டில் வினோத் கூறியது நூற்றுக்கு நூறு உண்மை.
சென்னை – 41,
கன்னி. சுப்பிரமணியன்.

✉ அமெரிக்கா மீதான தீவிரவாதிகள் தாக்குதலும் அதைத் தொடர்ந்து அமெரிக்காவின் நடவடிக்கைகளும் குறித்து பல இதழ்களும் பலவாறு எழுதினாலும், தீவிரவாதத்தை எதிர்க்கும் அதே நேரத்தில் அப்பாவிகள் எந்நிலையிலும் பாதிக்கப்படக்கூடாது என்ற மனித நேய அடிப்படையில் உங்கள் கருத்தை வெளிப்படையாக தெரிவித்திருப்பது மிகவும் அருமை.
ஊத்தங்கரை, கவி. செங்குட்டுவன்.

✉ எந்தவித பிரதிப்பலனையும் எதிர்பார்க்காமல் 'இரத்தம் கொடுப்பதில் செஞ்சுரி போட்ட' ஸ்ரீரங்கத்தைச் சேர்ந்த ஸ்ரீனிவாசதாத்தம் நம் பாராட்டுக்குரியவர்.
சென்னை – 73, கே.வி. ராமன்.

✉ '74ல் வெயில்; 63ல் மழை!' கட்டுரையைப் படித்த எங்களுக்கு நெஞ்சில் வெயில்; கண்ணில் மழை!.
மணப்பாறை, ஆனந்தி ராஜா.

✉ கலக்கல்பதியை அடக்கபதியென்றும் அழைக்கலாம். அந்த அளவுக்குப் பேட்டியின் வார்த்தையில் அடக்க பிரதிபலிப்பு!
திருச்சி – 14,
இரா. திலீப்.

✉ 'ஒட்டத்துக்குக் குட்பை' கட்டுரையைப் படித்து வியந்து போனேன். மைக்கேல் ஜான்சன் ஓய்வு, உலக விளையாட்டு ரசிகர்களுக்கு உண்மையில் அதிர்ச்சியே!
நல்லூர், அணக்குடி சு. சம்பத்.

✉ 'விஸிட் டு திருப்பதி' கட்டுரையில் உள்ள சில தவறுகளைச் சுட்டிக் காட்ட விரும்புகிறோம்.

1) அங்கப் பிரதட்சணம் செய்ய முழுத் தடை விதிக்கப்படவில்லை.

2) மூலவர் உயரத்தை இதுவரை யாரும் அளந்ததில்லை. 9 அடி என்பது கட்டுரையாசிரியரின் யூகமாக இருக்கலாம்.

3) அனந்தாழ்வாரால் பயன்படுத்தப்பட்டது இரும்பு கடப்பாரை, கல் அல்ல!


திருப்பதி, டாக்டர் என்.எஸ். ராமமூர்த்தி,
(ஆசிரியர்– 'சப்தகிரி')

✉ திருப்பதியில் 'ஜருகண்டி, ஜருகண்டி' என்று தள்ளி விடும்போது இறைவனைத் தவிர அவர் என்னென்ன அணிகலன்கள் அணிந்திருக்கிறார் என்பதைப் பார்க்க முடிவதில்லை. அவற்றை புரட்டாசி ஸ்பெஷலில் தெரிந்து கொண்டோம்.
சென்னை – 92, என். ப்ரியா.



கர்ப்பத்திற்கு பிறகு,
ஸ்ட்ரெச் மார்க்குகள்
உங்களை இவ்வாறு
விளங்கச் செய்கிறது... ஸ்ட்ரெச்நில் கொண்டு
நீங்கள் அவைகளைத்
தவிர்த்தாலே தவிர
• ஸ்ட்ரெச்மார்க் என்றாலே, உங்கள் சருமத்தின் மீது விகாரமான, நிரந்தர தழும்புகள்.
• கர்ப்பத்தின் நான்காவது மாதத்திலிருந்து, பிரசவம் வரை, தினமும் இருமுறை ஸ்ட்ரெச்நில் தடவுங்கள்.
• அரிப்பை கட்டுப்படுத்தி, எலாஸ்டிசிடியை அதிகரிக்க, ஸ்ட்ரெச்நில்லில் ஆறு இயற்கை உட்பொருட்கள் உள்ளன.
• ஸ்ட்ரெச்நில் உங்களுக்கும் உங்கள் குழந்தைக்கும் பாதுகாப்பானது என்று மருத்துவக் குறிப்பீடுகள் தெரிவிக்கின்றன.
SKIN CLINIQ
STRETCH NIL
CLINICALLY PROVEN
STRETCH NIL
ஸ்ட்ரெச் மார்க்குகளைத் தவிர்ப்பதற்கான ஹெர்பல் லோஷன்
தாயாகப் போகிறவர்களின் சருமம் என்றும் இளமையுடன் விளங்க.
எச்சரிக்கை: ஒரு முறை ஸ்ட்ரெச் மார்க் வந்துவிட்டால், அதை குணப்படுத்த முடியாது.
குஃபிக் பையோசயன்ஸஸ் லிமிடெட் வழங்கும் ஒரு தரம்வாய்ந்த தயாரிப்பு.

'அவுட்'டாக்கிய சேனல்

அமெரிக்கத் தாக்குதலை எதிர்பார்த்து ஏமாந்ததாலா...? 'சிமி'யை எதிர்த்துக் கொண்டிருந்தவர்கள் தடைவிதித்தபின், திடீரென்று பல்டி அடித்து, எதிர்பாராத விதமான ஒரு அனுதாப அலையை உருவாக்கியிருப்பதாலா...? இணையவே இணையாது என்று எதிர்பார்க்கப்பட்ட பிஜேபியும் சிவசேனையும், உள்ளாட்சித் தேர்தல்களுக்காக கைகோத்துக் கொண்டதாலா...? எதிர்பார்த்த இண்டர்நேஷனல் ஃபிலிம் ஃபெஸ்டிவல் ஆஃப் இந்தியா, எதிர்பாராமல் கான்சலாகிவிட்டதாலா... எதுவோ ஒன்று... மீடியா 'மூட் அவுட்' ஆகிக்கிடந்த வேளையில், திலீப்குமாருக்கு (லோனாவாலாவில், உலாப்போன இடத்தில்) உடல்நிலை சரியில்லாமல் போக, அவரைக் கிட்டத்தட்ட 'அவுட்'டாக்கிவிட்டார்கள் சேனல்காரர்கள். ஒரு தனியார் சேனல், அவருடைய புகைப்படங்களையும், பழைய சினிமாக் காட்சிகளையும் மாற்றி மாற்றி காண்பித்து, ஒரு மாதிரியான 'ஆபிச்சுவரி'யை நிகழ்த்தி விட்டது!



• திலீப் குமார்



• சிந்தியா

இத்தனைக்கும் மழை காரணமாக வரும் 'யூரினரி இன்ஃபெக்ஷனும்' ஜுரமும் தான். யாரோ 'கிட்னி ஃபெயிலியர்', 'ஹார்ட் அட்டாக்' என்று கிளப்பிவிட, சம்பந்தமில்லாமல் ஒப்பாரி வைத்துவிட்டார்கள். நல்லவேளை, லீலாவதியில் (ஹாஸ்பிடல்) நாலு நாள் படுக்க வைத்து, நலமாக்கி அனுப்பிவிட்டார்கள். திலீப் குமாரும், எல்லாம் சாயிரா சதிலீலாவதியாக இருந்து செய்த தொண்டின் மகிமை என்றும், அவர் தாய் நஸீம் பானுவின் ஆசீர்வாதம்தான் என்றும் (முறைக்காதீங்க... ஸ்டார் மனைவி, ஸ்டார் மாமியாராயிற்றே) எல்லோரையும் கட்டித் தழுவி, ஆனந்தக் கண்ணீர் உகுத்து, தான் பிழைத்த கதையைச் சொல்லிவிட்டார். சரி விடுங்கள்... நடக்குமென்பார் நடக்காது என்று சும்மாவா பாடியிருப்பார்கள்?

நடக்காதென்பார் நடந்துவிடும் என்ற அடுத்த வரியை மட்டும் மறக்க முடியுமா? பாருங்களேன். மாதவ் ராவ் சிந்தியா இப்படி விமான விபத்தில் துர்மரணம் அடைவார் என்று யார் எதிர்பார்த்தார்கள்? தாதரிலுள்ள காங்கிரஸ் தலைமையகமான 'திலக் பவன்' திடீர் சோகத்தில் அமிழ்ந்தது. பலர் சிந்தியாவை குவாலியர்காரர் என நினைத்துக் கொண்டிருப்பார்கள். உண்மையில் அவர் மராத்திய ராஜ பரம்பரையைச் சேர்ந்தவர். அவர் வேர்கள் மஹாராஷ்ட்ரத்திலுள்ள சதாராவில் உள்ளன. புதுமைகளையும் புரட்சியையும் செய்ய நினைக்கும், துடிப்பும் துள்ளலுமிக்க தலைவர்களுக்கும் காங்கிரஸுக்கும் ராசியே இல்லையோ என்னவோ? இங்குள்ள தலைவர்களெல்லாம் கண்ணீர் அஞ்சலி செலுத்தினர். சரளமான மராத்தியால், இங்குள்ள அரசியல்வாதிகளைக் கைக்குள் போட்டுக் கொண்ட லாவகத்தை, பாராட்டாதவரில்லை. 1999ல் இங்கே நடந்த உச்சகட்ட அரசியல் நாடகத்தின்போது, மாதவ்ராவின் தலையீட்டால்தானே, விலாஸ்ராவ் தேஷ்முக் ஏகமனதாக முதல்வராக தேர்ந்தெடுக்கப்பட்டு, ஒரு வழியாக திரை இறங்கியது? பவார் துவக்கிய என்.சி.பி. கட்சிக்கு, பெருவாரியான காங்கிரஸ்காரர்கள் படை எடுக்காமல் சோனியா விசுவாசிகளாகவே தங்கியது அவரால்தானே? சிந்தியாவின் முடிவு, மராத்திய காங்கிரஸுக்குக் கிடைத்த திடீர் அடி என்றால், அவருடன் 'ஆஜ்தக்'கின் விசேஷ நிருபர் ரஞ்ஜன் ஜாவும்,

மும்பை மசாலா

வாலாக்கள்!

புகைப்படக்காரர் கோபல் பிஸ்ட்டும், எக்ஸ்பிரஸ், ஹிந்துஸ்தான் டைம்ஸ் நிருபர்கள் இருவரும் மரித்தது, மீடியாவுக்கு ஒரு எதிர்பாராத, திடீர் இடி!



* 'நெட்' வேலை!



* புஜ்லேடன்?

எதிர்பாராதது நிகழ்ந்து விடுவதுபோல், சில சமயம் எதிர்பார்ப்பதும், எதிர்பாராத நேரத்தில் நிகழத்தானே செய்கிறது? "க்ரேட் மும்பை பஜாரை" (ஜி.எம்.பி.) 1999ல் எதிர்பார்த்தோம். ஏமாந்தோம். பிறகு 2000ல் எதிர்நோக்கினோம்; கொட்டாவி விட்டோம். இப்போது மறந்தே போனோம். 'துபாய் ஷாப்பிங்' பெஸ்டிவலை எல்லாம் ஷேக்குகளால் தான் நடத்த முடியும். அதுபோல மும்பை ஷாப்பிங் ஃபெஸ்டிவலாவது? நடக்காத காரியம்' என்று நாம் மூட்டை கட்டிய பிறகு, 'இதோ ஜனவரி ஒன்று 2002லிருந்து ஜன. 31 வரை ஜி.எம்.பி. நடக்கப் போகிறது, தினமும் லக்கி ட்ரா! ஐந்து கிலோ தங்கம் பரிசு! ஷாப்பிங்கில் நிறைய டிஸ்கவுண்ட் உண்டு. கலை கலாசாரத்துக்கென்று தனி கவர்ச்சிகள் - தினமும் 1 1/2 லட்சம் மக்களை ஈர்க்கப் போகிறதாக்கும்." என்கிறார் எங்கள் சஜன் புஜ்பல்.

எதிர்பாராத அறிவிப்புகளைச் செய்வது போல், எதிர்பாராத பதிலடிகளைக் கொடுப்பதிலும் மனிதர் கில்லாடி.. பாருங்களேன்.

சஜன் புஜ்பலுடன் நடந்த 'சாட்டிங்'கில் ஒருவர் "பால் தாக்கரே மறுபடியும் அழைத்தால், அவருடன் சேர்ந்து கொள்வீர்களா?" என்று கேட்டதற்கு, "எங்கே? ஜெயிலிலா?" என்று போட்டாரே ஒரு போடு! இதைப் படித்தவர்கள் (இன்ப) அதிர்ச்சியில் உறைந்தே விட்டனர்.

உறைந்து போயிருப்பவர்களை உருக வைப்பதற்கென்றே மும்பையில் உருவாகி வருகிறது ஓர் இளமைப்பட்டாளம் 'ஐஸ்ப்ரேக்கர்ஸ்.' மும்பையில் நீங்கள் வந்து, உங்களிடம் யாராவது வந்து (அடதப்பித் தவறித்தான்.) பின்வரும் வரிகளில் எதையாவது அவிழ்த்து விடுகிறார் என வைத்துக் கொள்வோம்.

"உங்ககிட்ட வரை படம் இருக்கா? உங்க கண்கள்ல நான் தொலைஞ்சே போயிட்டேங்க.."

"சொர்க்கத்துல இருந்து கீழ விழும்போது உங்களுக்குவலிக்கலியா?"

"உங்களை என்ரான்ல தேடிக் கிட்டிருக்காங்க, இவ்ளோ மின்சாரம் உற்பத்தி செய்யறீங்களே...?"

உடனே உச்சி குளிர்ந்துவிட வேண்டாம். எல்லாம் 'டைம் பாஸ்' கிராக்கிகள். அநேகமாக...

"நான் ஊருக்குப் புதுசுங்க. உங்க வீட்டுக்கு வழி சொல்ல முடியுமா? என் ஈ.மெயில் அட்ரசைத் தொலைச்சுட்டேன். உங்களுடையதைத் தர முடியுமா?" என்று தொடர்வதற்காகத் தானிருக்கும்.

டெயில்பீஸா...? நெட்ல மாட்டின இந்த எதிர்பாராத தமாஷைப் (படங்கள்) பாருங்களேன்.

ஜெயஸ்ரீ ராஜ்



புடவை தான் எனக்குப் பிடிக்கும்!

“மலமல மருதமலே” என்ற பாடல் வரிக்கு அர்த்தம் தெரிஞ்சிருந்தா இப்படி தைய்யா தைய்யான்னு டப்பாங்குத்து ஆடியிருப்பீங்களா?” என்று மிரட்டும் தொனியில் கேட்டதும் “சாரி... சார்! அதுஒரு டிவோஷனல் ஸ்பாட்டுன்னு, ரசிகர்கள் ஃபோன் செய்து சொன்ன பிறகுதான் விவரம் புரிஞ்சுது. இனிமே நான் ஆடப்போறப் பாடல்களை ஹிந்தியிலே டிரான்ஸ்லேட் பண்ணி காட்டினாத்தான் ஆடுவேன்” என்று பயபக்தியோடு பதில் தந்தார் மும்தாஜ். (ராமகோபாலன் மன்னிக்க!)

“அது என்ன சில்க் ஸ்மிதா விட்டுவிட்டுப் போன இடத்தை சுபால் என்று கைப்பற்றிக் கொண்டு வீட்டீர்கள்?” என்றால் “நான் கவர்ச்சி நடிகை ஆகணும்கிற லட்சியத்தோட இங்கே வரலே. என்னை அறிமுகப்படுத்தின டி. ராஜேந்தர் சார் கூட, நீ குணசித்திர நாயகியா தூள் கிளப்பப்போறே பார்ன்னு சொன்னார். ‘நக்மாகான்’கிற என்னோட பெயரையும் அவர்தான் மும்தாஜ்ன்னு சினிமாவுக்காக மாத்தினார். மும்தாஜ் ஒரு நல்ல காதலி, நல்ல மனைவி, நல்ல தாய் தெரியுமா?” என்றவரை இடை மறித்து, இப்போ இந்த பெயருக்கு இங்கே கவர்ச்சினு அர்த்தமாயிட்டுதே” என்று உண்மையை விளம்பினோம்.

“நிஜம்தான். ‘குஷி’ படத்துல நடிச்ச பிறகுதான் எனக்கு இப்படியொரு இமேஜ் வந்திருக்கு. டைரக்டர்ஸ், புரொடியூசர்ஸ் வந்து நீங்க ஒரு பாட்டுக்கு ஆடுங்க... கூடவே ஒரு சூப்பர் ரோலும் இருக்குன்னு கதையெல்லாம் சொல்றாங்க... கடைசியிலே நான் ஆடின பாட்டுமட்டும்தான் படத்துலே இருக்கு... நான் என்ன செய்யறது?” என்று அப்பாவியாகக் கேட்கிறார்.

“பட்ஜெட் பத்மநாபன்” படத்தில் “நம்ம மும்தாஜா இது?’ என்று ஆச்சர்யபடுகிற மாதிரி உங்க நடிப்புத் திறமையை வெளிப்படுத்தியிருந்தீங்க... அதற்குப் பிறகும் ஏன் ‘ஆட்டம்’தான் நமக்குச் சரிபடும் என்று ஆனீங்க? அதுவும் இப்போ ஒருபடி முன்னேறி ஒரே படத்தில் இரண்டு பாடலுக்கு ஆட ஆரம்பிச்சுட்டீங்க... தமிழ்நாடு தாங்குமா?” என்றால் முத்துப்பரல்கள் சிதறிய மாதிரி குலுங்கிக் குலுங்கி சிரித்துவிட்டுத் தொடர்கிறார்.

“இப்போ பாக்கியராஜ் சார் கூட “ரொம்ப படிச்சவங்க” படத்துலே குடும்பப் பெண்ணா நடிக்கிறேன். அதில் துளி கூட கவர்ச்சியில்லே.... நீங்கவேணா

பாருங்க இந்தப்படம் வந்த பிறகு எனக்கு எவ்ளோ கேரக்டர் ரோல் வருதுன்னு" என்று நம்பிக்கையோடு சொன்னவரிடம், "கொஞ்சம் குடும்பத்தைப் பற்றிச் சொல்லுங்களேன்" என்றோம்.

"நான் முஸ்லிம் கேர்ள். மெட்ரிகுலேஷன் முடிச்சிருக்கேன்... அப்பா நான் சின்ன பொண்ணா இருக்கும்போதே மர்கயா. நான் வீட்டுக்கு ஒரே பொண்ணு. அம்மாதான் எல்லாம்.



அவங்க புடைவை மொத்த வியாபாரம் செய்றவங்க. அதனால் நல்ல நல்ல புடைவையெல்லாம் அம்மாகிட்டேயிருந்து திருடிடுவேன். எனக்குப் புடைவைன்னா உயிர். (கடவுளே... தமிழ் சினிமாகாரங்களுக்கு மனசாட்சியே இல்லையா?)

"எனக்கு பைலட் ஆகணும்னு ஆசை. ஆனா சினிமா சான்ஸ் கிடைச்சதும் வாழ்க்கையே மாறிப் போச்சு" என்கிறார்.

"ஆமாம்.... காஷ்மீர் தீவிரவாதிகள் பர்தா போடாத பெண்களைச் சுட்டுக் கொல்லுவோம்ன்னு மிரட்டியிருக்காங்களே? இதைப்பத்தி உங்க கருத்து என்ன?" என்றதும், அலறியடித்து "அல்லா... என்று காதைப் பொத்தியவர்... "ஆளவிடுங்க... இப்போதான் நான் வளர்ந்துகிட்டு வர்றேன். இப்போ போய் இப்படியொரு கேள்வியைக் கேட்டு என்னை மாட்டிவிடப் பார்க்கிறீங்களா?" என்று தப்பித்துக் கொண்டார். "கடைசியாக ஒரு கேள்வி" என்றபடி, இவ்ளோ

மும்தாஜ்

கவர்ச்சியா நடிக்கிறீங்களே... உங்களைக் கல்யாணம் செய்து கொள்ளுபவர் இதையெல்லாம் பார்த்து வருத்தப்பட மாட்டாரா?"என்று பினிஷிங் டச் கொடுத்தோம்...


ஒரு கண்ணைப் பொத்தி, கொஞ்சம் வருத்தப்பட்டு, "வேலைக்குப் போற மாதிரி, சினிமா எனக்குப் ப்ரொபஷன். வாழ்க்கை வேற சார்.... இதை புரிஞ்சுக்கிறவர்தான் நல்ல ஹஸ்பெண்டா இருக்க முடியும்... எனக்கான ஆள் எங்கேயோ இருக்கார். அல்லா அதை ஃபிக்ஸ் பண்ணி வெச்சருக்கார்" என்றவரிடம் வாழ்த்துகள் என்று விடைபெற்றோம்.

— சக்கரத்தாழ்வார்

'சிமி'க்குத் தடா!

இந்திய இஸ்லாமிக் மாணவர் இயக்கம் என்பதுதான் சுருக்கமாக SIMI (Students Islamic Movement of India) இந்த அமைப்பை மத்திய அரசு, சமீபத்தில் தடை செய்திருக்கிறது. ஏன் இந்தத் தடை?

"முகமது அகமதுல்லா சித்திக் என்கிற இஸ்லாமிய மதத்தைச் சேர்ந்தவரால், ஜமாத் – ஏ – இஸ்லாமி என்கிற முஸ்லிம் அமைப்பின் மாணவர் பிரிவாக 1977ல் உருவாக்கப்பட்டது இவ்வமைப்பு. ஆரம்பித்த மூன்றாவது வருடத்திலேயே, தாய் அமைப்புக்கும், மாணவர் பிரிவுக்கும் கருத்து மாறுபாடுகள் ஏற்பட்டன.



• சீல் வைக்கப்பட்ட சிமி அலுவலகம். உள்படம் சிமி நிர்வாகிகள்

மாணவர் சம்பந்தப்பட்ட விஷயங்களுடன் நிறுத்திக் கொள்ளுங்கள் என்ற கட்டுப்பாட்டுக்கு, சிமி ஒப்புக்கொள்ளாமல், தன்னிச்சையாகப் போராட்டங்களில் ஈடுபட்டதுதான் இதற்கு முக்கிய காரணம். இதனால், ஜமாத் – ஏ இஸ்லாமி அமைப்பு, சிமியை புறக்கணித்துவிட்டு, இஸ்லாமிக் துல்பா தன்ஸீம் என்ற பெயரில் புது அமைப்பை ஆரம்பித்துக் கொண்டது.

தன்னிச்சையாகச் செயல்பட ஆரம்பித்த சிமி, காலப்போக்கில், மற்ற அரசியல் கட்சிகளின் மாணவர் அமைப்புகள் போல இல்லாமல், பல்கலைக் கழக மாணவர் யூனியன் தேர்தல்களில் ஆர்வம் காட்டவில்லை. (உ.பியில், அலிகார் முஸ்லிம் பல்கலைக் கழகத்தில் மட்டும் விதிவிலக்கு) நாளடைவில், உ.பியில் மட்டுமின்றி, மகாராஷ்டிரா, ராஜஸ்தான், கேரளா, ஆந்திரா, டெல்லி என்று கிளைகள் பரப்பியது.

1998 முதல் தீவிரவாதச் செயல்களிலும் சிமி ஈடுபட்டதாக மத்திய அரசு குற்றம் சாட்டுகிறது. பில் கிளிண்டனின் இந்திய வருகைக்குச் சில நாட்களுக்கு முன்பு, ஆக்ரா அருகில் உ.பி மாநில போக்குவரத்துக் கழக பஸ்ஸில் வெடி வைத்தது, சென்ற வருடம் ஜனவரியில் செங்கோட்டை அருகில் நடந்த வெடிகுண்டு சம்பவம், சுதந்தர தினத்துக்கு முன்பு சபர்மதி எக்ஸ்பிரஸில் வெடி வைத்தது, டெல்லியில் சென்சிடிவான தெற்கு பிளாக் பகுதியில் குப்பைத் தொட்டியில் குண்டு வைத்தது... என்று சிமி மீதான மத்திய உளவுத் துறையின் குற்றச்சாட்டுப் பட்டியல் நீளுகிறது.

கடந்த சில மாதமாக, பின்லேடன் ஆதரவு துண்டுப் பிரசுரங்களை விநியோகிப்பதில் சிமி தீவிரம் காட்டியது என்பது இன்னொரு குற்றச்சாட்டு. சிமியின் வெளியீடுகளில் பின்லேடனைத் தெய்வீகச் சிங்கம் என வருணிக்கும் கவிதை வெளியிடப்பட்டது இதற்குச் சாட்சியாகிறது.

இது தவிர, லஷ்கர் – ஏ - தொய்பா, ஹிஸ்புல் முஜாகிதீன் போன்ற காஷ்மீர் தீவிரவாத அமைப்புகளுடனும், சிமி நெருக்கமாக இருந்திருப்பதையும் உளவு அமைப்புகள் மோப்பம் பிடித்துள்ளன.

இக் காரணங்களையெல்லாம் பட்டியலிட்டுதான் மத்திய அரசு, இரண்டாண்டுகளுக்கு, சிமியைத் தடை செய்திருக்கிறது.

— சி.எம்

இக்கரையில்

ரஞ்சி இந்நேரம் ஆஸ்பெனில் இருப்பாள். வித்யாவுக்குப் பொறாமையாக இருந்தது நிறையவே.

ஜாக் நிக்கல்ஸன், ஷெர், கோல்டீ ஹான் மாதிரி பிரபல நட்சத்திரங்களுக்கெல்லாம் ஆஸ்பெனில் பெரிய பெரிய மாளிகைகள் இருப்பதாய் அவள் "பீப்பிள்" பத்திரிகையில் படித்திருக்கிறாள். இன்னும் நிறையப் பிரபலங்களும் பணக்காரர்களும் பனிக்கால உல்லாசம்தேடி வரும் இடம் அது. ரஞ்சி அநேகமாக அவர்களைப் பார்ப்பாள். அவர்கள் கலந்து கொள்ளும் விருந்துகளில் அவளும் பங்கெடுக்கக் கூடும். அவளுக்கு அந்தத் தகுதியும் அதிகாரமும் சக்தியும் வாய்த்திருக்கிறது.

பெருமூச்சு தானாகவே வந்தது. உள்ளே ஏதோ அலைத்தது. சுற்றிலும் பார்த்தாள். தீபாவளி விருந்துக்கான அலங்காரப் பொருட்கள். பச்சை ஒயரும் முல்லை அரும்பு பல்புகளுமாய்க் குவிந்து கிடந்த இருநூறடி மின் விளக்குச் சரங்களின் சிக்கல்களும் முடிச்சுகளும் தெரிந்தன. அவற்றை ஒதுக்கி விட்டுச் சன்னலருகே போய் உட்கார்ந்து கொண்டாள்.

வெளியே வெண்பனி உறைந்திருந்தது. இலைகள் உதிர்ந்த மரக்கிளைகளில் நீண்ட பனிக்கட்டிக் குச்சிகள் காய்த்துத் தொங்கின. பக்கத்துவீட்டுப் புகைபோக்கியிலிருந்து சுருண்டு வெளிவந்த வெம்மையில், சிற கொடுக்கிய ஒற்றைக் காக்கை குளிர்காய்ந்து கொண்டிருந்தது. கண்ணுக்குத் தெரியாத சில காக்கைகள் விட்டு விட்டுக் கரைந்து கொண்டிருந்தன. தனிமையின் பல வடிவங்கள் ஒன்றாய்ச் சேர்ந்த சித்திரம்.

முன்பு நினைத்தது மீண்டும் மனத்தில் எழுந்தது. தகுதியும் அதிகாரமும் சக்தியும் ரஞ்சிக்கு மட்டும்தானா?


பதினாறு வருடங்களுக்கு முன்னால், மஞ்சள் கயிறும் க்ரீன்கார்டுமாய் டெல்லியை விட்டுக் கிளம்பும் போது நீரு ஆன்ட்டி, அவள் கைக்குள் அழுத்திய பரிசு ஞாபகத்துக்கு வந்தது. பாதாம் பருப்புகளைத் தீய்த்து, அந்தக் கரியை ஒரு வெள்ளிக் கரண்டியில் சேகரித்துச் செய்த கண் மை. ஒரு மாங்காய் வடிவிலான வெள்ளிச் சிமிழில் அடைத்துத் தந்தாள். சிமிழின் மேல் மூடியில் இரண்டு மயில்கள் ஒன்றையொன்று பார்த்துக் கொண்டிருந்தன. "நீ அமெரிக்காவுக்கு எடுத்துப் போக, விது. இந்தச் சின்ன சின்ன விஷயங்கள் கூடப் பெண்களுக்குச் சக்தியும் அதிகாரமும் கொடுப்பது."

விதுவுக்கு அப்போது சிரிப்புதான் வந்தது. நீரு ஆன்ட்டி ஒரு வித்தியாசமான பெண். விதுவின் அப்பாவும் நீருவின் கணவரும் விமானப்படை அதிகாரிகள், நண்பர்கள். எல்லா விருந்துகளுக்கும் கலகலவென்று நீரு ஆன்ட்டிதான் உயிரூட்டுபவள் என்று அப்பாவும் அம்மாவும் சொல்லக் கேட்டிருக்கிறாள். 'பேட்டி, பேட்டி' என்று தன் மகளைப் போலவே விதுவையும் நடத்துவாள்.

"அதிகாரமா, ஆன்ட்டி?" சிரித்துக் கொண்டே கேட்டாள். பள்ளிக் கூட விதிகளை மீறிய பெண்களைத் தன் அறைக்கு அழைத்து 'திட்டி'விடும் கான்வென்ட் மதர் சுப்பீரியர்தான் அதிகாரம் என்றால் ஞாபகத்துக்கு வருவார். சக்தி என்றால், கல்கத்தாவில் வசிக்கும்போது பார்த்த துர்க்கை சிலை நினைவுக்கு வரும். இரண்டுமே ஏதோ ஒரு விதத்தில் அவளது நிஜ வாழ்க்கையிலிருந்து தொலைவு பட்டதாய்த் தெரியும்.

நீரு ஆன்ட்டியும் சேர்ந்து சிரித்தாள். "அதிகாரம், சக்தி என்ற பெரிய வார்த்தைகளைக் கேட்டுக் குழம்பிப் போகாதே. உன் வாழ்க்கையை நீ விரும்பியபடி வாழ முடிந்தால் நீ சக்தியுள்ளவள்.

"வாழ்க்கையின் வெவ்வேறு பகுதிகளை



காஞ்சனா தாமோதரன்



2

யும் ஒரு முழுமையாகச் சேர்த்து, அழகாகப் பார்க்க முடிய வேண்டும் பேட்டி." அவள் கன்னத்தோடு கன்னம் இழைத்து நீரு ஆன்ட்டி அணைத்து விடை கொடுத்தாள். ஆன்ட்டியின் உடல் மென்மையும், ஷிஃபான் புடைவையின் வழுவழுப்பும், சன்னமான சந்தன வாசமும் இன்னும் நினைவிருக்கிறது.

இன்று நீரு ஆன்ட்டி விதுவின் வாழ்க்கையைப் பற்றி என்ன சொல்வாள். திடீரென்று ஆன்ட்டிக்கு எழுத வேண்டுமென்றிருந்தது. 'அருமை நீரு ஆன்ட்டி, என் வாழ்க்கையின் தனிப்பட்ட பகுதிகளும் எனக்குப் புரியவில்லை. அதை முழுமையாகப் பார்க்கவும் முடியவில்லை. வாழ்வின் அழகு கண்ணுக்குத் தெரியவில்லை. உங்கள் கண் மை மந்திரம் பலிக்கவில்லை..' இப்படியெல்லாம் எழுத முடியுமா என்ன?

பாவம் நீரு ஆன்ட்டி. இந்தக் கடிதத்துக்கு அவளால் என்ன பதில் போட முடியும்? அவளையும் அறியாமல் ஒரு சிரிப்பு மெல்ல வெடித்தது. எல்லாவற்றிலும் நளினமான நகைச்சுவை ஒளிந்திருக்கத்தான் செய்கிறது. தேடுபவர் கண்களுக்குக் கிடைக்கிறது.

சில்லிட்ட சன்னல் கண்ணாடியில் அவள் மூச்சுக் காற்றின் வெம்மை நீராவியாய்ப் படர்ந்திருந்தது. கைவிரல் நுனியால் அதில் ஒரு வட்ட முகம் வரைந்தாள். இரண்டு

புள்ளிக் கண்கள் வைத்தாள். தலைகீழ்ப் பிறை போல் ஒருவாயை வரைந்தாள். அந்தச் சோக முகத்தைப் பார்க்கப் பாவமாக இருந்தது. அதற்கு மேல், சிரித்த வாயை வரைய முயலவும் முகமே மொத்தமாய்க் கலைந்து போனது. கையால் நீராவி மூட்டத்தைத் தேய்த்து அழித்தாள். சன்ன லுக்கு வெளியே மீண்டும் வெண்பனிப் பாலைவனம் தெரிந்தது.

அப்போது அழைப்பு மணி அடித்தது ஒரு நிம்மதியாய்த் தெரிந்தது.

முகத்தில் சிரிப்பும், கையில் ஒரு பெரிய பாத்திரமுமாய் ராஜி.

"நிறைய அவியல் செய்தேன். உனக்கு என் அவியல் பிடிக்குமே! எடுத்துக்கிட்டு வந் தேன். நம்ம சமையலுக்கும் ஒரு ரசிகை யான்னு ஒரு அல்ப சந்தோஷம்தான்." ராஜி சிரித்தாள். இவளால் எப்படி இப்படிச் சிரித்துக் கொண்டே இருக்க முடிகிறது. மனத்தில் எவ்வளவு சந்தோஷமிருந்தால் இப் படி வெள்ளைச் சிரிப்பாய் முகத்தில் பூத்திருக்கும்.

"தீபாவளி விருந்துன்னு வேலை செய்ய ஆரம்பிச்சேன் ராஜி. என்னமோ, ஒண்ணுமே ஓடலை. வீடெல்லாம் குழம்பிக் கிடக்கிறது தான் மிச்சம்."

அவியல் பாத்திரத்தைக் குளிர்பதனப் பெட்டிக்குள் திணித்துக் கொண்டிருந்த ராஜி அவளைத் தீர்க்கமாய்ப் பார்த்தாள். முகத்தில் ஒரு தயக்கம்.

"விது, உனக்கு உடம்பு சரியில்லையா? ஊரிலே எல்லாரும் நல்லா இருக்காங்களா?"

விது மௌனம் சாதித்தாள். எல்லாவற்றை யும் இவளிடம் சொல்லலாமா. அந்த அளவுக்கு இவள் நெருங்கின சிநேகிதியா. அப்படியே சொன்னாலுமே இவளுக்குப் புரியுமா. தனக்கே இன்னும் முழுதாய்ப் புரியாததாய் இருக்கிறதே.

"எல்லாரும் நல்லா இருக்கோம், ராஜி. நான் உங்கிட்டே ஒண்ணு கேக்கலாமா?"

ராஜி சரியென்று தலையசைத்தாள். முகத்தில் கலவரமும் அக்கறையும் கலந்து தெரிந்தன.

"நீயும் என்னை மாதிரி கல்யாணமாகி இங்கே வந்தவள். நீ நினைச்ச மாதிரி எல்லாம் இருக்கா, ராஜி?"

ராஜியின் முகத்தில் ஆச்சரியம். அவள் நிச்சயமாக இந்தக் கேள்வியை எதிர்பார்க்க வில்லை என்பது தெரிந்தது. அவள் உடன் பதிலும் சொல்லவில்லை. "விது, ஸ்டார்பக்ஸ்



காஃபி பார் போலாமா? அங்கே இப்போ 'சாய்'ன்ற பெயரில் நம்மூர் மசாலா டீ விக்கிறதா கேள்விப்பட்டேன். வாயேன். எப்படியிருக்குன்னு பார்க்கலாம். வேலை செய்ய மனசில்லைன்னு சொல்றே. ரமேஷூம் பிள்ளைகளும் வர இன்னும் நிறைய நேரமிருக்கே."

ராஜியின் காரில் வழக்கம்போல் பழைய தமிழ்ச் சினிமாப் பாடல்கள். வட இந்திய ஊர்களில் வளர்ந்த விதுவுக்குத் தமிழ்ப்பாட் டுக்கள் மீது இயல்பான ஆர்வமில்லை. ராஜி வழக்கம் போல் கூடச் சேர்ந்து பாடிக் கொண்டே வந்தாள்... "அந்தி மழை பொழிகிறது, ஒவ்வொரு துளியிலும் உன் முகம் தெரிகிறது. ஆ... ஆ... ஆ... ஆ... ஆ..." நடுவே ஓரக்கண்ணால் விதுவைப் பார்த்துக் கொண்டாள் என்பது விதுவுக்கும் தெரியும். தெரியாததுபோல் சன்னலுக்கு வெளியே பார்க்க ஆரம்பித்தாள். சாலையிலிருந்து அப்புறப்படுத்தப்பட்ட வெண்பனி இருபுற மும் அழுக்கு வெள்ளையாய்க் குவிந்திருந் தது. பனிக்கட்டி வழுக்கலைக் குறைக்கச் சாலையில் தூவியிருந்த மண்ணின் மேல்

ஜீவன் ஒவ்வொன்றும்
அதனதன் இயல்போடு.

ஒட்ட நறுக்கினும்
நன்றியில் நாய்
மொக்கை வாலாட்டும்.

வைக்கோல் அடைத்தாலும்
கன்றினை வருடி
மடிசுரக்கும் பசு.

பால் வார்த்துப்
போஷித்தாலும்
விஷத்தைக் குறைக்காது
பாம்பு.

பஞ்சம் பிழைக்க
வேறுதிசை பறந்தாலும்
கவளம் கண்டதும்
கரையும் காக்கை.

உதித்தாலும்
மேகம் மறைத்தாலும்
மறக்காமல் கூவும் சேவல்.

ஊசிமுனையளவு
சின்னதென்றாலும்
உக்ரம் குறையாத
அக்கினிக் குஞ்சு.

எல்லாம் எல்லாம்
அதனதன் இயல்போடு.

மனிதன் மட்டும்
ஏன் இப்படி?

மனிதம் தொலைத்து
புனிதம் தொலைத்து.

ஆண்டாள் பிரியதர்ஷினி

கார்ச் சக்கரங்கள் நறநறத்தன.

ஸ்டார்பக்ஸின் கதகதப்பில் ஓவர் கோட்டை உதிர்க்க வேண்டியிருந்தது. சோஃபாவில் சாயுடன் உட்கார்ந்திருப்பது நண்பரின் வீடு போன்ற உணர்வை ஏற்படுத்தியது. ராஜி நம்மூர் மசாலா டீக்கும் இந்தச் சாய்க்கும் சம்பந்தமேயில்லை என்று முகத்தைச் சுளித்தாள். விதுவின் பார்வையை நேராகச் சந்தித்தாள். "சரி, இப்போ சொல்லு விது, என்ன விஷயம்?"

"விஷயமெல்லாம் ஒண்ணுமில்லை, ராஜி. நீ இங்கே வரும்போது வாழ்க்கை எப்படியிருக்கும்னு நினைச்சே? சும்மாதான் கேட்கிறேன்."

"நான் என்ன நினைச்சு இங்கே வந்தேன்னு எனக்கே தெரியாதே, விது. எனக்குப் பதினெட்டு வயசு. உனக்குக் கல்யாணம், பையன் அமெரிக்காவில் நியுரோசர்ஜனா இருக்கான்னு ஒருநாள் அப்பா ஃபோட்டோ காட்டினாங்க, திடீர்னு, பொண்ணை அவ்வளவு தூரம் அனுப்ப முடியாதுன்னு அம்மா அழுது கரைஞ்சாங்க. அப்புறம் சரின்னு அனுப்பிட்டாங்க. அவ்வளவுதான் கதை."

"அப்புறம்...?"

ராஜி அவளை வினோதமாய்ப் பார்த்தாள். "உனக்குத் தெரியாததா, விது? குமாருக்கு அவரோட வேலையைப் பார்க்கிறதுக்கே நேரம் பத்தாது. பரத க்ளாஸ், கர்னாட்டிக் க்ளாஸ், பியானோ க்ளாஸ், டென்னிஸ் க்ளாஸ், பள்ளிக்கூடம்னு மின்னிக்குட்டியை அங்கேயும் இங்கேயும் ஓட்டுறதுக்கே எனக்கும் நேரம் சரியாப் போகுது..."


"உனக்குன்னு நீ என்ன செய்றே?"

"வாரத்துக்கு மூணு நாள் ஏரோபிக்ஸ் செய்யறதோட சரி. உடம்புக்கு ஏதாவது ஒண்ணுன்னா நம்மளைக் கவனிக்க இங்கே யார் இருக்கா சொல்லு...போதும், போதும் என்னோட கதை. இப்போ, உன் கதையைச் சொல்லுன்னு நான் உங்கிட்டே கேட்கணுமா?" ராஜி சிரித்தாள்.

விதுவின் பதிலைக் கேட்டு ராஜி திகைத்துப் போனாள்.

(தொடரும்)

கொலு
கொல்!!!!



''ஏண்டிம்மா, அந்தப் படியெல்லாம் காலியா வைச்சிட்டே?''

''அய்யோ பாட்டி, அது மாடிக்குப் போற படி.''



''செட்டியார் பொம்மையெல்லாம் இப்ப கிடையாதும்மா, டிபார்ட்மெண்டல் ஸ்டோர் இருக்கு தரவா?''

—நவீன்




"என்ன, இன்னிக்கு இவ்வளவு சீக்கிரம் 'சித்தி' ஆரம்பிச்சுட்டாங்களா?"


"இல்லை தாத்தா, கொலுவுக்கு வந்த பொண்ணு அந்தப் பாட்டை பாடறா."

இந்த டிசைன் உங்க கலருக்குப் பிரமாதமா இருக்கும்மா."


"தாங்க்ஸ்! பட்டுப் புடைவை எனக்கில்ல தம்பி, எங்க வீட்டு கொலுப்படிக்கு!"








இது குஸ்தி செட்



இது தான் முதல் மந்திரி செட்





காதில் விழுந்தவை

★ ஜெயலலிதாவால் நியமிக்கப்பட்ட தனிச் செயலர், பன்னீர் செல்வத்துக்கும் இப்போது தனிச் செயலராக தொடர்கிறார். காலை பத்து மணிக்குப் போயஸ் கார்டனில் ஆஜராகி, முன்னாள் முதல்வருக்கும் இந்நாள் முதல்வருக்கும் பாலமாக இருக்



கிறார். கோட்டையில் உள்ள பல மூத்த செயலாளர்கள் சில விவகாரங்களில் அனாவசியமாக இவர் தலையிடுவதாக முணுமுணுக்கிறார்கள்.

★ ஜெயலலிதா முதல்வராக இருந்தபோது வேலை, பண உதவி, பட்டா கேட்டு தினசரி நூற்றுக் கணக்கான மக்கள், குறிப்பாகப் பெண்கள், அவரைச் சந்தித்து மனு கொடுத்து வந்தார்கள். இதற்காக கோட்டை வாசலில் ரெடிமேட் மனு விற்பனை நடந்து வந்தது. ஜெயலலிதாவின் படத்தைக் கலரில் அச்சடித்து வைக்கப்பட்டிருந்த அந்த மனுவில், ஒருவர் தனது பெயரையும், முகவரியையும் எழுதிக் கொடுத்தால் போதும். இப்போது பன்னீர் முதல்வராகியுள்ள நிலையில் கோட்டையில் கூடும் மக்கள் எண்ணிக்கை குறைந்துவிட்டது. மனு விற்பனையும் டல்லடிக்கிறது. "பன்னீர் செல்வமாவது கோட்டைக்குத் தினசரி வருவார். ஏதோ ஓரளவுக்காவது மனு விற்பனை நடக்கும் என்று பார்த்தால் அவர் தினசரி வருவதில்லை. ஏதோ எதிர்பார்ப்பில் ஆயிரக் கணக்கில் மனுக்களை அச்சடித்து வைத்துவிட்டோம்" என்றார் ஒரு விற்பனையாளர். இதற்கிடையில் பன்னீர் தினசரி தமது கோட்டைக்கு - போயஸ் கார்டனுக்கு - தவறாமல் போய் விடுகிறார். நாட்டுநிலை பற்றிய போலீஸின் தினசரி புலனாய்வு ரிப்போர்ட்கூட இன்னமும் அம்மாவிடம் தான் கொடுக்கப்படுகிறதாம்!

★ "இளங்கோவனை மாற்றினால் தான் தேர்தல் உடன்பாடு பற்றிப் பேச்சுவார்த்தை நடத்துவோம்" என்ற அம்மாவின் கட்டளையைக் காங்கிரஸ் கண்டுகொள்ளாததால் தான் இன்று காங்கிரஸ் தனி அணி அமைப்பது சாத்தியமாயிற்று.

ஜெ. ஆதரவாளரான மணிசங்கர் அய்யருக்கும் காங்கிரஸ் ஊழியர்களுக்கும் கூட்டணி பற்றிய விவாதம் காங்கிரஸ் அலுவலகத்தில் நடந்தபோது மோதல் ஏற்பட்டுவிட்டது. 'தனியாக நிற்பது தற்கொலைக்குச் சமம்' என்ற அய்யரை காங்கிரஸ் பிரமுகர் இல. பாஸ்கரன் என்பவர் செருப்பால் அடிக்க, தப்பித்தோம் பிழைத்தோம் என்று வியர்க்க விறுவிறுக்க காரில் ஏறிப் பறந்தார் அய்யர். 'இளங்கோவன் தலைவராக இருப்பது வரை காங்கிரஸ் கூட்டங்களுக்கு வரமாட்டேன்' என்று குஜுரைத்து விட்டுத் தில்லி சென்றிருக்கிறாராம் அய்யர்.

- சஞ்சயன்

படங்கள் : சௌராஜ்

புதுயுக யோகா 2

விசேஷ 'மெத்'துக்கு ஆபத்தா?

நன்றி! நன்றி...! புதிய தொடருக்கு நீங்கள் காட்டிய முதுகு வரவேற்புக்கு மெத்த நன்றி!

முதுகுக்குத் தரும் முக்கியத்துவம் இந்த வாரமும் தொடர்கிறது. இந்த வாரம் நீங்கள் செய்யப் போகும் ஆசனத்தின் பெயர் சலபாசனம். வெட்டுக்கிளிப் பூச்சி அமரும் நிலையை ஒத்து இருப்பதால் இந்தப் பெயர்.



சலபாசனம்

மனிதனுடைய முதுகுத் தண்டுவடம் பல எலும்புகள் சங்கிலி போல இணையும் தொகுப்பு எலும்பு. இரண்டு எலும்புகளுக்கிடையில் ஸ்பான்ஜ் போன்ற மெத்தென்ற பொருள் இருக்கிறது. நாம் நடமாடும்போது, எலும்புகள் உராய்ந்து தேயாமல் வலி ஏற்படாமலிருக்கவே இந்த விசேஷ 'மெத்' ஏற்பாடு!

இந்த ஸ்பான்ஜ் பகுதி குறைந்தாலோ, மறைந்து போனாலோ, எலும்புகள் ஒன்றுக்கொன்று உராய்ந்து வலி ஏற்படுத்தும். 'ஸ்பாண்டிலைடிஸ்' என்ற இந்த நோய், பொதுவாக பெண்களுக்கு நாற்பது வயதுக்கு மேல் ஏற்படும். இது ஹார்மோன் குறைபாடுகளாலும், கால்ஷியம் குறைவினாலும் ஏற்படுகிறது.


சிலருக்குத் தோள்பட்டையிலிருந்து கைவிரல் நுனி வரை மரத்துப் போய் விடும். சிலருக்குத் திடீரென நிமிர்ந்தாலோ, தலையைத் திருப்பினாலோ தலை சுற்றும். உடல் வியர்த்துப் போகும். இதற்கெல்லாம் மூல காரணம் முதுகெலும்பு தேய்வு நோய்.

முதுகுவலி வராமலிருக்க பொதுவாக என்ன செய்ய வேண்டும் என பட்டியல் தந்து விடுகிறேன்.

- உட்காரும்போது குனிந்தோ, கவிழ்ந்தோ, உட்காரக் கூடாது.
- உறுதியான படுக்கையில் மல்லாந்தோ, ஒருக்களித்தோ படுக்க வேண்டும்.
- ஃபோம், ஸ்பான்ஜ், படுக்கை, தலையணைகளை ஒதுக்கவும்.
- குதிகால் செருப்புகள் வேண்டவே வேண்டாம்.
- கனமான பொருட்களைத் தூக்கும்போது இடுப்பின் மேற்புறத்தை அதிகமாக வளைக்கக் கூடாது. அளவுக்கு மீறிய உடல் எடை முதுகுக்குச் சிரமம் தரும். எனவே உடல் எடையைச் சீராக வைத்திருக்க வேண்டும்.
- மனம் போன போக்கில் விதவிதமான போஸ்களில், மணிக்கணக்கில் டி.வி பார்ப்பதைத் தவிர்க்க வேண்டும். நேராக நிமிர்ந்து அமர்ந்தே பார்க்க வேண்டும்.

சரி, இப்போ சலபாசனம் கற்றுக் கொள்ளலாம். ரெடியா?

டாக்டர் ஏ.எஸ். அசோக்குமார்



"ஆபீஸ்ல எல்லாரும் தூங்கிட்டிருக்கும்போது அவர் மட்டும் தூங்காமல் கொட்டாவி விட்டுக்கிட்டிருக்காரே?"

"அவர் டிரெயினிங்ல இருக்காரு!"

– சீர்காழி ரேவதி

● புஜங்காசனம் செய்து முடித்ததும் முகவாய்க் கட்டையை விரிப்பின் மீது வைத்து, கைகளை வளைக்காமல் உடம்புக்குப் பக்கத்தில் கொண்டு வர வேண்டும். உள்ளங்கைகளை வானத்தை நோக்கி திருப்பி வைக்கவும்.

● இடது கால் விரல்களை, தரை மீது அழுத்தி, வலது காலை மடிக்காமல் பூமியிலிருந்து 40டிகிரிக்கு உயர்த்த வேண்டும். சாதாரண மூச்சில் பதினைந்து எண்ணுங்கள்.

● மெதுவாக வலது காலை விரிப்பின் மீது இறக்கி வைக்கவும். இதே போல, இடது காலை 40டிகிரிக்கு உயர்த்தி, சாதாரண மூச்சில் பதினைந்து எண்ணுங்கள்.

● மெதுவாக இடது காலை விரிப்பின் மீது இறக்கி வைக்கவும். இதேபோல, வலது காலை உயர்த்தி, சாதாரண மூச்சில் பதினைந்து எண்ணிக்கையில் இருக்கவும். இதுபோல் இருமுறை செய்யவும்.

செய்முறை எண். 2

கால் விரல்களைத் தரையின் மீது அழுத்தி, தொடையைச் சிறிது உயர்த்த வேண்டும். இப்போது இரண்டு உள்ளங்கைகளையும் தொடையின் கீழே கொண்டு வந்து வைத்து, கைவிரல்களை மடிக்கவும். கை முட்டிகள் நேராக இருக்க வேண்டும்.

● வெளிமூச்சை ஒரே சீராக உள்ளுக்குள் மூக்கின் வழியாக இழுத்து நிறுத்தவும். பலம் கொண்டு இரண்டு கால்களையும் சேர்த்து படத்தில் உள்ளபடி உயர்த்தி நிறுத்தவும். இப்போது சாதாரண மூச்சுக்கு வரவும். பதினைந்து எண்ணிக்கைகள் இருந்துவிட்டு, மெதுவாக கால்களை இறக்கிக் கொண்டு, விரிப்பின் மீது வைக்கவும்.

சிறிது ஓய்வுக்குப் பிறகு திரும்பவும் கால்களை உயர்த்தவும். இது போல் இருமுறை செய்தால் போதும்.

முக்கியக் குறிப்புகள்

கல்லீரல் வீக்கம் உடையவர்கள், இந்த ஆசனத்தைச் செய்யக் கூடாது.

ஆரம்பக் காலத்தில் இரண்டு கால்களையும் ஒன்று சேர்த்து தூக்க முடியாதவர்கள், ஒரு பெஞ்ச் மீது ஒவ்வொரு காலாக கொண்டு வந்து வைத்து, இரண்டு கால்களையும் சேர்த்து உயர்த்திச் செய்யலாம். இரு வாரப் பயிற்சிக்குப் பிறகு பெஞ்ச் இல்லாமல் பழகலாம்.

தென்திசை நோக்கிப் படுத்து இவ்வாசனம் செய்வது மிகுந்த பலன் தரும்.

பலன்கள் என்னென்ன?

1) நீரிழிவு நோய்க்கு அதிக பலன் தரும்.
2) நுரையீரலின் வலிமை அதிகரிப்பதால், ஆஸ்துமா நோய்க்கு நல்லது.
3) அடி முதுகு வலி நீங்கும்.
4) செரிமானத்தைப் பலப்படுத்துகிறது.
5) மூத்திரக் கடுப்பு நோய்க்கு நல்ல பலன் கிடைக்கும்.
6) இரத்த ஓட்டம் சீராகும்.
7) இரைப்பைப் புண், குடல் புண், இருதய பலவீனம், உதரவிதான இறக்கம் ஆகிய குறைபாடுகள் ஏற்படுவதில்லை.
8) 'இந்த ஆசனத்தைத் தொடர்ந்து பழகி வருபவருக்கு, எதையும் சாதிக்கும் மன வலிமையும், நல்ல புகழ் வாழ்வும், பெருஞ் செல்வமும் கிட்டும்' என்று பழைய யோக நூலில் குறிப்பிடப்பட்டுள்ளது.


இது சும்மா சாம்பிளுக்காகச் சொல்லப்படுவது. சகலமும் நன்மையாகும் சலபாசனம் கற்றால்... இது யோக மொழி!

அப்ப, அடுத்த வாரம்...

எச்சரிக்கை : இங்கே தரப்பட்டுள்ள யோகாசன பயிற்சி முறைகள் தகவலுக்காக மட்டுமே. இவை வழிகாட்டி முறைகள் அல்ல. யோகாசன நிபுணரின் நேரடி கண்காணிப்பில்தான் பயிற்சி தொடங்க வேண்டும்.

– ஆர்

வாழ்வில் முடிவெடுத்த அந்தத்
தருணம் என்றும் பசுமையானது...



அதற்கு ஈடான மற்றொரு தருணம் நீங்கள்
யெஸ்டி அஸோஸியேடட் பில்டர்ஸிடம் இல்லம்
வாங்கும் இனிய தருணம்தான்!



அண்ணா நகர், தி. நகர், நங்கநல்லூர், வேளச்சேரி, முகப்பேர் (கிழக்கு) மற்றும் பிற இடங்களில் அழகிய தரமான டீலக்ஸ் ஃபிளாட்டுகள் மற்றும் தனி வீடுகள் வாங்க

அணுகுங்கள்

CREATORS
NOT JUST BUILDERS

YESDE ASSOCIATED BUILDERS LTD.

(FLAT PROMOTERS & PROPERTY DEVELOPERS)

402, "Challamall" 17, Thyagaraya Road, (Pondy Bazaar),T. Nagar,
Chennai - 600 017. Phone: 4340224/4333636/4342667 Fax: 044-4340210

E.Mail:yesde@md3.vsnl.net.in Web:www.yesde-builders.com

பஸ்ஸரை அழுத்திவிட்டு சற்று தயக்கத்துடன் நின்றான் வைத்தி. சப்தம் கேட்டு வீட்டின் கதவைத் திறந்தவள், வைத்தியைப் பார்த்ததும், சற்று முகத்தைச் சுளித்தவாறே வந்த வேகத்தில் உள்ளே சென்று விட்டாள்...!

''யார் வந்திருக்கா மாலு...?'' சங்கர் தம் அறைக்குள் நுழைந்த மனைவியிடம்கேட்க, ''வேறு யார் வருவா...? உங்களோட அந்த ரவுடி ஃபிரண்ட்தான்...'' என்றாள் வெடுக்கென்று...

'உஷ்...' சட்டென்று அவளை முறைத்துவிட்டு வாசல் பக்கம் விரைந்தான் சங்கர்...

''வா வைத்தி...உள்ள வா...''

''பரவாயில்லை சங்கர்... உன்னைப் பார்த்து விஷயம் தெரிஞ்சுட்டுப் போகலாம்னுதான் காலையிலேயே வந்தேன்...மணி எட்டானா நீ பாங்கிற்குக் கிளம்பிடுவியே...!''

''உன்னோட லோன் சம்பந்தமா அனைத்து பார்மாலிட்டீஸும் முடிச்சுட்டேன். உதவி மானேஜர்கிட்ட நானே பேசி மூவ் பண்ணிடறேன்... நாளை மறுநாள் மானேஜர் டெல்லியிலிருந்து திரும்பி வரார்... அவர் வந்ததும் லோன் சாங்ஷன் ஆயிடும்...''

''நிச்சயமா கெடைக்குமா?''

''உனக்கு ஏன் இந்த அவநம்பிக்கை...?''

''அதுக்கில்லை... என்னோட பழைய பயோடேட்டா... உங்க பாங்க் மானேஜருக்குத் தெரிஞ்சா, லோன் சாங்ஷன் பண்ணுவாரா?''

''அட பழசைப் பத்தி நீ ஏன் இப்ப நினைக்கறே... நீ லோன் கேட்கறது தொழில் செய்யத்தானே...!''

''இது உனக்குத் தெரியறது...''

''மத்தவங்களுக்கும் தெரிய வைக்கணும்... தெரிய வைப்போம்.''

''சரி... அப்ப நான் கிளம்பறேன் சங்கர்...''

வைத்தி போவதையே பார்த்துக் கொண்டிருந்த சங்கர், 'என்னங்க' என்ற குரலைக் கேட்டுத் திரும்பினான்.

சூடான காபியுடன் மாலதி நின்று கொண்டிருந்தாள்... மௌனமாக அவளிடமிருந்து காபியை வாங்கிக் கொண்டான்...

''உங்களுக்கு எதுக்காக இப்படிப்பட்ட ரவுடிகளோட சகவாசம்...'' பல்லவியை ஆரம்பித்தாள் மாலதி...


''இதோ பாரு மாலதி... யாரும் பிறக்கும் போதே ரவுடியா பிறந்துவிடுவதில்லை... என்னோடு ஒண்ணா பத்தாவது வரை படிச்சவன்... ஏதோ சூழ்நிலை... அவனோட வாழ்க்கை மாறிடிச்சு... ரொம்ப வருஷங்களுக்கப்புறம் அவனை இப்படிப் பார்த்ததில் எனக்கு எவ்வளவு வேதனையாக இருந்தது தெரியுமா... எவ்வளவோ பேசினேன்... புத்திமதி சொன்னேன்... இப்ப ஓரளவு அவன் என் வழிக்கு வருவான்னு ஒரு நம்பிக்கை... இந்த சமயத்துல அவனை ரவுடி, அது இதுன்னு அவன் காது பட பேசி காரியத்தைக் கெடுத்துடாதே...''

''அட நீங்க பேசறது நல்லா இருக்கே... அவனோடு சேர்ந்து நீங்க கெட்டுப் போயிடக் கூடாதேங்கிற ஆதங்கத்தில் சொன்னா, எனக்கே புத்திமதியா...? காபி டம்ளரை வெடுக்கென்று பிடுங்கிக் கொண்டு உள்ளே சென்றாள் மாலதி...!

சங்கர் அன்று பாங்கிலிருந்து வீட்டிற்குத் திரும்பும் சமயம் சற்று நேரமாகி விட்டிருந்தது... இலேசாக இருட்டியும் விட்டது... ஸ்கூட்டரில் வரும் போதுதான் ராயபுரம் மேம்பாலத்தருகே வைத்தியைப் பார்த்தான்... அவனுடன் வேறு யாரோ மூனு

யார் முந்துவாரோ!

போட்டிக்கதை - 6



க. ஒப்பிலி அப்பன்

நாலு பேர்... எந்த செக்ஷனில் வேண்டுமானாலும் அவர்களை உள்ளே தள்ளலாம்! அப்படியொரு தோற்றம்...!

''நம்ம வைத்தியா...? இப்படிப்பட்டவர்களுடனா?''

சட்டென்று ஸ்கூட்டரை நிறுத்தினான். நடந்து வந்து கொண்டிருந்த அவர்கள் தன்னை நெருங்குவதை அந்தச் சாராய நெடி மூலமே நன்றாகத் தெரிந்துகொண்டான் சங்கர்...

''நீ... நீங்க... வைத்திதானே?'' சங்கர் துணிந்து கேட்டும் விட்டான்.

''நீ யாரு? என்னோட பேரு உனக்கெப்படித் தெரியும்?' கேட்ட கேள்விக்குப் பதில் சொல்லாமல், முரட்டுக் குரலில் அதுவும் ஒருமையில் எதிர்க்கேள்வி கேட்ட அந்த நபரை மிக நெருக்கத்தில் உற்றுப் பார்த்தான். ''சந்தேகமேயில்லை. நம் வைத்தியேதான்... உறுதிப்படுத்திக் கொண்ட

சங்கர், இப்பொழுது சற்றுத் துணிச்சலுடன் ''அட என்னைத் தெரியலை..? சங்கர்... உன்னோட ''ஆர்.எஸ்.''

வைத்தி என்ற வைத்தியலிங்கத்தின் முகத்தில் ஒருவித மலர்ச்சி..!

"டேய்... சங்கர்... நீயாடா...? நான் யாரோ சி.ஐ.டின்னு நெனைச்சு பயந்துட்டேன்.."

''மச்சி... என்னோட க்ளாஸ் மேட்.... உங்கள அப்புறம் பார்க்கிறேன்...'' என்றவன் உரிமையுடன் சங்கரின் ஸ்கூட்டரில் ஏறி அமர்ந்துகொண்டான்...

''டேய், வைத்தி... என்னடா... இதெல்லாம்.... யார் அந்தப் பொறுக்கிப் பசங்க...''

"டேய்... நான் ஒரு பொறுக்கி... பொறுக்கிக்கு வேறு யார் ஃப்ரெண்ட்ஸ் இருப்பாங்க...?"

"நீ ஏன் இப்படி மாறினே?"

"நீ நல்லா படிச்சே... பாங்க் எக்ஸாம் எழுதினே, செலக்ட் ஆனே, செட்டில் ஆனே... நான் பத்தாவதே தாண்டலை... அப்பா போன ஒரு வருஷத்துல அம்மாவும் காலி... ஏதோ ரெண்டு கம்பனியிலே சேர்ந்தேன்.... யூனியன்... ஸ்ட்ரைக் அது இதுன்னு வெளியே தள்ளிட்டாங்க... என் சகவாசம் வேறு விதமா அமைஞ்சது... இப்ப பழைய வண்ணாரப் பேட்டை கட்டப் பஞ்சாயத்து எங்க கிட்டதான்.... ஏதோ வருமானம், அடி, உதை, வெட்டு, குத்து, ஜெயில், பெயில்ன்னு வாழ்க்கை போய்க்கிட்டிருக்கு..."

'எத்தனையோ வருஷங்களுக்கப்புறம் நான் பார்க்கற என்னோட சினேகிதன் இப்படி கட்டப் பஞ்சாயத்து ரவுடியா இருக்கிறது எனக்குத்தான் அவமானம்...''

''சரி... என்னோட நண்பன்னு நீ சொல்லிக்காதே...''

"டேய்.... இப்படி எதிர்வாதம் பேசறதை நிறுத்து... இந்த அடிதடி வேலையெல்லாம் வேண்டாம்... ஏதாவது தொழில் பண்ணு... உனக்கு நான் என்னால முடிஞ்சதைச் செய்யறேன்..."

"சரி.... ஸ்கூட்டரை நிறுத்து.... நான் இறங்கிக்கிறேன்..."

''நான் சொன்னதைக் கொஞ்சம் யோசிடா...''

"நீ போய்ட்டு வா... அப்புறம் பார்க்கலாம்..."

வைத்தியின் இந்தப் பேச்சும் அவனது போக்கும் நான் எதிர்பார்த்ததுதான். ஆனால் அதற்காக மனம் சோர்ந்து விடவில்லை... சந்தர்ப்பம் கிடைக்கும் போதெல்லாம் அவனைச் சந்தித்தேன்... எத்தனையோ விதமான தொழில்கள் - அதற்குக் கடனுதவி கிடைக்கும் வழிகள் - இவற்றைப் பற்றி போரடிக்கும் என்று தெரிந்தும் திரும்பத் திரும்பச் சொன்னேன்... விளைவு... வைத்தியின் நண்பர்கள் ஒருநாள் என்னை நடு ரோட்டில் மடக்கினார்கள்... தேவையில்லாமல் தங்களுடைய நண்பனின் வாழ்க்கையைக் கெடுக்க வேண்டாம் என்று சொன்னார்கள்.... ஸாரி.... கத்தியைக் காட்டி மிரட்டினார்கள்...

சரியோ தவறோ, ஒரு நல்ல காரியம் பண்ணுவது என்று முடிவெடுத்தாகிவிட்டது... முயற்சி செய்யும் போது இப்படித்தான் ஏதாவது தடங்கல்கள் வரும்... இதற்கெல்லாம் சோர்ந்து போய் முயற்சியைக் கைவிட்டு விடக் கூடாது என்ற உறுதியான நம்பிக்கையில், எவ்வளவோ கஷ்டப்பட்டு வைத்தியை ஒப்புக் கொள்ள வைத்து விட்டேன்.

''சரிடா... நானும் என் நண்பர்களும் ஏதாவது கடைகள் வச்சு பிழைச்சுக்கறோம்... நீ கடனுக்கு ஏற்பாடு பண்ணு...''

அடுத்து மளமளவென்று காரியத்தில் இறங்கி, சிறு தொழில் செய்வதற்கான சான்றுகள் வாங்கி, எப்படியோ பாங்க் லோனுக்கு ஏற்பாடு செய்து விட்டேன்...

இன்று எப்படியும் உதவி மானேஜரிடமிருந்து ஃபைலை மூவ் பண்ணி, மானேஜரின் சாங்ஷனுக்குத் தயாராக வச்சுடணும் என்று நினைத்துக் கொண்டு, மெல்ல உதவி மானேஜர் அறைக்குள் நுழைந்தேன்.

''வைத்தியலிங்கம்ன்னு ஒரு லோன் அப்ளிகேஷன்.... உங்க செக்சப்புக்கு வந்திருக்கு... பார்மாலிட்டீஸ் அனைத்தும் முடிஞ்சாச்சு... நீங்க சிபாரிசு பண்ணி மானேஜருக்கு அனுப்பிடணும். நான் மானேஜர்கிட்ட பேசிக்கிறேன்...''

"உனக்குத் தெரிஞ்ச பார்ட்டியா.... நானே

''உன் வீட்டு வேலைக்காரியை ஏன் திடீர்னு நிறுத்திட்டே...?''

''சம்பளத்தோட 'வம்பு அலவன்ஸு'ம் போட்டுக் கொடுக்கணுமாம்!''

— நெ. இராமன்



உன்னை கேட்கணும்னு நெனைச்சேன்... இந்த நபர் கட்டப் பஞ்சாயத்துத் தாதா வாமே... நெஜமா..?"

"உண்மைதான்."

"அப்ப மேட்டர் ஓவர்..."

"சார்-நீங்க என்ன சொல்றீங்க...?"

"இதுல சொல்றதுக்கு என்ன இருக்கு சங்கர்... ஒரு கட்டப்பஞ்சாயத்து ரவுடிக்கு. லோன் சாங்ஷன் பண்ண நான் என்ன முட்டாளா?"

"சார்... இப்ப திருந்தி வாழ நினைக் கிறான்..."

"இதை நான் நம்பணுமா சங்கர்?"

"சார்... நீங்க அவனை நம்ப வேண்டாம்... என்னை உங்களுக்குத் தெரியும்.. நான் அவனு டைய திருந்திய மனசுக்கு உத்திரவாதம்...!"

"............."

"என்ன சார் மௌனமாயிட்டீங்க..."

"சங்கர்... ஸாரி....நான் உங்களப் பத்தின எண்ணத்தையும் மாத்திக்க வேண்டி யிருக்கு...!"

"எதனால சார்..."

"உங்களுக்கு ஒரு பழமொழி தெரியுமா... உங்கள் நண்பன் யார் என்று சொல்லுங்கள்..? நீங்கள் எப்படிப்பட்டவர் என்பதை நான் சொல்கிறேன்...? இதன்படி ஒரு கட்டப் பஞ்சாயத்து ரவுடி உங்களுக்கு நண்பன் என் றால், உங்களைப் பற்றி நான் வேறு எப்படி நினைப்பது?"

இது நடந்து ஒரு வாரத்திற்குப் பிறகு...

"என்ன சங்கர்...? மானேஜர் டில்லி யிலிருந்து வந்து விட்டாரா..?"

"ம்..."

"மறுபடியும் மும்பைக்குப் போய் விட்டாரா...?"

"வைத்தி...."

"சங்கர் எனக்கு லோன் கெடைக் காது என்பது நன்றாகத் தெரியும்... இதுல உன்னோட முயற்சியைப் பாராட்டறேன்..."

"அப்ப நான் வரேன்..."

"வைத்தி... நீ இப்ப என்ன செய்யப் போறே...? உன்னை நான் ஏமாத்தி விட்டேனோ என்ற உணர்வு...நீ மறுபடி யும் அதே தொழிலைத்தான் செய்யப் போறியா...?"

"வீணா என்னைப் பத்தி கவலைப் படறதை நிறுத்து... உன் புத்திமதி, யோசனைகள், நீ செய்த அப்பழுக்கில்லாத முயற்சிகள் எதையும் நான் அவ்வளவு சீக்கிரம் மறந்துடமாட்டேன்... ஒரு பொறி... ஒரே ஒரு பொறி கிடைச்சாலும் போதும்... நான் இதிலிருந்து வெளியே வந்துவிடுவேன்...



"போலீஸ் தடியடி – கலவரமெல்லாம் நடந்த இடத்துக்கு நீங்க எதுக்குப் போனீங்க?"

"தண்ணீர் பீச்சி அடிக்கிறதாப் பேசிக் கிட்டாங்க; குடத்தை எடுத்துக்கிட்டு ஓடி னதுலே மண்டை உடைஞ்சதுதான் மிச்சம்...!"

– சீர்காழி ரேவதி

கவலைப்படாதே... ஆனா அது வரை இந்த கட்டப் பஞ்சாயத்துக் கதை தொடரத்தான் செய்யும்..."

வைத்தி போய் விட்டான்...!

"சங்கர்... உன்னால் எனக்கு ஒரு காரியம் ஆகணும்...." ஒரு நாள் திடீரென்று உதவி மானேஜர் சங்கரிடம் இப்படிக் குழைந் தார்...

"சொல்லுங்க சார்..."

"நீ பழசையெல்லாம் மனசுல வச்சுக் காதே. பாங்கின் கடுமையான ரூல்ஸ் ரெகுலேஷன்ஸ் எல்லாம் உனக்கே தெரி யும்..."

"சார்...நீங்க இப்ப சொல்ல வந்த விஷயத்தைச் சொல்லுங்க..."

"அது... அது வந்து சங்கர்... விஷயம் ரொம்ப சிம்பிள்தான்... உனக்கே தெரியும்... என் ஒய்ஃப் மூலமா வண்ணாரப்பேட்டை மார்க்கெட்டில் பத்துக்கு இருபதில் எனக்கு ஒரு கடை... மாசம் ஆயிரம் வாடகைன்னு ஒருத்தன் பெட்டிக் கடை வச்சு நடத்தறான்... கடைய இடிச்சு நல்லா கட்டிவிட்டா, மாசம் நாலாயிரம் வாடகை வரும்... அந்தப் பெட்டிக் கடைக்காரன் காலி பண்ணத் தகராறு செய்யறான்.... இந்த ஏரியா ஆள் வைத்தி மூலமா எப்படியாவது அந்தப் பெட்டிக் கடைக்காரனைக் காலி பண்ண வைக்கணும்... ப்ளீஸ் சங்கர்... நீங்கதான் எப்படியாவது எனக்கு உதவணும்... பத்தாயிரம் தரேன்... அட்வான்ஸா ஐயாயிரம் உடனே தந்துடறேன். உங்க ஃபிரண்ட் வைத்திகிட்டே சொல்லி எப்படியாவது..."

உலகம் தலைகீழாய்ச் சுழல்வது போலி ருந்தது! ○



சிவகாமியின் சபதம்

இருபத்து ஒன்றாம் அத்தியாயம்

சித்தர் மலைச் சித்திரம்

பதினைந்து விதமான அபிநயப் பார்வைகளிலே சந்தேகமும் அருவருப்பும் தோன்றும் பார்வையைச் சிவகாமி புத்த பிக்ஷுவின் மேல் ஒருகணம் செலுத்திவிட்டு, ஆயனரைப் பார்த்து, "இவர்கள் இத்தனை நேரமும் இங்கேதான் இருந்தார்களா?" என்று கேட்டாள்.

"ஆம், குழந்தாய்!"

"புத்தர் சிலைக்குப் பின்னால் ஒளிந்திருந்தார்களா?"

"ஆமாம்! ஆனால், இதைக் குறித்து நீ என்னவோ ஏதோ என்று சந்தேகப்பட வேண்டாம்..."

ஆயனர் மேலே சொல்லுவதற்குள் சிவகாமி, "புத்த பகவானுடைய சிலைகளைப் பிரும்மாண்டமாய்ச் செய்வதில் எவ்வளவு உபயோகம் இருக்கிறது!" என்றாள்.

"அதனாலேதான் மகாயான சித்தாந்தத்தை ஏற்படுத்திய நாகார்ஜுன பிக்ஷுவை நான் போற்றுகிறேன்" என்றார் நாகநந்தி.

புத்த மதம் ஸ்தாபிக்கப்பட்டுச் சில காலம் வரையில் புத்த பகவானுடைய சிலைகள் அமைப்பதும் சித்திரங்கள் எழுதுவதும் தடுக்கப்பட்டிருந்தன. இந்த வரலாறு நடந்த காலத்துக்கு இருநூறு வருஷத்துக்கு முன்னால், நாகார்ஜுன பிக்ஷு என்னும் மகான் தோன்றி மகாயான புத்த சித்தாந்தத்தை ஸ்தாபித்தார். பாரத நாட்டின் வடகோடியில் நாலந்தா என்னும் நகரில் பிரசித்தி பெற்று விளங்கிய பௌத்த மடத்தின் தலைவரான நாகார்ஜுனர் தேசமெங்கும் யாத்திரை செய்து, வாதப்போர் நடத்தி மகாயான சித்தாந்தத்தைப் பிரசாரம் செய்தார். ஆங்காங்கே ஸங்கிராமம் என்ற பெயரால்

அமரர் கல்கி

வழங்கிய பௌத்த மடங்களையும் நிறுவிக்கொண்டு போனார். அத்தகைய ஸங்கிராமம் ஒன்றை அவர் கிருஷ்ணா நதிக்கரையிலுள்ள ஸ்ரீபர்வதத்திலும் ஸ்தாபித்தார். அதுமுதல் ஸ்ரீபர்வதத்துக்கு நாகார்ஜுனமலை என்ற பெயரும் வழங்கலாயிற்று.

நாகார்ஜுனர் ஸ்தாபித்த மகாயான பௌத்தமதம், புத்த பகவானுடைய சிலைகளை அமைப்பதற்கும், கோயில்கள் கட்டுவதற்கும் அனுமதித்தது. ''நாகார்ஜுன பிக்ஷுவைப் போற்றுகிறேன்'' என்று நாகநந்தி இரண்டுமுறை கூறியதன் கருத்து என்ன என்பது இப்போது நன்கு விளங்குகிறதல்லவா?


நாகநந்தி கூறியதைப் பொருட்படுத்தாமல் சிவகாமி, "அப்பா! இவர்கள் எதற்காக ஒளிந்து கொண்டிருந்தார்கள்?" என்று கேட்டாள்.

"அம்மா! நம் நாகநந்தி அடிகள் இராஜகுலத்தினரைப் பார்ப்பதில்லை என்று விரதம் வைத்துக் கொண்டிருக்கிறார். உனக்குத் தெரியாதா? இந்த வாலிபன் அவருடன் வந்திருந்தபடியால்..."

"அப்பா! சக்கரவர்த்தியும் மாமல்லரும் இவரைப் பார்த்திருந்தால் எவ்வளவு சந்தோஷப்பட்டிருப்பார்கள்? ஒன்று கவனித்தீர்களா? மாமல்லர் கையில் ஒரு வேல் வைத்திருந்தாரே? அது இந்த வீரருடைய வேல்தான்..."

நாகநந்தி மீண்டும் குறுக்கிட்டு, "அதில் என்ன வியப்பு, சிவகாமி! இப்போதுதான் பல்லவ சாம்ராஜ்யத்துக்கு ஆயுதம் தேவையாயிருக்கிறதே? ஊரிலுள்ள உடைந்த வேல், வாள், ஈட்டி எல்லாவற்றையும் தேடிச் சேகரிக்கிறார்களே?" என்றார்.

சிவகாமி அவரை



எரித்துவிடுவது போல் பார்த்துவிட்டு, ''அப்பா! குமார சக்கரவர்த்தி இந்த வீரரிடம் திருப்பிக் கொடுப் பதற்காகவே அந்த வேலைத் தம் கையிலே வைத்திருக்க



லாம். சுத்த வீரத்தைப் பாராட்டுவதில் மாமல்லரைப்போல் யார் உண்டு? இவரை நீங்கள் சக்கரவர்த்தியின் சமூகத்துக்கு உடனே அழைத்துப் போக வேண்டும்'' என்று கூறினாள்.

ஆயனர் தட்டுத் தடுமாறி, "ஆகட்டும் அம்மா! என் உத்தேசமும் அதுதான். பரஞ்சோதி வடக்கே போய்த் திரும்பி வந்ததும் சக்கரவர்த்தியிடம் அழைத்துப் போகிறேன்'' என்றார்.

சக்கரவர்த்தி வந்திருந்த சமயத்தில் சிலையின் பின்னால் ஒளிந்திருக்க நேர்ந்த அவமானத்தினாலும், சிவகாமியின் விஷயத்தில் ஏற்பட்ட இயற்கையான சங்கோஜத்தினாலும் இத்தனை நேரம் பரஞ்சோதி உள்ளமும் குன்றி மௌனமயிருந்தான். ஆனால், சிவகாமி பரிந்து கூறிய வார்த்தை அவனுடைய ஆன்மாவையும் நாவையும் கட்டியிருந்த தளையை அறுத்த மாதிரி இருந்தது. அவன் சிவகாமியை நன்றியுடன் நோக்கி விட்டு, ஆயனரைப் பார்த்து, "ஐயா! தங்கள் குமாரி சொல்வது உண்மைதான். குமாரச் சக்கரவர்த்தியின் கையிலிருந்த வேல் என்னுடைய வேல்தான் என்று எனக்குக்கூடத் தோன்றியது. அதை வாங்கிக் கொடுத்தீர்களானால் நல்லது. நெடுந்தூரம் பிரயாணம் செய்வதற்குக் கையில் ஏதேனும் ஆயுதம் அவசியமல்லவா?'' என்றான்.

அப்போது புத்த பிக்ஷு, "ஆயுதத்துக்குத் தானா இப்போது அவசரம்? வேலும் ஈட்டியும் எத்தனை வேணுமானாலும் நான் சம்பாதித்துத் தருகிறேன். முக்கியமான காரியம் ஆகவில்லையே! குதிரையும் இலச்சினையும் கேட்கத் தவறி விட்டீர்களே, ஆயனரே?'' என்றார்.

"அது என் பொறுப்பு. நாளை மாமல்லபுரத்துக்கு வரும்படி சக்கரவர்த்தி கட்டளையிட்டிருக்கிறார். அங்கே கேட்டு வாங்கிக்கொண்டு வருகிறேன். பிரயாணத்திற்கு மற்ற ஏற்பாடுகளைக் கவனியுங்கள்'' என்றார் ஆயனர்.

"அப்பா! இந்த அண்ணன் நெடுந்தூரம் பிரயாணம் செய்யப் போகிறாரா? எந்த ஊருக்கு? எதற்காக?'' என்று சிவகாமி கேட்டாள்.

"நான்தான் அனுப்புகிறேன், குழந்தாய்! மிகவும் முக்கியமான காரியத்துக்காக. சென்ற ஒன்பது வருஷ காலமாக இரவும் பகலும் நான் கண்டு கொண்டிருந்த கனவு நிறைவேறப் போகிறது. சிவகாமி! இந்த உத்தம புத்த பிக்ஷுவின் உதவியினால் நிறைவேறப் போகிறது'' என்று ஆயனர் கூறிய போது அவருடைய மொழிகளில் முன் போலவே ஆர்வமும் பரபரப்பும் பொங்கித் ததும்பின.

"நீங்கள் என்ன கனவு கண்டீர்கள்? அது எப்படி நிறைவேறப் போகிறது? எனக்கு ஒன்றுமே விளங்கவில்லையே?'' என்றாள் சிவகாமி.

"அஜந்தா மலைக் குகையிலுள்ள அதிசய வர்ணச் சித்தரங்களைப் பற்றி உனக்குப் பல தடவை சொல்லியிருக்கிறேனல்லவா? ஐந்நூறு வருஷம் ஆகியும் அழியாத அந்த வர்ணச் சேர்க்கையின் இரகசியத்தை அறிந்து வருவதற்காகத்தான் இந்தப் பிள்ளையை என் அருமை நண்பரின் மருமகனை, வடக்கே அனுப்பப்போகிறேன்...''

"ஐந்நூறு வருஷத்து வர்ணமாவது, அழியாதிருக்கவாவது? எனக்கு நம்பிக்கைப் படவில்லை, அப்பா!'' என்று சிவகாமி கூறி, சந்தேகமும் அவநம்பிக்கையும் வெளிப்படையாகத் தோன்றிய பார்வையுடன் பிக்ஷுவை நோக்கினாள்.

"அதை நம்புவது கஷ்டந்தான். முதன் முதலில் கேள்விப்பட்டபோது எனக்கும் நம்பிக்கை உண்டாகவில்லை. ஐந்நூறு வருஷம் அழியாத வர்ணம் எப்படி இருக்க முடியும் என்றுதான் எண்ணினேன். நானே கண்ணால் பார்த்த பிறகுதான் நம்பிக்கை உண்டாயிற்று!'' என்றார்.

ஆயனர் இவ்விதம் கூறியதும், புத்த பிக்ஷுவும் சிவகாமியும் தங்களுடைய வியப்பை ஏக காலத்தில் தெரிவித்துக் கொண்டார்கள்.

"கண்ணால் பார்த்தீர்களா? எப்போது?'' என்றாள் சிவகாமி.

"என்னிடம் இத்தனை காலம் சொல்லவில்லையே? தாங்கள் அஜந்தாவுக்குப் போனதுண்டா?'' என்று பிக்ஷு கேட்டார்.

''இல்லை; அஜந்தாவுக்குப் போனதில்லை. ஆனால், சித்தர் மலையிலே பார்த்தேன். அடிகளே! தாங்களும் சித்தர் மலைக்குப் போய் வந்ததாகச் சொன்னீர்களே? அங்கே என்னென்ன அதிசயங்களைக் கண்டீர்கள்?'' என்று ஆயனர் வினவியதும் பிக்ஷுவின் முகத்தில் பிரகாசம் உண்டா

யிற்று.

"ஆ! தெரிகிறது... சித்தர் மலைக்குகையில் ஜீன தீர்த்தங்கரர்களின் உருவங்கள் அழியா வர்ணங்கொண்டு எழுதியிருப்பதைக் கண்டேன். குகையின் வாசற்புறத்தில் இரண்டு அப்ஸர ஸ்திரீகளின் திவ்ய வடிவங்களைப் பரத சாஸ்திரத்தில் சொல்லிய இரண்டு அபூர்வ அபிநயத் தோற்றங்களில் பார்த்தேன். அவற்றை எழுதிய மகா சித்திரக்காரர் யாரோ என்று அதிசயித்தேன்..."

"யார் என்று தெரிந்ததா, சுவாமி?"

"இப்போது தெரிகிறது. அப்பேர்ப்பட்ட தத்ரூபமான ஜீவ வடிவங்களை எழுதக்கூடிய மகா சித்திரக்காரர் தென்னாட்டிலே ஆயனச் சிற்பியைத் தவிர வேறு யார்?"

"ஆம், அடிகளே! அந்த உருவங்களை எழுதியவன் அடியேன்தான். இன்னும் ஏதாவது விசித்திரத்தைக் கவனித்தீர்களா?"

"அந்த அப்ஸர மாதரின் நடன உருவங்கள் இடைக்கு மேலே பிரகாசமாய் நேற்று எழுதியவை போல் விளங்குகின்றன; இடைக்குக் கீழே வர்ணம் மங்கி விளக்கமின்றி இருக்கின்றன."

"ஆ! ஒன்பது வருஷ காலத்தில் அதிகமாக மங்கித்தான் இருக்கும்!" என்றார் ஆயனர். பின்னர், மேற்சொன்ன சித்தர் மலைச் சித்திரங்களைக் குறித்து ஆயனர் முன்னும் பின்னுமாகத் தட்டுத் தடுமாறிக் கூறிய வரலாறு வருமாறு:-

பன்னிரண்டு ஆண்டுகளுக்கு முன்னால் மகேந்திர சக்கரவர்த்தி சமண சமயத்தினராயிருந்த காலத்தில் சோழ மண்டலத்துக்கு அவர் பிரயாணம் சென்ற போது ஆயனரையுங்கூட அழைத்துப் போயிருந்தார். உறையூரில் சோழ மன்னனுடைய உபசாரங்களைப் பெற்றுக் கொண்டு அங்கிருந்த சித்தர் வாச மலையில் சமண முனிவர்கள் ஏற்படுத்தியிருந்த பிரசித்தி பெற்ற சமணப் பள்ளியைப் பார்க்கச்சென்றார். அந்தக் குகைப் பள்ளியில் தீட்டியிருந்த வர்ணச் சித்திரங்களைக் கண்டு சக்கரவர்த்தியும் ஆயனரும் அதிசயித்தனர்.

சித்தர் மலைப் பள்ளியில் மேற்படி ஓவியங்களைத் தீட்டிய முனிவர் அச் சமயம் அங்கே வாசம் செய்துகொண்டிருந்தார். அந்தச் சித்திரங்கள் ஆயிரம் வருஷம் ஆனாலும் அழியாதவை என்று அம் முனிவர் கூறியதைச் சக்கரவர்த்தியும் ஆயனரும் நம்பவில்லை. அஜந்தா சித்திரங்களைப் பற்றி அந்த முனிவர் கூறியதையும் இவர்கள் நம்பவில்லை. அதன் பேரில் அந்தச் சமண முனிவர் ஒரு பந்தயம் போட்டார். அந்தக் கோயிலின் வாசலில் ஆயனர் இரண்டு அப்ஸர மாதரின் நடனத் தோற்றங்களை எழுத வேண்டுமென்றும், மேற்பாதி உருவங்களைத் தாம் குழைத்துக் கொடுக்கும் வர்ணங்களைக் கொண்டும், இடைக்குக் கீழே ஆயனரின் சொந்த வர்ணங்களைக் கொண்டுமே எழுத வேண்டுமென்றும், மூன்று வருஷம் கழித்து மீண்டும் வந்து பார்த்து, தாம் கூறுவது உண்மை என்று நிச்சயிக்கப்பட்டால், ஆயனர் சமண சமயத்தை ஒப்புக் கொள்ள வேண்டுமென்றும் முனிவர் பந்தயத்துக்கு நிபந்தனை விதித்தார். அப்படி ஒப்புக்கொண்டால் மேற்படி வர்ணச் சேர்க்கையின் இரகசியத்தைச் சொல்லிக் கொடுப்பதாகவும் கூறினார்.

நிபந்தனையை ஒப்புக்கொண்ட ஆயனர் மேற்சொன்ன இரு வகை வர்ணங்களை உபயோகித்து அப்ஸர மாதர் சித்திரங்களை எழுதினார். மூன்று வருஷத்துக்குப் பிற்பாடு சித்தர் மலைக்கு மறுபடியும் போய்ப் பார்த்தபோது, ஆயனர் தீட்டிய நடன உருவங்களின் மேற்பகுதிகள் அன்று எழுதியவை போல் வர்ணம் மங்காமல் விளங்கின. கீழ்ப் பகுதிகள் பெரிதும் மங்கிப் போயிருந்தன. இதனால் பெரிதும் அதிசயமடைந்த ஆயனர், நிபந்தனைப்படி சமண மதத்தைத் தழுவி, அந்த இரகசியத்தை அறிந்து கொள்ளச் சித்தமாயிருந்தார். ஆனால், நிபந்தனை விதித்த சமண ஓவியர் அப்போது அங்கு இல்லை! சக்கரவர்த்தி சைவரானது பற்றிக் கோபங்கொண்டு பல்லவ சாம்ராஜ்யத்திலிருந்து போய்விட்ட அநேக சமண முனிவர்களைப் போல் அவரும் போய்விட்டார்! ஆனால், அந்த அழியாத வர்ணச் சேர்க்கையின் இரகசியத்தை அறிந்து கொள்ளுவதில் ஆவல் இன்றுவரையில் வளர்ந்து கொண்டே இருந்தது.

மேற்படி வரலாற்றைக் கேட்டுக் கொண்டிருந்த புத்த பிக்ஷு முடிவில் ஆயனரே!

கவலை வேண்டாம்! உங்களுடைய ஆவல் நிறைவேறும் காலம் நெருங்கி விட்டது. பரஞ்சோதிக்கு நீங்கள் குதிரையும் பிரயாண அனுமதியும் வாங்கிக் கொடுப்பதுதான் தாமதம், வெகு சீக்கிரத்தில் உங்கள் மனோரதம் நிறைவேறும்!" என்றார்.

பரஞ்சோதியும் மிக்க உற்சாகத்துடன், "ஆம், ஐயா! தங்களுடைய மனோரதம் என்னால் நிறைவேறுவதாயிருந்தால் அது என்னுடைய பாக்கியந்தான். என்ன அபாயம் வந்தாலும் பின்வாங்காமல் காரியத்தை முடித்துக் கொண்டு வருகிறேன்" என்றான்.

சிவகாமியின் உள்ளத்திலோ முரண்பட்ட



எண்ணங்கள் தோன்றிப் போட்டியிட்டன. ஆயனருடைய ஆவலையும், அந்த ஆவல் நிறைவேறினால் அவர் அடையக்கூடிய மகத்தான ஆனந்தத்தையும் அவள் அறிந்து தான் இருந்தாள்; ஆனாலும், புத்த பிக்ஷுவின் தூண்டுதலால் நடக்கும் இந்தக் காரியத்தில் ஏதாவது சூதும் சூழ்ச்சியும் இருக்குமோ என்று அவள் மனம் ஐயுற்றது. ஆகவே, பரஞ்சோதியைத் தனியாகப் பார்த்து எச்சரிக்கை செய்ய வேண்டுமென்று அவள் தனக்குள்ளேயே தீர் மானித்துக்கொண்டாள்.

இருபத்து இரண்டாம் அத்தியாயம்

சத்ருக்னன்

ஆயனர் வீட்டிலிருந்து புறப்பட்ட மகேந்திர பல்லவர் குதிரையை விரைவாகச் செலுத்திக்கொண்டு சென்று சற்றுத் தூரத்தில் நின்று கொண்டிருந்த தம் பரிவாரங்களை அடைந்தார். அங்கே குதிரையைச் சற்று நிறுத்தி, கூட்டத்தில் ஒருவன் மீது பார்வையைச் செலுத்தினார்.



அந்த மனிதன் சக்கரவர்த்தியின் பார்வையில் இருந்த சமிக்ஞையைத் தெரிந்து கொண்டவனாய், அவரை நெருங்கி வந்து பணிவாக நின்றான்.

"சத்ருக்னா! உனக்குச் சிற்பக் கலையில் பயிற்சி உண்டா?" என்று சக்கரவர்த்தி கேட்டார்.

சத்ருக்னன் முகத்தில் எவ்வித உணர்ச்சியும் காட்டாமல், "இல்லை, பிரபு!" என்றான்.

"இவ்வளவுதானா? சிற்பக்கலையில் கொஞ்சமாவது உனக்குப் பயிற்சி இருக்க வேண்டும். அதற்கு இந்த இடத்தைக் காட்டிலும் நல்ல இடம் கிடையாது. ஆயனருடைய சீடப் பிள்ளைகள் செய்யும் வேலைகளைக் கவனித்துக் கொண்டிருந்தாலே போதும்."

"ஆக்ஞை, பிரபு! இப்போதே தொடங்குகிறேன்."

"சிற்பம் கற்றுக் கொள்ளப் புதிதாக வேறு யாராவது இங்கே வந்தால் அவர்களையும் நீ கவனித்துக் கொள்ள வேண்டும். ஆனால், அவர்கள் உன்னைக் கவனிக்க வேண்டியதில்லை."

"அப்படியே" என்று சத்ருக்னன் கூறிய போது அவனுடைய புருவங்கள் சிறிது மேலே சென்றன.

"நல்லது; சிற்பக் கலையைப் பற்றிப் புதிதாக ஏதேனும் தெரிந்துகொண்டால் உடனே வந்து எனக்குத் தெரிவிக்க வேண்டும்."

இவ்விதம் கூறிவிட்டுச் சக்கரவர்த்தி மீண்டும் குதிரையை வேகமாக விட்டார். அவரைத் தொடர்ந்து குமார சக்கரவர்த்தியும் குதிரையை வேகமாகச் செலுத்த, மற்ற பரிவாரங்கள் அவர்களைப் பின் தொடர முடியாமல் பின் தங்கும்படி நேர்ந்தது.

சக்கரவர்த்திக்கும் சத்ருக்னனுக்கும் நடந்த சம்பாஷணை அரைகுறையாக நரசிம்மரின் செவியில் விழுந்தது. அது அவருடைய மனத்தில் பெருங்குழப்பத்தை உண்டாக்கிற்று. சிவகாமி கூறியபடி ஆயனரின் வீட்டில் வேலெறிந்த வாலிபனைக் காணாதது மாமல்லருக்கு ஏற்கெனவே வியப்பை உண்டாக்கியிருந்தது. இப்போது சக்கரவர்த்தி, ஆயனர் வீட்டைக் காவல் புரியும்படி பல்லவ ராஜ்யத்தின் மகா சமர்த்தனான ஒற்றனை ஏவியது மாமல்லரின் வியப்பைப் பன்மடங்கு அதிகமாக்கியதுடன், அவருடைய மனத்தில் என்னவெல்லாமோ சந்தேகங்களைக் கிளப்புவதற்கு ஏதுவாயிற்று. அதைப் பற்றித் தந்தையைக் கேட்க வேண்டுமென்று அவர் எண்ணினார். ஆனால், மகேந்திரரோ அந்தக் காட்டு வழியில் குதிரையைப் பாய்ச்சலில் விட்டுக் கொண்டு போனார். சக்கரவர்த்தி குதிரையை விரைவாகச் செலுத்தினால் அவர் ஏதோ முக்கியமான விஷயத்தைப் பற்றிச் சிந்தனை செய்வதற்கு அறிகுறி என்பதை மாமல்லர் அறிந்தவரானபடியால், விஷயத்தைத் தெரிந்துகொள்ள அவருடைய ஆவல் இன்னும் அதிகமாயிற்று. அவருடைய குதிரையும் நாலுகால் பாய்ச்சலில் சென்றது.

காட்டைத் தாண்டியதும் காஞ்சியிலிருந்து மாமல்லபுரத்துக்குப் போகும் இராஜபாட்டை தென்பட்டது. அந்தச் சாலையோரமாக ஒரு பெரிய கால்வாய் ஓடிற்று. அந்தக் கால்வாயில் ஒன்றன்பின் ஒன்றாகப் படகுகள் காஞ்சியை நோக்கிப் போய்க்கொண்டிருந்தன. படகுகளில் பெரும்பாலும் நெல் மூட்டைகள் ஏற்றியிருந்தன. ஒவ்வொரு படகையும் இரண்டு ஆட்கள் தள்ளிக்கொண்டு வந்தார்கள்.

இரு புறத்திலும் மரமடர்ந்த விசாலமான சாலையும், தெளிந்த நீரையுடைய கால்வாயும், கால்வாயில் மிதந்து வந்த படகுகளும், கால்வாய்க்கு அப்பால் மரங்களின் வழியாக வெகு தூரத்துக்குத் தெரிந்த பசுமையான சமவெளியும் மனோகரமாகக் காட்சியளித்தன. கால்வாய் நீரில் ஆங்காங்கு மரங்களின் கருநிழல் படிந்திருந்த இடங்கள் கண்களைக் குளிரச் செய்தன. சற்றுத் தூரத்திலே சென்ற படகுகளில் ஒன்றிலிருந்து படகோட்டி ஒருவன்,

செங்கனி வாயில் ஒரு
வேய்ங்குழல் கொண்டிசைத்து
தேனிசைதான் பொழிவோன்
யார் யார் யார்? கிளியே!
செந்தாமரை முகத்தில்
மந்தகாசம் புரிந்து
சிந்தை திரையாய்க் கொள்வோன்
யார் யார் யார்? கிளியே!

என்று இனிய குரலில் உணர்ச்சி ததும்பப் பாடிய இன்னிசைக் கீதம் இளங்காற்றிலே மிதந்து வந்தது.



இத்தகைய சாந்தமும் இன்பமும் அமைதியும் அழகும் குடிகொண்ட காட்சியைக் குலைத்துக் கொண்டும், "இது பொய்யான அமைதி; சீக்கிரத்திலே இடியும் மழையும் புயலும் பூகம்பமும் வரப் போகின்றன!" என்று மௌனப் பறையறைந்து தெரிவித்துக்கொண்டும் அக்கால் வாயில் நெல்லேற்றிய படகுகளுக்கு நடுவிலே ஆயுதங்கள் ஏற்றிய படகு ஒன்றும் வந்து கொண்டிருந்தது. அதில் வேல், வாள், ஈட்டி, சுத்தி, கேடயம் முதலிய வித விதமான போர்க் கருவிகள் நிறைந்திருந்தன.

அதுவரையில் மௌனமாக நின்று அந்தக் காட்சியைப் பார்த்துக் கொண்டிருந்த சக்கரவர்த்தி ஆயுதப் படையைக் கண்டதும், "ஆகா, பல்லவ சாம்ராஜ்யத்தில் யுத்த ஆயத்தங்கள் பலமாகத்தான் நடக்கின்றன!" என்று பரிகாசமும் மனக் கசப்பும் தொனித்த குரலில் கூறிவிட்டு, பக்கத்திலே குதிரை மேலிருந்த தம் குமாரரைப் பார்த்தார். அவருடைய முகத் தோற்றத்தைக் கவனித்ததும், "நரசிம்மா! ஏதோ கேட்க விரும்புகிறாய் போலிருக்கிறதே!" என்றார்.

"எப்படித் தெரிந்தது, அப்பா!" என்றார் குமார சக்கரவர்த்தி.

"உன் முகம் தெரிவிக்கிறது. அபிநயக் கலை முகபாவம் ஆகியவைகளைப் பற்றி இப்போதுதானே பேசிவிட்டு வந்தோம்?- கேட்க விரும்பியதைக் கேள்!" என்றார் தந்தை.

"சத்ருக்னனை எங்கே அனுப்பினீர்கள்!"

"ஆயனர் வீட்டுக்கு."

"எதற்காக?"

"ஒற்றனை வேறு எதற்காக அனுப்புவார்கள்? வேவு பார்ப்பதற்குத்தான்!"

"என்ன சொல்கிறீர்கள், அப்பா! ஆயனச் சிற்பியின் வீட்டை வேவு பார்க்கும்படியான அவசியம் என்ன ஏற்பட்டது?"

"யுத்த காலத்தில் சர்வ ஜாக்கிரதையாகயிருக்க வேண்டும் மாமல்லா! இம் மாதிரி சமயங்களில் சந்நியாசியின் காவித் துணிக்குள்ளே எதிரியின் ஒற்றன் ஒளிந்திருக்கலாம். சிற்பக் கலைக்குள்ளே சதியாலோசனை இருக்கலாம்..."

நரசிம்மர் தம்மை மீறிய பதைபதைப்புடன், "ஆகா! இது என்ன? ஆயனச் சிற்பியா நமக்கு எதிராகச் சதி செய்கிறார்? என்னால் நம்ப முடியவில்லையே!" என்றார்.

"ஆயனச் சிற்பி சதி செய்வதாக நான் சொல்லவில்லையே? அந்தப் பரமசாது நமக்காக உயிரையே விடக் கூடியவராயிற்றே!"

மாமல்லர் சிறிது சாந்தம் அடைந்து, "அப்படியானால் ஆயனர் வீட்டுக்கு ஒற்றனுடைய காவல் எதற்காக?" என்று கேட்டார்.

"கள்ளங்கபடமற்ற அந்தச் சாது சிற்பிக்குத் தெரியாமல் அவர் வீட்டில் பகைவர்களின் ஒற்றர்கள் இருக்கலாம் அல்லவா?"

"ஆயனர் வீட்டில் ஒற்றர்களா? தங்களுக்கு எப்படித் தெரிந்தது? நான் ஒருவரையும் பார்க்கவில்லையே?"

"மாமல்லா! இராஜ்ய நிர்வாகத்தில் ஈடுபட்டவர்களுக்கு எப்போதும் கண்ணும் காதும் திறந்திருக்க வேண்டும். யுத்த காலத்தில் இது மிகவும் அவசியம். ஆயனர் வீட்டில் நாம் இருந்தபோது உன் கண்கள், என்ன செய்து கொண்டிருந்தன?" என்று கேட்ட வண்ணம் சக்கரவர்த்தி நரசிம்மரின் முகத்தை ஏறிட்டுப் பார்த்தார்.

அங்கே தம் கண்கள் சிவகாமியின் கண்களுடன் அந்தரங்கம் பேசுவதிலேயே பெரிதும் ஈடுபட்டிருந்தன என்பது ஞாபகம் வரவே நரசிம்மருடைய பால் வடியும் இளம் வதனம் வெட்கத்தினால் சிவந்தது. அதே சமயத்தில் முன்னைவிட அதிக தூரத்திலிருந்து படகோட்டியின் இனிய கீதம் மெல்லிய குரலில் பின் வருமாறு கேட்டது:

கண்ணன் என்றங்கேயொரு
கள்வன் உளன் என்று
கன்னியர் சொன்னதெல்லாம்
மெய்தானோ? கிளியே!
வெண்ணெய் திருடும் பிள்ளை
என்னுள்ளம் கவர்ந்ததென்ன?
கண்ணால் மொழிந்ததென்ன?
சொல்வாய்! பைங்கிளியே!

(தொடரும்)

சொல்லுங்கள் கேட்கப்படும்!

"மேற்கு வங்கத்திலிருந்து வந்திருக்கும் கோபாலகிருஷ்ணா, தமது அனுபவத்தைப் பகிர்ந்து கொள்கிறார்" என்று அறிவித்ததும் அங்கே அமைதி.

கோட்-சூட் சகிதம் ஒரு தனியார் நிறுவனத்தின் பொது மேலாளரைப் போலிருந்த கோபாலகிருஷ்ணா பேசத் தொடங்கினார்.

"எனக்கு இப்போது நாற்பது வயது. முப்பத்து இரண்டு வயதில் பெற்றோர் ஏற்பாடு செய்த திருமணம். வாழ்க்கையைச் சந்தோஷமாகத்தான் தொடங்கினேன். ஆனால் தொடக்கத்திலிருந்தே மனைவி சோர்வுடன் காணப்பட்டாள். அவளிடம் மனம்விட்டுப் பேசி பிரச்னையை அறிய முயன்றேன். பிடிகொடுக்கவில்லை. தாம்பத்ய வாழ்க்கைக்குச் சம்மதித்தாலும் இன்னும் இரண்டு வருடங்களுக்குக் குழந்தை வேண்டாம் என்றாள். முப்பது வயதுக்கு முன்பாக குழந்தை பேற்றை முடித்துவிட வேண்டும் என்று வற்புறுத்தினேன். அவள் தீவிரமாக மறுத்தாள். என்னதான் படிப்பும், அனுபவமும் இருந்தாலும், எனக்குள்ளிருந்த சராசரி மனிதனுக்கு, மனைவியைப் பற்றி சந்தேகம். உடன் அவளைப் பற்றியத் தகவல்களை இரகசியமாகச் சேகரித்தேன். திருமணத்திற்கு முன் அவளுக்கு ஒரு காதல் உண்டென்பதைக் கண்டுபிடித்தேன். அதைப் பற்றி அவளிடமே பேசினேன். நீ விரும்பினால் முறைப்படி மணவிலக்குப் பெற்றுக் கொள்ளலாம். இல்லையென்றால் சந்தோஷமாக வாழ்க்கையைத் தொடருவோம் என்றேன். சரி என்று சம்மதித்தாள்.

ஆனால் அடுத்த ஆறு மாதத்தில் என் மனைவி தன் காதலனோடு ஓடிப் போய்விட்டாள். ஏமாந்துவிட்டோமோ? என்ற எண்ணம்தான் முதலில் என்னை வாட்டியது. சுற்றியிருந்தவர்கள் நடந்தது எதையும் புரிந்து கொள்ளாமல் எனது ஆண்மை குறித்து கேள்வி எழுப்பினார்கள். எனது தரப்பு நியாயங்களை யாரும் கேட்கவில்லையே என்கிற விரக்தியும், பயமும் ஏற்பட்டது. தூக்க மாத்திரைகளைச் சாப்பிட்டுத் தற்கொலைக்கு முயன்றேன். எதிர்பாராமல் என் வீட்டிற்கு வந்த நண்பனால் காப்பாற்றப்பட்டேன். அதன் பிறகு அவன் அழைத்துச் சென்ற ஒரு தன்னார்வத் தற்கொலை தடுப்பு அமைப்பில் எனக்குக் கொடுக்கப்பட்ட 'லிசனிங்தெரபி'யால் என் வாழ்க்கையே மாறிவிட்டது. இன்று தற்கொலை தடுப்பு இயக்கத்தில் என்னையும் ஒரு தன்னார்வத் தொண்டனாக இணைத்துக் கொண்டிருக்கிறேன். ஆனால் தற்கொலை முயற்சியிலிருந்து மீண்டு வந்த என்னைச் சட்டம் விடவில்லை. தற்கொலைக்கு முயன்றது கிரிமினல் குற்றமாகக் கருதப்பட்டு, ஓராண்டு சிறைதண்டனை வழங்கினார்கள்.



ஓராண்டு சிறை வாழ்க்கை எனக்கு அதிக மன உளைச்சலைக் கொடுத்தது. தற்கொலை முயற்சியைக் கிரிமினல் குற்றமாகக் கருதும் சட்டத்தை நான் எதிர்க்கவில்லை. ஆனால், இத்தனை பெரிய தண்டனை தேவையா? என்பதுதான் எனது கேள்வி" என்று கோபால

கிருஷ்ணன் அமர்ந்ததும் அவர் எழுப்பிய கேள்வி மீதான விவாதம், அங்கே அனல் பறந்தது. தற்கொலை முயற்சி மீதான தண்டனைச் சட்டத்தில் தேவைப்படும் மாற்றங்கள் குறித்து அங்கே தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.

பன்னாட்டுத் தற்கொலை தடுப்பு இணை



• ராம்

யத்தின், 21வது சர்வதேச மாநாட்டின் இரண்டாவது நாள் அமர்வில்தான் இந்த விவாதமும் தீர்மானமும். முப்பது நாடுகளைச் சேர்ந்த இருநூற்றி ஐம்பது நிபுணர்கள், சமூக சேவகர்கள், தன்னார்வத் தொண்டர்கள் என்று நிரம்பி வழிந்தது கூட்ட அரங்கம்.

செப்டெம்பர் 22-ல் தொடங்கி 26 வரை நடைபெற்ற இந்த நான்கு நாள் மாநாட்டில் இதுபோன்று முப்பத்து இரண்டு வெவ்வேறு தலைப்புகளில் நடத்தப்பட்ட ஒவ்வொரு அமர்வும், தற்கொலைகளின் உலகளாவிய பார்வையைக் கண்முன்நிறுத்தின. இத்தனை பெரிய மாநாட்டுக்கு ஏற்பாடு செய்திருந்தவர்கள் சினேகா அமைப்பினர்.

"உலக அனுபவங்களை உள்வாங்கிக் கொண்டு, நம் நாட்டிற்கு உகந்தவாறு அவற்றைப் பயன்படுத்தித் தற்கொலைகளைத் தடுக்க வேண்டும் என்கிற எண்ணமே இந்த மாநாட்டை சென்னையில் நடத்தத் தூண்டியது" என்கிறார் சினேகாவின் இயக்குனர் ராம்!

"தற்கொலை செய்து கொள்ள அதிக தைரியம் தேவைப்படுகிறது. அதற்காக அதை வீரமான செயல் என்று சொல்லிவிட முடியாது. பயம், கோபம், இயலாமை, நம்பிக்கையின்மை போன்ற எதிர் மறையான எண்ணங்கள்தான் மன அழுத்தம் நோக்கி ஒருவரைத் தள்ளி விடுகின்றன. மனஅழுத்தம் விரக்தியாக மாறி, தற்கொலை எண்ணத்தை நாட வைக்கிறது. தற்கொலை எண்ணம் வந்த பிறகு இந்த பிரச்னைகளோடு, நாம் வாழத்தான் வேண்டுமா? என்ற எண்ணமும், வாழ்ந்து தான் பார்ப்போமே? என்ற எண்ணமும் வரும். இருதலைக் கொள்ளி எறும்புபோன்ற தவிப்பு இது. இந்த நேரத்தில் ஓர் உற்ற நண்பனாக, குறைகளைக் காது கொடுத்துக் கேட்க நான் இருக்கிறேன் என்று கதவுகளை எப்போதும் திறந்து வைத்திருப்பதுதான் சினேகா" என்று சொல்லும் ராம், தற்போது அங்கே தரப்படும் 'விசனிங் தெரபி' பற்றிச் சொல்கிறார்.

'நான் கண்ட காட்சியை நீ காணவில்லை. என்பார்வை போல, உன் பார்வை இல்லை' என்ற கண்ணதாசனின் பாடல் வரிகள் விசனிங் தெரபியோடு அதிக தொடர்புடையவை. ஒரு பிடிமானம் தேடி வருபவரின் பிரச்னையைக் கூடு விட்டு கூடு பாய்தல்போல, நம் பிரச்னையாக உள்வாங்கிக் கொள்ள வேண்டும். அதைத்தான் நாங்கள் 'befriending' (நட்புறவு) மூலம் செய்கிறோம். இங்கே Sympathy கிடையாது. உதவி தேடி வருபவரின் பிரச்னையை அவர் கண்ணோட்டத்தில் பார்க்கும் empathyதான் உண்டு. மற்றொரு முக்கியமான விஷயம் இங்கு ஆலோசனை எதுவும் நாங்கள் தருவதில்லை. பிரச்னைக்கான தீர்வு சம்பந்தப்பட்டவரிடமே இருப்பதை நண்பனாக இருந்து உணர்த்துகிறோம். அதற்கு அவரைப் பற்றி அத்தனை விவரங்களையும் நாங்கள் ரகசியமாகப் பாதுகாக்கிறோம்" என்கிறார்.

சினேகா தொடங்கப்பட்டுப் பதினைந்து ஆண்டுகள் நிறைந்துவிட்ட நிலையில், இதுவரை ஒரு லட்சம் பேர் இவர்களிடம் பிடிமானம் தேடி வந்திருக்கிறார்களாம்!

சந்திப்பு: **சக்கரம்**
படங்கள்: **ராஜன்**

ஒரு தமிழர்!



இந்தியைத் தாய்மொழியாக கொள்ளாதவர்களின், இந்தி மொழி சாதனைக்கு, மத்திய அரசின் மொழி அமைப்பும், மனிதவள மேம்பாட்டுத் துறையும் இணைந்து ஆண்டுதோறும் விருது வழங்கி வருகிறது. இந்த வருடம் 'சல்மா' என்ற இந்தி நாவலுக்கு இந்த விருது கிடைத்திருக்கிறது. இந்நாவலை இந்தியில் எழுதியிருப்பவர் பெங்களூரைச் சேர்ந்த டி.ஆர். வரதராஜன். இவர் ஒரு தமிழர்!

"பிரதமரிடமிருந்து விருது வாங்கியதைப் பெரிய கௌரவமாகக் கருதுகிறேன். இந்த விருதுக்காக அவரது வீட்டில் ஸ்பெஷல் விழா நடத்தியது என்னால் மறக்க முடியாது" என்று கூறும் வரதராஜன் தற்போது வங்கியொன்றில் பணிபுரிகிறார். இதற்கு முன் சமஸ்கிருத ஆசிரியராக வேலை பார்த்த அனுபவமும் உண்டு.

"சல்மா - ஓர் இஸ்லாமிய பெண், உடுப்பி பிராமணர் ஒருவரைத் திருமணம் செய்துகொண்டு அவள் சந்திக்கும் விஷயங்கள்தான் இந்நாவல். தேசிய ஒருமைபாட்டையும், மத நல்லிணக்கத்தையும் வலியுறுத்துவதற்காக இதைப் படைத்திருக்கிறேன்" என்று சொல்லும் வரதராஜன் இந்நாவலை வெளியிட பல பதிப்பாளர்களைத் தொடர்பு கொண்டும் எல்லோரும் 'நஹி' சொல்லிவிட, தாமாக வெளியிட்டாராம்.

கன்னடத்தில் இரண்டு நாவல்களும், இரண்டு கவிதைப் புத்தகங்களும் எழுதியிருக்கும் இவர், தமது ஓய்வு நேரங்களில் குடிசைப் பகுதிகளுக்குச் சென்று குழந்தைகளுக்குப் பாட புத்தகம் வழங்குவது, பாடம் நடத்துவது போன்றவற்றைச் செய்து வருகிறார். இரத்த தானத்தில் ஆர்வம் காட்டி வரும் இந்த மனிதர் நாற்பது முறை இரத்ததானமும் செய்திருக்கிறாராம்!

"ஆண்டாள் 'திருப்பாவை'யை நான் தமிழிலிருந்து மொழி பெயர்த்திருப்பது எனக்கு ஆத்ம திருப்தி ஏற்படுத்தும் விஷயம். இன்னும் ஆங்கிலத்திலத்திலும் கன்னடத்திலும் அதிகமாக எழுதப் போகிறேன். கூடவே சமூக சேவையிலும் என் மனம் நிற்கும்" என்கிறார் வரதராஜன்.

— பெங்களூர் மூர்த்தி

வைரமுடைய நெஞ்சு வேண்டும்

போராட்டமே வாழ்க்கையாக...!

நினைத்த மாத்திரத்தில், இன்று யாரும் வீதி நாடகம் நடத்த முடியும் என்பதே, அதன் பலமும், பலவீனமுமாய் இருக்கையில், கடந்த பதினைந்து ஆண்டுகளுக்கு முன் 'சென்னைக் கலைக் குழு'வைத் தொடங்கி, வீதி நாடகத்திற்கு ஒரு புதிய பரிமாணத்தைக் கொடுத்து, அதைப் பிரபலப்படுத்தியவர் பிரளயன்.

புகழோ, பொருளோ அத்தனை சீக்கிரம் கிட்டிவிடாத வீதி நாடகத் துறையில், இந்திய அளவில் அறியப்படும் இவர், இங்கிருந்து வெளியேறி வேறு 'பிழைப்புத்' தேடி போய்விடாமல், போராடி வெற்றி பெற்றிருக்கிறார்.

"கணிதப்பட்டதாரி என்ற தகுதியோடு, சொந்த ஊர் திருவண்ணாமலையை விட்டு, வேலை தேடி சென்னை வந்தேன். மயிலாப்பூரிலிருந்த சிறிய அறையொன்றில் அடைக்கலம் கிடைத்தது. கணிப்பொறித்துறையில் ஒரு புரோகிராமராக ஆகிவிடுவது என்ற முடிவுடன், ஒருபுறம் பயிற்சி வகுப்புகளுக்குப் போய்க் கொண்டிருந்தேன். மறுபுறம் என்னை ஈர்த்த சிறுபத்திரிகைகளோடு தொடர்பை ஏற்படுத்திக் கொண்டு, கவிதை மீதான ஆர்வத்தையும் வளர்த்துக் கொண்டேன். மொழியின் உச்சமான வெளிப்பாடாக, எப்படிக் கவிதையைக் கருதுகிறோமோ, அதைப்போல காட்சியின் உச்சம் நாடகம் என்று நான் கருதினேன். காரணம் பள்ளியில் தொடங்கிய நாடக ஆர்வம், சினிமாவின் மீது திசை திரும்பி, ஒரு பிலிம்சொசைட்டி ஆரம்பித்து நடத்தும் அளவிற்கு உயர்ந்தாலும், சென்னை வந்த பிறகு, பல நவீன நாடக முயற்சிகளை நேரடியாகக் கண்டு, விவாதித்தது எனக்குள் திடமான தீர்மானத்தை உருவாக்கியது. இரத்தமும் சதையுமான பாத்திரங்களை நேருக்கு நேர் சந்திக்கும் நேரடி உறவை, நாடகம் மட்டுமே பார்வையாளனுக்குக் கொடுக்க முடியும் என்று உணர்ந்து கொண்டதன் விளைவே இந்தத் தீர்மானம்.

தமிழ்நாடு முற்போக்கு எழுத்தாளர் சங்



கல்கி-60

கம், 1984ல் சென்னையில் ஒரு நாடக விழாவை நடத்தியது. அந்த விழாவை முன்னின்று நடத்திய கோமல் சுவாமிநாதனும், த.மு.எ.ச. தலைவர் செந்தில்நாதனும் என்னை அழைத்து, "நீங்களும் ஒரு நாடகம் போடலாமே" என்றார்கள். உடனே ஒத்த கருத்துள்ள இருபத்தைந்து நண்பர்கள் ஒன்றிணைந்து 'நாங்கள் வருகிறோம்' என்ற மேடை நாடகத்தை அந்த விழாவில் போட்டோம். நல்ல வரவேற்பு. அதற்குக் காரணம் இருந்தது. அப்போது தமிழகத்தில் 'போலீஸ் ராஜ்' என்று சொல்லும்படி நிறைய மனித உரிமை மீறல்கள் நடந்தன. குறிப்பாக நாடகக் கலைஞர்கள் மீது நூற்று முப்பத்துநான்கு வழக்குகள் தொடுக்கப்பட்டன. ஓவியர்கள், கவிஞர்களைக் கொண்டு, பெசன்ட் நகர் கடற்கரையில் புதுமையான நாடகம் ஒன்றை நடத்திய உலகப்புகழ் பெற்ற நாடகக் கலைஞர் சந்திரலேகா மீதும், உளவு பார்த்ததாக அரசு வழக்குத் தொடுத்தது. கலைஞர்கள் மீதான இந்தத் தாக்குதலை விமர்சிக்கும் விதமாக இருந்தது எங்களின் முதல் நாடகம்.



பிரளயன்



• 'உரம்' நாடகத்திலிருந்து...

இதற்குக் கிடைத்த வரவேற்பைத் தொடர்ந்து பல்வேறு இடங்களில் இதை நிகழ்த்தினோம். அடுத்து போபால் விஷவாய்வு பற்றிய நாடகம். எங்களுக்கு அழைப்புகள் அதிகமிருந்தாலும், நிகழ்த்துவதற்கான வசதிகளை அமைத்துத் தர முடியாமல், ஏற்பாடு செய்பவர்கள் மிகவும் சிரமப்பட்டார்கள். இந்த நேரத்தில் தான் எந்த இடத்திலும் நிகழ்த்தும்படியான ஒரு நாடக வடிவத்தை ஏன் நாம் தேர்ந்தெடுத்துக் கொள்ளக் கூடாது என்ற கேள்வி வந்தது. அப்போது தில்லியில் செயல்பட்டு வந்த 'ஜனநாட்ய மஞ்ச்' என்ற வீதி நாடகக் குழுவின் புகழ்பெற்ற 'பெண்' நாடகத்தைத் தமிழில் மொழிபெயர்த்துக் கொண்டோம். நாடகப் பொருட்கள், உடை, பேக் டிராப் போன்றவற்றை எளிமையாகச் சுருட்டி எடுத்து சென்று, எந்த இடத்திலும் போடும்படியான நாடகமாக அது இருந்தது. ஆனால் மிகப் பெரிய சவால் எங்களுக்காக காத்திருந்தது.

மேடையில் போட்டால் மேடை நாடகம், வீதியில் போட்டால் வீதி நாடகம் என்று சாதாரணமாக நாங்கள் நினைத்தோம். திரட்டப்பட்ட பார்வையாளர்கள் மேடைக்கு உண்டு. ஆனால் ஏதேனும் ஒரு வெட்ட வெளியில் சென்று, எதேச்சையாக அங்கு குழுமுகிற பாதசாரிகளையும், என்ன நடக்கிறது என்று எட்டிப்பார்ப்பவர்களையும் தமது நாடக நிகழ்வின் மூலம் பார்வையாளனாக மாற்றிக் கொள்ள வேண்டிய கட்டாயத்தில் வீதி நாடகம் இருக்கிறது. நாடகம் நிகழும்போது, பார்வையாளர்கள் சலிப்புற்று எழுந்து சென்று விட்டால், வீதி நாடகம் முழுமையடையாமல் தோற்றுவிடுகிறது. இது இரண்டாவது சவால். தீவிரமான சமூக அக்கறையும் வேண்டியுள்ளது.

எனவே பார்வையாளனை ஈர்க்கக் கூடிய 'நாடகமொழி' மற்ற நாடகங்களை விட, வீதி நாடகத்திற்கு அவசியம் என்பதை உணர்ந்த அதே நேரம், வீதி நாடகக் கலைஞ னது உடல்மொழியிலும் மாற்றம் தேவை என்பதை உணர்ந்து, நமது பாரம்பரிய நடனம், இசை ஆகியவற்றின் தாக்கமும், சாயலும் மிக்க உடல்மொழியைக் கண்டு பிடித்தோம்.

"இந்தப் பகுதியிலே பாலம்கட்ட நான்தான் காண்ட்ராக்ட் எடுத்தி ருக்கேன்..."
"முன் ஜாமீன் எடுத்துட்டீங் களா?"
- தஞ்சை தாமு


'முற்றுபுள்ளி' என்ற நாடகத்தை 1988ல் ராயப்பேட்டையின் தெருமுனை ஒன்றில் நடத்திக் கொண்டிருந்தோம். அங்கே வந்த ரோந்துப் போலீசார் நிறுத்தச் சொன்னார் கள். பார்வையாளர்களோ போலீசாருக்கு எதிராக நடத்தச் சொன்னார்கள். அவமா னத்துடன் போலீசார் திரும்பிச் சென்றனர். இரண்டு தினங்கள் கழித்து, மயிலாப்பூர் பிச்சுப்பிள்ளைத் தெருவில், ஒரு விடுதியில் தங்கியிருந்த என்னையும், என்னோடு எந்த தொடர்பும் இல்லாத அங்கிருந்த முப்பது இளைஞர்களையும் கைது செய்தார்கள். அதில் புரோகிதம் செய்து வந்த இளைஞரும் உண்டு. எங்கள் இசைக் கருவிகளை நடு ரோட்டில் போட்டு உடைத்து, எனது புத் தகங்களைச் சித்திரக் குளத்தில் வீசியெறிந்த போலீசார், நாங்கள் வன்முறையில் ஈடுபடக் கூடும் என்று பாதுகாப்புப் பிரிவில் ஆறுநாள் சிறையில் அடைத்தார்கள். இதற் கிடையில் புரோகிராம் டிரைனியாக ஒரு முன்னணி தனியார் நிறுவனத்தில் நான் செய்து வந்த வேலையை, நாடகத்திற்காக விட்டுவிட வேண்டிய சூழல் வந்தது. என்னைப் போலவே என் குழுவில் இருந்த பலரும், தங்களது தனியார் துறை வேலையை அடிக்கடி மாற்றிக் கொள்ள வேண்டிய சூழ்நிலை ஏற்பட்டது. போராட்டமே வாழ்க்கையானது.

இதற்காகவெல்லாம், நானோ எனது குழுவோ கலங்கிவிடவில்லை. ஆனால் அடி மனத்தில் ஒரு சின்ன வருத்தம் இழை யோடிக் கொண்டிருந்தது. சபா நாடகங் களைவிடவும், நவீன முயற்சிகள் என்று சொல்லப்படுகிற நாடகங்களைவிடவும், அதிகம் நிகழ்த்தப்பட்டு, அதிக மக்களைச் சந்திக்கும் வீதி நாடகத்தை ஒரு கலையாகக் கருதி, அதற்குக் 'கலை மதிப்பீடு' தர மறுத்த கால கட்டத்தில் நாங்கள் வீதி நாடகத்தைத் தூக்கிப் பிடித்து வந்தோம். வீதி நாடகத்தில் நடிக்க வருவதற்கே அதிக துணிவு தேவைப் பட்ட காலகட்டத்தில்தான் தேசமே திரும்பிப் பார்த்த அந்தப் படுகொலை நடந் தது.

தில்லியில் கல்லூரிப் பேராசிரியராகவும் பிறகு அரசு நிறுவனமொன்றில் மக்கள் தொடர்பாளராகவும் பணியாற்றிக் கொண்டிருந்த சப்தர் ஹாஷ்மி, தமது வேலையை உதறிவிட்டு முழுநேர வீதி நாடகக் கலைஞரானார். இவர் உருவாக்கிய 'ஜனநாட்டிய மஞ்ச்' எனும் வீதி நாடகக் குழு சர்வதேச அளவில் பிரபலமானதோடு, வீதிநாடகக் கலையின் எல்லைகளையும் விரிவாக்கியது. 1989-ஆம் ஆண்டு ஜனவரி முதல்தேதி தில்லி அருகேயுள்ள 'சாய் வாபாத்' என்ற புறநகரில் ஹல்லாபோல் (உரக்கப்பேசு) என்ற நாடகத்தை தமது குழுவுடன் நடுப்பகலில் நிகழ்த்திக் கொண்டி ருந்தார். அப்போது அங்கே வந்த ஐம்பது ரவுடிகள், அவரை நடுரோட்டில் அடித்துக் கொன்றனர். நாடகத்தை ஏற்பாடு செய்த ராம்பகதூர் எனும் தொழிலாளியும் கட்டுக் கொல்லப்பட்டார்.

இவரின் படுகொலைக்குப் பிறகு நாடெங் கும் மிகப்பெரிய எழுச்சி ஏற்பட்டது. நாடெங்கும் பல புதிய வீதி நாடகக் குழுக் கள் உருவாயின. ஷப்னா ஆஸ்மி போன்ற திரைக் கலைஞர்கள் வீதி நாடகத்தில் நடிக்க முன் வந்தார்கள். நாடகப்பள்ளிகளும், பல்கலைக் கழகங்களும் வீதி நாடகத்தைக் கவனிக்கத் தொடங்கின சப்தர்ஹஷ்மி கொல்லப்பட்ட மூன்று மாதங்கள் கழித்து, ஏப்ரல் பன்னிரண்டாம் தேதி அவரது பிறந்தநாள். அதே நாளில், எந்த நாடகத்தை நிகழ்த்தும்போது அவர் கொல்லப்பட் டாரோ அதே நாடகத்தைத் தமிழில் மொழி பெயர்த்து மெரினா கடற்கரையில் நிகழ்த்தினோம்.

வீதிநாடகம் இன்று அறிவொளி இயக்கத்தில் ஆரம்பித்து, எச்.ஐ.வி., தேர்தல் பிரசாரங்களுக்குப் பயன்படுத்தும் ஒரு புத்தி புகட்டும் 'பிரசாரக்குப்பை'யாக மாறி இருக்



கிறது. வீதி நாடகங்களை நடத்த டெண்டர்கள் கோரப்படுகின்றன.

வீதி நாடகம் மூலம் மக்களுக்கு அறிவுரை சொல்லவோ, புத்தி புகட்டவோ நினைத்தால், எழுந்து போய்விடுவார்கள். வீதி நாடகம் என்பது மக்களுடைய கருத்தை மக்களுக்குச் சொல்வதுதானே தவிர யாருடைய கருத்தையும் அதில் திணிக்க முடியாது. அப்படித் திணித்தால் அது வீதி நாடகம் அல்ல. நாங்கள் பலநூறு இடங்களில் நிகழ்த்திய ஒரு நாடகம் 'மாநகர்.'

திறந்திருந்த பாதாளச் சாக்கடையில் விழுந்து ஒரு குழந்தை இறந்துவிடுகிறது. ஒரு புறத்தில் காணாமல் போன குழந்தையைத் தேடி, 'மல்லிகா மல்லிகா' என்று கதறி அழுதபடி வருகிறாள் இளம்தாய். அவளது கதறல், ரேஷனுக்காகவும், குடிதண்ணீருக்காகவும், கழிப்பறைக்காகவும் முண்டியடித்துக் கொள்கிற நகர்ப்புறத்தின் கொடூரமான இரைச்சலுக்குள் மூழ்கிப்போகிறது – அந்தக் குழந்தையைப் போலவே.

இருபது நிமிடமே நடைபெறும் இந்த நாடகத்தின் காட்சிப் படிமங்கள். பாடல்கள், அசைவுகள், கூர்மையான, சுருக்கமான வசனங்கள் மூலம் சித்திரிக்கப்படுகின்றன. கண்ணிமைக்கும் நேரத்தில் பார்வையாளர்களைப் பல தளங்களுக்கு அழைத்துச் சென்று, அவர்களின் மனத்தில் சோகத்தையும், குற்ற உணர்வையும் ஏற்படுத்தி விடுகிறது.

மக்கள் சார்ந்த அரசியல் மீது நம்பிக்கையும், மரியாதையும் இருந்தால்தான், வீதி நாடகத்தில் தொடர முடியும். மேலோட்டமான புகழுக்காக இதில் தொடர இயலாது என்பதை அனுபவ பாடமாய் உணர்ந்திருக்கிறேன். பெற்றோர் தரப்பிலிருந்து, நான் எல்லோரையும் போல வேலைக்குப் போய் பொருளீட்டவில்லை என்ற வருத்தம் உண்டு. அதேபோல நண்பர்கள் என்னையும் எனது குழுவினரையும் அனுதாபத்தோடு பார்ப்பதும், அவர்களிடம் "வீதி நாடகம் ஒரு போராட்ட குணமிக்கக் கலை வடிவம், இதில் கிடைக்கும் ஆத்மதிருப்தியே போதுமானது" என்று புரிய வைத்தாலும், கடைசியில் 'சாப்பாட்டிற்கு' என்ன செய்கிறீர்கள்? என்று கேட்பதிலேயே முடிகிறது.

அரசின் நிதிஉதவியையோ, தன்னார்வ நிறுவனங்களின் உதவியையோ நாங்கள் ஒருபோதும் ஏற்பதில்லை. மாறாக பார்வையாளர்களிடம் துண்டேந்தி வசூல் செய்து, எங்கள் செலவுகளை ஈடுகட்டுகிறோம். ஆட்டோ டிரைவர் தொடங்கி, கல்லூரிப் பேராசிரியர் வரை எங்கள் குழுவில் கலைஞர்களாக இருக்கிறார்கள். குறிப்பாக வீதியில் இறங்கி நடிக்க வேண்டிய இந்தக் கலைக்குப் பெண் கலைஞர்களைத் திரட்டுவதில் பெரிய சவால் இருக்கிறது. ஆனாலும், சம்பந்தப்பட்ட குடும்பத்தினரே வீதி நாடகத்தை நேரில் கண்டு, அதற்குப் பார்வையாளரிடம் கிடைக்கும் எதிரொலிப்பைப் பார்த்து நடிக்க அனுப்புகிறார்கள். அதேபோல பெண்கலைஞர்களை எப்படி நடத்துகிறோம் என்பதைப் பொருத்தும் அவர்களை நாங்கள் தக்க வைத்துக் கொள்கிறோம்.

தாராளமயம் வந்த பிறகு ஒவ்வொரு அசைவும் லாப நோக்கத்தோடு நிகழ்த்தப்படும் உலகில், காசு பெறாத எந்த வேலையும் மதிக்கப்படுவதில்லை. இந்தச் சூழலில்தான் நீங்கள் தொலைக்காட்சித் தொடரோ, சினிமாவோ இயக்கினால் என்ன என்று கேட்கிறார்கள். 1984ல் தொடங்கி, இதுவரை முப்பது நாடகங்களை பல ஆயிரம் முறை நிகழ்த்திய சென்னைக் கலைக்குழுவின் 'அடையாளம்' நாடகம் இந்தியாவின் பல்வேறு மொழிகளில் மொழிபெயர்க்கப்பட்டு நடிக்கப்பட்டு வருகிறது. நாடக அரங்கைத் தேடிச் சென்று, நாடகம் பார்க்கிற வழக்கம் மக்களிடையே அருகிவரும் போது, மக்களைத் தேடிச் சென்று நாடகம் நிகழ்த்துவதன் மூலம் வீதிநாடகம் நாடகக் கலைக்குப் புத்துயிரளித்து வருகிறது. சினிமா, தொலைக்காட்சி இவற்றுக்கு நாடகம் ஒருபோதும் மாற்றாக முடியாது. அதே போன்று நாடகக் கலை அளிக்கிற நேரிடையான உயிருள்ள அனுபவத்திற்கு எந்தக் கலையும் மாற்றாக முடியாது.

இதன்பொருட்டே எதையும் எதிர்பார்க்காது தொடர்ந்து எங்களை வீதி நாடகத்தில் ஆழ்த்திக் கொள்கிறோம்.

சந்திப்பு: **ஆர்.சி. ஜெயந்தன்**
படங்கள்: **ராஜன்**

விபரீதமான ஆசைதான். அதுவும் ஒன்பதாவது படிக்கும் பையனுக்கு இம்புட்டுத் துணிச்சலோ, அசட்டுத் தைரியமோ ஆகாதுதான். ஆனால் வைராக்கியம் என்று ஒன்று இருக்கிறதாய்க் காட்டிக் கொண்ட பின் எப்படிப் பின்வாங்க முடியும்? மொட்டை மாடி, சாயந்திரமே தண்ணி தெளித்திருந்தும் இலேசான சூட்டைக் கிளப்பிக் கொண்டிருக்கிறது. வானத்தில் எண்ணற்ற நட்சத்திரத் திரள்கள். படித்த பால்வீதி மண்டலம். கற்பிதங்கள், சிந்தனையோ கற்பிதங்களுக்கும் அப்பால், நிறுவல்களுக்கும் ஆதாரமின்மைகளுக்கும் இடையே தொடர் போராட்டம். திட்டம் பற்றி கட்டம் கட்டமாகச் சிந்தித்தாகிவிட்டது. பிசகு ஏதுமில்லை. நள்ளிரவு வரட்டும். எனக்கும் தெளிவு பிறக்கும். மிதமான குளிர். கைலியைப் பார்த்தேன். கைலியா இது. கைலி கட்டிக் கொண்டதுக்கு அப்பா குதியாய்க் குதித்தார்.

உறங்க முயற்சித்தேன். எப்படி வரும் உறக்கம்? பள்ளியில் நடந்த பேச்சுக்கள் நினைவை முற்றுகையிட்டன. ஊர் முழுக்க அதே பேச்சுதான் எனும்போது பள்ளி மட்டும் விதிவிலக்கா என்ன?

"நம்ம முத்துமாரியக்காவைப் பேய் பிடிச்சிருக்காம்."

"ஆமா. நானும் போய்ப் பாத்துட்டு வந்தேன். பாக்கவே பயமாயிருக்கு. தலைய விரிச்சுப் போட்டுட்டு ஆடுறா. கோடாங்கியப் பிடிச்சு





அடிக்கிறா. என்ன பேயின்னே தெரியலயாம். எப்படியும் ரெண்டு நாள்ல தெரிஞ்சுடுமுன்னு சொல்லிக்கிறாக."

"டேய் போங்கடா! பேயாவது, பிசாசாவது. அதெல்லாம் ஒண்ணும் கெடயாது."

"நீ எப்பவும் இப்படித்தான் பேசுவ. ஒரு நாளைக்கின்னாலும் ஒன்னப் பிடிச்சாத்தான் தெரியும்."

"அதையும் பாத்துடலாம். எல்லாம் பொய், பித்தலாட்டம். பிராடு!"

"அப்ப ஏன் முத்துமாரி அப்பிடி ஆடுதா? அவளுக்கு என்ன மண்டைக் கிறுக்கா. நேத்து வரைக்கும் நல்லாதான இருந்தா. ஒடமுள்ளு பெறக்கப்போன லெக்கில தான் ஏதோ அடிச்சிருக்கு."

"இதையெல்லாம் நான் நம்பல."

மற்ற பையன்களுடன் கடுமையான வாக்கு வாதம். யாராலும் ஆதாரங்கள் காட்டிப்பேச முடியவில்லை. எப்படி ஆதாரங்களைக் காட்ட முடியும்? அவரவர் நம்பிக்கையின் ஆழம், நாவன்மை, செவி வழிச் செய்திகள் இவையெல்லாம் விவாதத்தைச் சூடேற்ற உதவிய அளவிற்கு ஒரு தீர்மானத்திற்கு வர உதவவில்லை. மற்றவர்களுடைய கருத்துக்களின் நியாயங்கள் உறுத்தினாலும் எல்லோரும் அவரவர் கருத்துக்களுடன்தான் வெளியேறினோம்.

"பேயாம் பேய். எல்லாம் மோசடி

நானும் சில பேய்களும்

என்றைக்காவது பத்தாயிரம் பேருக்கு நடுவில் பேய் பிரசன்னமாகியிருக்கிறதா? யாராவது நான் பார்த்திருக்கிறேன் என்று சொல்கிறார்களா? உடலும் உயிருமாய் இருக்கிற மனிதனுக்கு இல்லாத சக்திகள் வெறும் ஆவிக்கு எப்படி இருக்க முடியும்? பேயின் உருவ அமைப்பு பற்றியாவது ஒரேவிதமான கருத்துக்கள் நிலவுகின்றனவா? அதுவும் இல்லை. பேயாம். பேய்!

ஆனால் பின் ஏன் இத்தனை குழப்பங்கள். இத்தனை பேர் நம்புகிறார்களே. ஒரு வேளை உண்மையாகவே ஆவிகளும் பேய்களும் இருக்கக்கூடுமோ. இவையெல்லாம் கடவுளுக்கு எதிரானவையா? கடவுள் எங்கும் நிறைந்தவர் என்றால் பேய்கள் வசிக்குமிடமும் கடவுளுக்குத் தானே சொந்தம். கடவுளின் இடத்தில் பேய்கள் வாழ முடிகிறதென்றால், கெட்டவை



செய்ய முடியுமென்றால் அப்புறம் கடவுளுக்கு என்ன அர்த்தம்? இன்று கண்டு பிடித்துவிட வேண்டும். ஒரு கை பார்த்து விட வேண்டியதுதான். இரவு மெல்ல மெல்லத் தீவிரமடைந்து கொண்டிருந்தது. அப்பா தனிமை விரும்பி என்பதால் ஊரை விட்டு ஒதுங்கிய வாடகை வீட்டில் இருப்பு. இங்கிருந்து மயானம் பக்கம்தான்.

மெல்ல எழுந்தேன். போர்வை வேண்டாம். இடைஞ்சல். கீழே வந்து பார்த்தேன்; கதவு சாத்தியிருந்தது. நல்லது. அப்பாவோ அம்மாவோ இனி வந்து தேடப் போவதில்லை. எதற்கும் இருக்கட்டும் என எடுத்து வைத்திருந்த முருகன் டாலரைக் கழுத்தில் மாட்டிக்கொண்டேன். திருநீறைப்பூசிக் கொண்டேன். என்னதான் பேயில்லை என்று நம்பினாலும் ஒரு வேளை இருந்து தொலைத்துவிட்டால் அனாதையாய்ச் செத்துக் கிடக்கவா? இதிலும் முரண்பாடுகள் உண்டுதான்; கிறிஸ்டியன் சாத்தான் வந்துவிட்டால் திருநீறு காப்பாற்றுமா? ம்ம். சாமிலதான் மதம்னா, பிசாசுகள்லயும் மதமா?

குளிர் மிதத்தைத் தாண்டிவிட்டது. வேட்டிச்சாரத்தை இழுத்துப் போர்த்திக் கொண்டேன். வண்டிப்பாதை வழியே நடந்தால் சுடுகாடு, இரண்டு பர்லாங்தான். ஆனால் ஆவுடையாபுரத்துக்கும், அப்பைய நாயக்கன்பட்டிக்கும் நேரந்தப்பி போறவுக இந்த வழிதான் பேறாக. யார்னாச்சும் பாத்து எங்க போறேன்னு கேட்டா என்ன பதில் சொல்றது? வண்டிப் பாதையைவிட்டு இறங்கினேன். ஒரே முள்ளுக்காடு. இருக்கட்டும். கொஞ்சம் தூரம் போனால் நிட்ஷேப நதி - வாங்க்காலாட்டம் நடந்து கொண்டிருக்கிறது. கரை வழியே நடந்தால் வந்து விடும் சொடல மாடன்கோவிலு.

நடந்தேன். நிலவு இலேசான வெளிச்சம் கொடுத்தது. இப்போதைக்குப் பயமில்லை. நடக்க நடக்க மனத்தில் பயம் வர ஆரம்பித்தது. ச்சே - எதுக்கு இதெல்லாம். பேய் இருந்தால் என்ன? இல்லாவிட்டால் என்ன? நமக்கு எதுக்கு இந்த வம்பு. பேய் இருக்கட்டும்; ஒரு பாம்பு வந்தாலாவது கண்ணுக்குத் தெரியுதா? எதைப் பார்த்தாலும் பயமாயிருக்கிறது. தூரத்தில் ஆடுவது மரமா? மரம்தானா? எந்த சப்தத்தைக் கேட்டாலும் கிலி. உதறல். தவளைகளின் சப்தம்கூட இதயத்தைப் பிடித்துக் கொள்ள வைத்தது. சப்தமில்லாவிட்டால் அதைவிடப் பயமாய் இருந்தது. திரும்பி விடலாமா? ம்ஹூம். ஆம்பளப் பையன்னா வீரம் வேண்டும். இது என்ன தொடை நடுங்கித்தனம். போய்ப் பேய் இருந்தாப் பாத்துட்டுதான் வரணும்.

ஆணப்பறை வந்தது. வட்டப்பறை வந்தது. அதோ தெரியுது. மாடன் கோவிலு.

"ஆபீஸ்ல தூங்கக்கூடாதுன்னு எங்க மானேஜர் ஸ்ட்ரிக்டா சொல்லிட்டாரு"

"அடடா! அப்புறம் என்ன பண்ணீங்க?"

"வெளில வந்து வராண்டால காற்றாட படுத்துத் துங்கறோம்!"

- பா. ஜெயக்குமார்

கோவிலுன்னா கோபுரம்லாம் வெச்ச கோவிலில்லை. மாடன், மாடத்தி, இசக்கியம்மன் எல்லாச் செலையையும் மண்ணுல செஞ்சு கலரடிச்சு மேடைல வைச்சிருப்பாங்க. பகல்ல பாத்தாலே நடுநடுங்கும். என்னன்னு புரியாமலேயே புதுத்தைரியம் வந்திருந்தது. நல்ல இருட்டு. நான் மூச்சு விடும் சப்தம் மட்டும்தான்; இதுகளுக்குப் பேர்தான் சாமி.

கோவிலுக்கு வலப்பக்கம் தான் மயானம். அங்கு போய் உட்கார்ந்தேன். கொள்ளிக்குட உடைசல்களும் சாம்பலும் சில எலும்புத் துண்டுகளும் கிடந்தன. சாயந்திரமே வந்து பாத்து வைத்திருந்ததால் இவையெல்லாம் பயமுறுத்தவில்லை. நிசப்தம்தான் குலை நடுங்க வைக்கிறது. அசட்டுத் துணிச்சல். பேயின் வருகைக்காகக் காத்திருந்தேன். கடிகாரத்தைப் பார்த்தேன். மணி ஒன்று.

குபீரென்று தூரத்தில் மஞ்சள் நிற வெளிச்சம் நகர்கிறது. ஐய்யய்யோ. நம்மை

“நம்ம காதல் தோல்வியடைஞ்சுடுமோன்னு பயமா இருக்கு!”

“அடி அசடே, நல்ல விஷயத்துக்கெல்லாம் போய் ஏன் இப்படி பயந்து சாகறே?”

- ஞானமுத்து

நோக்கியல்லவா வருகிறது. கொள்ளிவாய்ப் பிசாசா? வெளிச்சம் தவிர வேறொன்றும் தெரியவில்லை. இந்த சமயம் பார்த்து வினோத சப்தங்களின் கலவை. நெற்றியில் கை வைத்துப் பார்த்தேன். திருநீறின் துகள்கள் உதிர்ந்தன. சரி, இனிக் கவலையில்லை. வரட்டும் பேய்.

அடடா. இது என்ன நம்மை நோக்கி வந்த வெளிச்சம் வேறு பக்கமாய்ப் போகிறதே. என்னவென்று பார்க்க ஆவல் மேலிட்டது. மெதுவாக வெளிச்சத்தை நோக்கி நடந்தேன்.

ச்சீ. பேயில்லை. ரெண்டாவது ஆட்டம் சினிமாவுக்குப் போயிட்டு யாரோ சைக்கிளில் ஆவுடையாபுரத்துக்குப் போய்க் கொண்டு இருக்கிறார். அவர் பார்த்தாலே தெரியும் தூரத்தில் இருந்தேன். தப்பு. அவர் பார்த்துவிடக் கூடாது. வேகமாய் ஓடி வந்து மாடனுக்குப் பின்னாடி ஒளிந்து கொண்டேன். அந்த ஆள் சிறிதாகிச் சிறிதாகி மறைந்திருந்தார்.

பெரிய பாரம் நீங்கிய மனம் புதிதானது. காத்திருப்பு. இல்லையென்று நம்பும் ஒன்றின் வருகைக்காய். ஓ. இந்த திருநீறும் முருகன் டாலரும் இருந்தால் அதற்கு இருக்கும் மந்திர சக்தியால்தான் நமக்கு அவை தெரியமாட்டேங்கிறதோ? கழட்டி விட்டால் பேய் அடித்து விடுமோ? இருக்கட்டும். அப்படி பேய் வந்துவிட்டால் கந்த சஷ்டிக்கவசம் பாடிக் கொள்வோம். குளிர் அதிகமாகி இருந்தது. திருநீறை அழித்தேன். டாலரை எடுத்து வீசினேன். சுற்றும் முற்றும் பார்த்தேன். வித்தியாசம் ஏதுமில்லை. மணி இரண்டாகியிருந்தது. எங்கே போயின பேய்கள்? நமது பேச்சும் கருத்துக்களும் நிருபணம் ஆகிக் கொண்டிருக்கிறது.



ம்ஹூம். இனி வருவதற்கான வாய்ப்புகள் இல்லை. அடடா சுடுகாடு என்பது அரிச்சந்திரன் வாழ்ந்த இடம்; அங்கே பயப்படுவதற்கு ஏதுமில்லை. ஆனால் ‘மனுசனப் பொதைக்கிற எடத்துலதான் வம்படியாச் செத்த ஆளுக பேய்களாத் திரிவாக’ என்ற தாத்தாவின் கருத்து ஞாபகத்துக்கு வந்தது.

சரி அங்கும் போய்ப் பார்த்துவிட வேண்டியதுதான். ஆராய்ச்சிக்களம் மாறியது. மெதுவாக வண்டிப் பாதையிலேயே நடக்க ஆரம்பித்தேன். யார்வரப் போகிறார்கள். பயம் துப்புரவாக இல்லை. கடவுளே யாரோ வருகிறார்களே. இன்னேரத்துக்கு என்ன சோலி? சிரித்துக் கொண்டேன். யார் கண்டார்கள் அவர்களும் நம்மைப் போலவே பேய் தோண்ட வருகிறார்களோ? என்னவோ? டக்கென்று பாதையை விட்டு இறங்

கினேன். இடுகாட்டை நோக்கி ஒத்தையடிப் பாதையில் நடந்தேன். அது ஒன்றும் வெகு தொலைவில் இல்லை.

பாதை சரியில்லை. இதுதான் புதைக்கப்படும் இடம் என்றில்லாமல் ஒவ்வொரு சாதிக்கும் ஒவ்வொரு இடமாயிருந்தது. எல்லா இடத்துக்கும் போவதாயிருந்தால் விடிஞ்சு வெள்ளக் கோழி கூவிரும். மூணு நாளைக்கு முன்னாடி செத்தானே ரெட்டச் சுழி ராசேந்திரன் அவன் எடத்துக்கு மட்டும் போயிட்டு வருவோம்.

இதோ வந்தாகிவிட்டது. இறைத்து விட்டுப் போயிருந்த எள்ளும், மீன் துண்டுகளும் கிடந்தன. காட்டுத்துளசி வளர்ந்து காடாய்க் கிடந்தது. ஒரு சில மண்டையோடுகள். நிச்சயமாய்ப் பயமுறுத்தின. ஒரு மேட்டில் உட்கார்ந்தேன். எழுந்து வேறொரு இடத்துக்கு போக எத்தனித்தேன். சட்டையை யாரோ பிடித்து இழுப்பது போன்ற உணர்வு. சர சர வென்று சப்தம். போச்சு. மாட்டிச் கொண்டோம். விவரிக்க முடியாதபடி நெஞ்சை விழுங்கியது பயம்.



"எதிர்வீட்டு கமலாவிடம் ஒரு மணி நேரம் பேசியதில் வயிற்றெரிச்சல்தான் மிச்சம்!"

"ஏன்?"

"நெக்லஸ் புதுசானு கடைசிவரை கேட்கவே மாட்டேனுட்டா பாவி!"

- உ. ராஜாஜி

காக்க காக்க கனகவேல் காக்க. நோக்க நோக்க நொடியினில் நோக்க...

மனதுக்குள் ஜெபம்.

ஏதோ ஆகப் போகிறதென்று நினைத்த எனக்கு ஒன்றும் ஆகவில்லையே. சட்டை மட்டும் இன்னும் எனது கட்டுப்பாட்டில் இல்லை. திரும்பிப் பார்த்தேன். கருவேல முள்ளில் சட்டை மாட்டிக் கொண்டிருந்தது. ச்சே இவ்வளவுதானா? இதுக்குத் தானா இந்தப்பயம். காத்திருத்தல். தொடர்ச்சியான காத்திருத்தல். இன்னும் இரண்டு வாரத்தில் பரிட்சையை வைத்துக் கொண்டு இது என்ன தேவையில்லாத விளையாட்டு. வீட்டுக்குப் போய்த்தூங்க வேண்டியதுதான். பேய்கள் இல்லை. வரவில்லை. உறுதியாக்கப் பட்டுவிட்டது. மணி மூன்றரை ஆகிவிட்டது. இனி கால்கள் இருக்கும் பேய்கள் நடமாடும் நேரம் வந்துவிட்டது. பால்காரர்கள் அங்குமிங்கும் போய்க் கொண்டிருந்தார்கள்.

பூனை போல் மெதுநடை. வீடு இன்னும் பூட்டிக் கிடந்தது. மாடிக்குப் போனேன். நடந்த நடைக்கும் அலைச்சலுக்கும் விழுந்தவுடன் பேய்த் தூக்கம்.

ரொம்ப லேட்டாகிவிட்டது. அம்மா இரைந்து பேசிக் கொண்டிருந்தார்.

"ஊருக்குள்ள வீட்டப் பாருங்கன்னா கேக்குறாகளா? எல்லாம் அவுக இஸ்டந் தான். சுடுகாட்டுல வீட்டப் பாத்துட்டு பேய்க கூடவே வாழ வேண்டியிருக்கு. நேத்தைக்கு இராத்திரி என்னடான்னா ரெண்டாவது ஆட்டம் பாத்துட்டுப் போன சம்முக சுந்தரத்த மாடசாமி கோயிலுக்கிட்ட வைச்சு அடிச்சுருக்கு. யாரப் பாத்தாலும் முனிக்கானாம். வெள்ள வெளேர்னு இருந்துச்சாம். சுடுகாட்டுல அம்புட்டு நேரம் ஒக்காந்துருக்கு. திரும்ப பொதைக்கிற எடத்துக்குப் போனத யாவாரி பாத்துருக்காரு. சரட்டுன்னு போச்சாம். தெடமான மனுசனாங்காட்டியும் தைரியமாய்ப் பாத்திருக்காரு. ராசேந்திரன் சமாதில ஒரே கும்மரிச்சமாம். திரும்ப மூணு மணிப்போல நம்ம வீட்டுப்பக்கம் வந்திருக்கு. பால்காரனுக சொல்றானுக. இத்தன பேர் பாத்திருக்காக. எளையவன் என்னடான்னா மாடியிலேயே போயி ஒறங்குறான். இருக்கன்குடி மாரியாத்தா நீ தான் தொணையிருக்கணும் : பச்சப்பிள்ளை எதையும் கண்டு பயப்படுறதுக்கு முன்னாடி வீடு மாத்துங்க." ●



நம்பி...!

"நெல் முதலிய தானியங்களை அளக்கும்போது, 'ஒன்று' என்று சொல்லி அளக்காமல், 'லாபம்' அல்லது 'ஆதாயம்' என்று சொல்லி அளப்பது தமிழ்நாட்டில் பல மாவட்டங்களில் வழக்கமாக இருந்து வருகிறது. நெல்லை மாவட்டத்தில் இச் சொற்களுக்குப் பதிலாக, அந்தந்த ஊர்களில் கோவில் கொண்டிருக்கும் இறைவனின் பெயரைக் கூறுவர். திருநெல்வேலி நகரத்தினர் 'நெல்லையப்பன்' என்றும், வீரவநல்லூர்க்காரர்கள் 'மரகதம்' என்றும், தென்காசிக்காரர்கள் 'காசிவிசுவநாதர்' என்றும் திருக்குறுங்குடியினர் 'நம்பி' என்றும் கூறிய பின்னர் இரண்டு, மூன்று... என்று எண்ணத் தொடங்குவார்கள்!"

தகவல்: கலை நண்பன்



குதிரை வண்டியில் குளியல்!

குளிக்க எண்ணுபவர்கள் இந்த குளியலறையைப் பயன்படுத்திக் கொள்கிறார்கள். இந்த ஏற்பாடு உலகில் வேறு எங்கும் இருப்பதாகத் தெரியவில்லை.

– அ. ராஜா ரஹ்மான், கம்பம்.

சண்டிகார் நகரில் குழாய்களில் தண்ணீர் வராத போது நகர மக்கள் குளிக்க தவிக்கிறார்கள். இவர்கள் குறைபோக்க ஒருவர் நடமாடும் பாத்ரூமைக் குதிரை பூட்டிய வண்டியில் கொண்டு வந்திருக்கிறார். இந்த வண்டியில் போதிய அளவு தண்ணீர் இருக்கும். குளிக்க வேண்டும் என்று நினைப்பவர்கள் ஐந்து ரூபாய் கொடுத்தால் வண்டியின் உள்ளோ அல்லது வெளியேயோ குளித்துக் கொள்ள வசதி உண்டு. ஒவ்வொரு வீட்டின் முன்னும் இந்த வண்டி நிற்கிறது.


ரெடி ஸ்டார்ட்!

சினிமாவில் குளோசப், லாங்ஷாட், ஃபேட் இன், ஃபேட் அவுட், கிராஸ் கட் போன்ற பல தொழில் நுட்பங்களை அறிமுகம் செய்தவர் கிரிஃபீத் என்ற அமெரிக்கர். இப்புதுமைகள் தோன்றி 84 வருடங்கள் ஆகின்றன.

– ஜி.கே.எஸ். மூர்த்தி



• அரிராம்



ஐஸ் வியாபாரியின் கரும்பலகை சிந்தனை!

மதுரை அரவிந்த் கண் மருத்துவமனை அருகே கரும்பலகை ஒன்றில் தமிழ் இலக்கிய வாசகங்கள் எழுதப்பட்டு இருக்கும். இவ்வாசகங்களை எழுதும் ஐஸ் வியாபாரி அரிராம் என்பவர் இரண்டாவது வரை மட்டுமே படித்திருந்தாலும் தமது சம்பாத்தியத்தில் பாதியை இலக்கியப் புத்தகங்களாக வாங்கிப் படித்து வருகிறார். தாம் படித்ததில் சிந்திக்கக் கூடியவற்றை இக்கரும்பலகையில் எழுதிப் போடுவது இவரது வழக்கமாக இருக்கிறது.

– மது


தேன்கூடு

லிங்கனின் மகிழ்ச்சி...!

ஆபிரஹாம் லிங்கன் ஒருமுறை குதிரையில் சென்று கொண்டிருந்தபோது, ஒரு சிறு பன்றிக் குட்டி சேற்றில் அகப்பட்டுத் தத்தளிப்பதைப் பார்த்தாராம். உடன் கீழிறங்கி அதனைச் சேற்றிலிருந்து எடுத்து உயிர்தப்பவிட்டார். அப்பொழுது அவர் அணிந்திருந்த வெள்ளை நிற உடை மிக அழுக்காகிவிட, அவருடன் வந்த அதிகாரிகள், ''நீங்கள் ஏன் உங்கள் உடைகளை அழுக்காக்கிக் கொண்டு, ஒரு பன்றிக் குட்டியைக் காப்பாற்ற வேண்டும்?'' என்று கேட்டார்களாம். அதற்கு லிங்கன், ''அதுவும் ஒரு விதத்தில் என் சுயலாபத்துக்குத்தான்'' என்றாராம். ஒன்றும் புரியாமல் அவர்கள் விழிக்க, லிங்கன், ''ஆம்; அது கஷ்டப்பட்டுத் தத்தளிப்பதைப் பார்க்க என் மனது வலிக்கிறது. என் வேதனையைப் போக்கி நான் மீண்டும் சந்தோஷமாக இருக்கவே நான் அதைக் காப்பாற்றினேன். இப்பொழுது அது நிம்மதியாகத் துள்ளி ஓடுவதைப் பார்க்க என் மனது குதூகலிக்கிறது. இந்த சந்தோஷத்துக்கு இணை எது?'' என்றாராம்.



– சுகி சிவம் பேச்சில் கேட்டவர்: சபரி கண்ணன்



சரவணன் வீட்டின் மாடியில் தனித்து இருந்தான். மனம் முழுதும் ஒரு கொந்தளிப்பு இருந்து கொண்டே இருந்தது. சினிமா போல் காட்சிகள் அடுக்கடுக்காக மனசில் விரிந்து கொண்டே போயின. அவனது சைக்கிளில் முன்புறம் கிருஷ்ண வேணியை வைத்து ஓட்டிச் செல்கிறான். அது ஒரு மலைப் பாதை. வளைவுகளில் விசிலடித்தப்படியே திரும்புகிறான். குளிர் காற்று முகத்தை வருடுகிறது.

இத்தனைக்கும் சரவணன் ஒரு முறை கூட மலை மீது ஏறியதில்லை. ஃபோட்டோக்களிலும், சினிமாவிலும் பார்த்தது தான். அவனுக்கு முதல் முதலாக இப்போது 'சட்'டென உண்மை உறைத்தது. இருபத்திரண்டு வயதாகியும்கூட இனியும் ஒரு மலையில் ஏறிப் பார்க்கவில்லையே என்று இலேசாக வருத்தப்பட்டுக் கொண்டான். (ஊரினை ஒட்டியுள்ள செங்கரட்டில் ஏறியதுண்டு. ஆனால் அது மலையேற்றத்தில் சேர்த்தியில்லை. முள் செடியும், பாறைகளும் கொண்ட அந்தக் கரட்டில் ஒரு மரம்கூட கிடையாது)


'தான் மட்டுமா பார்க்கவில்லை மற்ற மூவரும்கூடப் பார்க்கவில்லை' என்று சமாதானம் வேறு மனதுக்குள். ஆனால் கடல்

பாஸ்கர் சக்தி

பார்த்தார்கள். ஒருமுறை குடும்பத்தோடு ராமேஸ்வரம் போனார்கள். சரவணன் பிடிவாதம் பண்ணி மூன்று நண்பர்களையும் உடன் அழைத்துக் கொண்டான். அப்போது ப்ளஸ் டூ படித்துக் கொண்டிருந்தனர். நீண்ட காலப் பயணம். புது இடங்களையும், புதிய பெண்களையும் பார்க்கலாமென்ற ஆசை. போகும்போது ஏகப்பட்ட உற்சாகம். ரயிலில் போகையில் கிராஸிங்கில் ஏதேனும் எருமை மாடு நின்றாலும் கைகாட்டுகிற உற்சாகம்.

ராமேஸ்வரம் போனதும், அப்பா இவனை மொட்டை போட்டாக வேண்டும் என்று சொன்னார். அது வரை இந்தச் சதியை சரவணன் அறிந்திருக்கவில்லை. பதறிப்போய் சிகையை ஒரு கையால் உயிர்நிலை போல் மறைத்துக் கொண்டு ஆட்சேபித்தான்.

இந்தச் சதித்திட்டத்தைச் சொல்லியிருந்தால் நான் இந்தப் பயணத்தில் உடன் வந்திருக்கவே மாட்டேன் என்று கத்தினான். ப்ளஸ் டூ படிக்கிற மாணவன் மொட்டையடித்து அலைவதா? பெண்களின், சக மாணவர்களின் மத்தியில் அது எத்



11

தகைய தர்மசங்கடம்? நினைக்கும் போதே கண்ணீர் ராமேஸ்வரக் கடலாய்ப் பொங்கியது.

ஆனால் பெரியவர்களுக்கு இளைஞர்களின் தர்க்கமோ, மனப் போக்கோ பிடிபடுவதே யில்லை. அம்மா, அப்பா மற்றும் பெருமாயிப் பாட்டி ஆகியோரின் கூட்டணிக்கு முன் சரவணன் வலுவிழந்து போனான். ஊர் திரும்பியதும் வீட்டைவிட்டு எங்கேயும் போகாமல் தலைமறைவாகத் திரிந்தான்.

தனது கடல் அனுபவம்தான் சந்தோஷத்துடன் நினைவு கூரத்தக்க வகையில் அமைய வில்லை. மலை அனுபவம் அப்படி இருக்கக்கூடாது. இருக்காது. ஏனெனில் தான் மலையேறப் போவது கிருஷ்ணவேணி போன்ற அழகியுடன்.

மனத்தின் மூலையிலிருந்த பகுத்தறிவு இதெல்லாம் சாத்தியமில்லை என்றது. 'கிருஷ்ணவேணியை நீ பார்க்கக் கிடைப்பதே நிமிஷக் கணக்கிலான சமயங்கள்தான். அவளுடன் சேர்ந்து ஒரு மலைப் பிரதேசம் போய் வர வேண்டுமென்றால் நாட்கணக்கில் ஆகும். அவளைக் கல்யாணம் பண்ணிக் கொண்டால், அல்லது ஓடிப்போனால் மட்டுமே அது சாத்தியம்' என்றது அது.

தலையை உதறிக் கொண்டான் சரவணன். நினைப்புகள்... நினைப்புதான் பெரும்பகுதி வாழ்க்கையில். எல்லா சந்தோஷங்களையும் குருட்டுக் கனவிலேயே அனுபவித்து அனுபவித்து நிஜத்திலோ வெறுமனே ஒன்றுமில்லாமல் திரிய வேண்டியிருக்கிறது. எழுந்து கொண்டான் சரவணன். வெளியே போனால் நன்றாயிருக்குமென்று தோன்றியது.

படியிறங்கியபடியே யோசித்தான். இன்று ராத்திரி ஒரு பெண் தனியாக வரச் சொல்லி இருக்கிறாள். சந்தித்துக் காதலை வளர்த்துக் கொள்ள ராத்திரி வரைக்கும் நேரமிருக்கிறது. அதுவரை... அதுவரை? வேறு வழியில்லை. நினைப்புத்தான். நினைப்புத்தான். மனிதனுக்கு ஆசுவாசம் தருவதாகவுமிருக்கிறது.



பூவரசம் வீடு

கீழே கூடத்தில் அம்மாவும் பாட்டியும் உட்கார்ந்திருந்தனர். நடுவில் புளியம்பழங்கள் கிடந்தன. அவற்றைக் கல்லில் வைத்து, சுத்தியல் கொண்டு தட்டி கொட்டை நீக்கிக் கொண்டிருந்தனர்.

"என்னடா சரவணா? காலைலிருந்து மேலயே அடைஞ்சு கெடக்கிறவன்?"

"ஒண்ணுமில்லம்மா!"

"காப்பி குடிக்கிறயா?"

"வேணாம்மா வெளில போறேன்."

பெருமாயிப் பாட்டி அவனை சைசாகப் பார்த்தாள். "வாடா வந்து இந்தப் புளியில கொஞ்சம் தட்டிக் குடுத்துட்டுப் போடா..."

"போ கெழவி. நான் வெளிய போகணும்."

"ஒத்தாசையா ஒரு காரியமும் பண்ணக் கூடாதுன்னு சத்தியம் பண்ணிருக்கான். பவுடரைப் போட்டுக்கிட்டு வெளிய வெளிய கௌம்பிர்றான்."

சரவணன் கண்டுகொள்ளாமல் கிளம்பினான்.

"சரவணா செத்த நில்லு."

"என்னம்மா?"

"இங்க வா, ஒரு விசயங்கேக்கணும்." என்றாள் அம்மா.

"சொல்லும்மா" என்று கிட்டே வந்து அமர்ந்தான் சரவணன்.

"பூவரச வீட்டுல ஏதோ பணங்கொண்டு போய்க் குடுத்தியாமே?"

"ஆமா.. அப்பா குடுத்து விட்டாரு."

"பாத்திங்களா அத்தை... நான் சொல்லலை!"

பெருமாயிப் பாட்டி கண்களை இடுக்கிக் கொண்டாள். "ஒங்கப்பன் எதுக்குடா அவளுக்குக் காசு குடுத்து விடணும். அவகிட்ட வீட்டை வேற விட்ருக்கான்."

"என்னமோ கைமாத்து வாங்கி இருந்தாராம்."

"கேட்டிங்களா அத்தை, கதையை! அவளே இந்த ஊருக்குப் பொழைக்க வந்தவ... மூணு பொட்டைகளையும், ஒரு குள்ளப் பயலையும் வச்சுக்கிட்டு இருக்கா... அவகிட்ட இவரு கடன் வாங்கினாராம்ல.. கதையால்ல இருக்கு!"

பெருமாயிப்பாட்டி பெருமூச்சு விட்டாள். "நான் அப்பவே நெனைச்சேன்... யாருக்குமே தொறந்து விடாத அந்த வீட்டை.... இவன் அவளுக்குத் தொறந்து விட்டப்பவே எனக்குச் சம்சயம்... இப்ப காசு வேற குடுக்க ஆரம்பிச்சுட்டானா?"

சரவணனுக்கு ஏதோ அரைகுறையாய்ப் புரிந்தும், புரியாமலும் நெருடியது.

"கௌவி! என்ன சொல்றீங்க ரெண்டு பேரும்?"

"ம்... உங்க அப்பன் அவளுக்கு என்னத் துக்குடா காசு குடுக்கணும்? வெவரங்கெட்டவனே... எதுக்கு வீடு விடணும்?"

"அதான் கைமாத்து வாங்கினாராம்ல."

"ஆமா சொல்றான் சுரைக்காய்க்கு உப்பில்லைன்னு... இதுல என்னமோ இருக்கு.."

"இந்த ஜோக் எழுத்தாளர் பின்குறிப்புல 'கார்டு விலை இரட்டிப்பாகிவிட்டது'ன்னு எழுதியிருக்காரே...?"

"சன்மானத்தைக் கொஞ்சம் கூட்டித் தரக் கூடாதான்னு சூசகமா கேக்கறாரோ..?"

– சீர்காழி ரேவதி

அம்மாவிடம் திரும்பினாள் பெருமாயி... "மொதல்லியே என்னன்னு கேட்டு வை.. உம் புருசங்கிட்டே... அப்புறம் தும்பை விட்டுட்டு வாலைப் புடிச்ச கதையா ஆயிரப் போகுது."

சரவணன் எழுந்து நடந்தான். சற்று நேரத்துக்கு முன்னிருந்த உற்சாகம் குறைந்து விட்டது.

அப்பாவுக்கும், அந்தக் குடும்பத்துக்கும் ஏதோ தப்பான சம்பந்தம் இருப்பதாக அல்லவா அம்மாவும், பாட்டியும் சொல்கிறார்கள். அவர்களது சந்தேகத்தில் நியாயம் இல்லாமலில்லை. வசதியான அப்பா ,போயும், போயும் அவர்களிடமா கைமாத்து வாங்கியிருப்பார்?

சரவணன் யோசித்தவாறே நடந்து போய் பாலத்தை அடைந்தான். குழப்பமாயிருந்தது மனது. சற்றுத் தொலைவிலிருந்து ஒரு சைக்கிள் வந்து கொண்டிருந்தது. யார்? சின்ன உருவம். அங்கிருந்து கையாட்டிய படியே வந்தான் அழகு. சின்ன சைக்கிள். அதிலிருந்து இறங்கினான்.

"என்னா சரவணா? ஃப்ரண்ட்ஸ் எல்லாம் எங்கே?"

"ஒருத்தனையும் காணும் அழகு. உக்காரு." அழகு தாவி ஏறி பாலத்தில் அமர்ந்தான். பாக்கெட்டில் கைவிட்டு பீடி எடுத்து பற்ற வைத்தான்.

"நீங்க... பீடி குடிக்கிற பழக்கமெல்லாம் உண்டா?"

"ஏன்... குள்ளனாயிருந்தா இந்தப் பழக்கமெல்லாம் இருக்கக் கூடாதா? இன்னொரு விஷயம், இந்த நீங்க நாங்கவெல்லாம் வேண்டாம். சும்மா நீ, நான்னே பேசுவோமே..."


"சரி, சரி... நீ பீடி குடிச்சு நான் பார்த்ததில்லை. அதான் கேட்டேன்."

"எல்லாப் பழக்கமும் உண்டு. எனக்குப் பீடி, சிகரெட், தண்ணி அப்புறம் ஒண்ணு ரெண்டு தடவை கஞ்சாகூட குடிச்சிருக்கேன்."

சரவணன் அவனை ஆச்சர்யமாகப் பார்த்தான்.

"என்ன அப்பிடிப் பாக்குற சரவணா?"

"எதுக்கு இந்தப் பழக்கமெல்லாம். விட்ர வேண்டியதுதான."



"உனக்கென்ன ஈஸியா சொல்லிட்ட... என்னை மாதிரி ஆளுக்கு ஏதாவது ஒண்ணு வேண்டியிருக்கு தெரியுமா?"

சரவணன் அவனை அமைதியாகப் பார்த்தான்.

"என் வயசுப் பசங்க யாரு கூடயும் நான் ஃபிரண்டா இருக்க முடிஞ்சதேயில்லை. அப்படி ஆயிப்போச்சு... மன வேதனை ரொம்ப அதிகமா இருந்த சமயங்களில இதெல்லாம் ஒவ்வொண்ணா பழகிக்கிட்டேன். எப்பவுமே தனியா இருக்கற மாதிரி மனசுல ஒரு சங்கடம்.. ப்ச்... அதான்."

"எங்ககூட எல்லாம் பழகற இல்ல...?"

"நீ கொஞ்சம் பரவால்லை. உன் ஃபிரண்ட்ஸ்ங்க கூட என்னைப் பாத்தா லேசா சிரிச்சிட்டுப் போயிடறாங்க. நின்னு பேசணும்னு அவங்களுக்குத் தோணற தில்லை. அதுக்காக அவங்களைக் குத்தம் சொல்லவும் முடியாது. இவங்கிட்ட என்னத்தைப் போயி பேசறதுன்னு எல்லாரும் நினைக்கறதுதான்." அழகுவின் குரல் சற்று கரகரப்பாயிருந்தது.

அழகு தொடர்ந்தான், "நான் பாத்த அளவில நீ கொஞ்சம் பரவாயில்லை சரவணா. எங்கிட்ட வித்தியாசமில்லாம பேசிப் பழகுற" என்றான் அழகு.

சரவணன் மனத்தில் 'சட்'டென்று ஒரு எண்ணம் தோன்றியது.

இவனிடம் நைஸாக கேட்டுப் பார்த்தாலென்ன?

தொண்டையைச் செருமிக் கொண்டான் சரவணன்.

"ஏன் அழகு? உங்க வீட்டுல வசதியெல்லாம் எப்படி?"

"வசதின்னா.. காசு பணத்தைப் பத்தி கேக்கறியா?"

"ம்.. உங்க அம்மா மட்டுந்தான் சம்பாதிக்கிறாங்க."

"ஆமா... ஆனா அம்மா காசு விஷயத்தில ரொம்ப கடுசான பொம்பளை, இதுக்கு முன்னால இருந்த ஊர்களில் வட்டிக்குக் குடுக்கும்; நகை அடவு வாங்கும், ரொம்ப கஞ்சம் எங்க அம்மா."

"அப்படியா?"

"ரொம்ப கறாரா நிறைய வட்டிப் போட்டு வாங்கும்."

"பொம்பளைதான்னு காசு வாங்கிட்டு ஏமாத்திட மாட்டாங்களா?"

"ம். அதெல்லாம் நடக்காது. பாக்குறது பேசறது எல்லாம் அப்பிராணி மாதிரிதான். சண்டைன்னு கௌம்பிட்டா அதுவேற பொம்பளை; புடிச்ச ஆய்ஞ்சு விட்டும்."

"நம்பவே முடியலையே."

"நெசமாத்தேன் சரவணா... சமயத்தில யாருக்காவது நூறு ரூவா குடுத்துட்டு இருநூறு ரூவா குடுத்ததா எழுதி வச்சிரும். அவங்க திருப்பிக் குடுக்கையில அடாவடி பண்ணி எக்ஸ்ட்ரா காசு வாங்கிடும்."

"சேச்சே.. இது தப்பில்லை?"

"அந்த மாதிரி எல்லார்கிட்டயும் பண்ணாது. யாராவது சிக்கலான ஆளுன்னு தெரிஞ்சா அவங்களை இப்படி தகராறு பண்ணி 'கட்' பண்ணி விட்டும். அப்புறம் அவங்க எங்க அம்மா இருக்கற சைடுக்கே வரமாட்டாங்க."

சரவணன் அமைதியாக அழகுவைப் பார்த்தான். அவனது கண்களைப் பார்த்த படியே சொன்னான்.

"எங்கப்பாகூட உங்கம்மாகிட்ட கடன் வாங்கினாரு போல்ருக்கு."

அழகு சலனமில்லாமல் பதில் சொன்னான். "ஆமாமா நாங்கூட அப்ப இருந்தேன். உரம் வாங்க பணம் குறையுதுன்னு அவசரமா வந்து கேட்டாரு. அம்மா குடுத்து விட்டாங்க. உங்கப்பா மேல எங்கம்மாவுக்கு ரொம்ப மரியாதை சரவணா.. அவருகிட்டல்லாம் ரொம்ப டீஸண்டா நடந்துக்கிடுவாங்க." என்றான் அழகு. சொல்லிவிட்டு சரவணனைப் பார்த்துப் பொய்யின்றி புன்னகை செய்தான்.

சரவணனுக்கு மிகவும் ஆசுவாசமாக இருந்தது. அம்மாவின் சந்தேகம் தப்புதான் என்று பட்டது.

மெதுவாக எழுந்தான்.

"என்ன சரவணா கிளம்பிட்டே?"

"வீட்டுக்குப் போகணும்; அப்புறம் பாப்போம்" என்று நடக்கத் துவங்கிய சரவணனின் மனத்தில் மீண்டும் நினைவுகளின் ஊர்வலம் துவங்கியது. இரவு பத்து மணி பற்றிய எதிர்பார்ப்புகள். அதுகுறித்த 'நினைப்பு'கள். நினைப்புகள்தானே மனிதனுக்கு!

(தொடரும்)

டாக்டர் ஜேக்கப் ஜான் இருபது வருடங்களாக மெட்ராஸ் இன்ஸ்டிட்யூட் அஃப் டெவலப்மென்ட் ஸ்டடீஸ் அமைப்பில் பணியாற்றிவரும் சர்வதேசப் பொருளாதார ஆராய்ச்சியாளர். உலகத் தலைவர்கள் பலரை நேரில் சந்தித்துப் பேசியவர். அமெரிக்கா தாலிபான் மீது போர் தொடுத்தால், பொருளாதார ரீதியாக இந்தியா எந்தவித பாதிப்புக்கு உள்ளாகும் என்று விளக்குகிறார்:

முதன் முதலாகப் பாதிக்கப்படப்போவது ஏற்றுமதித் துறைதான். மத்தியதரைக் கடல் மற்றும் இந்துமகா சமுத்திரப் பகுதிகளில் நிச்சயமற்ற தன்மை நிலவுவதால் கப்பல் மூலம் கன்டெய்னர் சரக்குகள் அனுப்புவது வெகுவாகக் குறைந்துபோகும். நமது ஏற்றுமதியில் 90 சதவிகிதம் கடல்வழிதான் நடைபெறுகிறது. கூடுதல் இன்ஷூரன்ஸ் கட்டணம் வேறு விதிக் கப்படும். கப்பல் சரக்குக் கட்டணம் அதிகமாகும். இதனால் ஏற்றுமதி பாதிக்கப்படும்.

ஜவுளி ஏற்றுமதித் துறையில் பலத்த அடி விழும். சென்ற வருடம் 13 பிலியன் டாலர் ஏற்றுமதி. இந்த வருட இலக்கு 17 பிலியன் டாலர். இது இந்தச் சூழ்நிலையில் நிச்சயம் எட்ட



• யாசர் அராபத்துடன் ஜான்

முடியாது.

ஜவுளி ஏற்றுமதி யு.எஸ்.ஸுக்கு மட்டும் 25%. ஐரோப்பாவுக்கு 35% மொத்தம் 60. சதவிகித ஏற்றுமதியிலும் பாதிப்பு ஏற்படும். திருப்பூரில், இப்போதே உற்பத்தியில் 10% குறைத்து விட்டார்கள்.

தங்கம் விலை உயரும். இப்போதே, முதல் ஆறு மாதங்களில் இரண்டு சதவிகிதம் உயர்ந்து விட்டது.

தங்க, வைர நகை அமெரிக்காவுக்கு ஏற்றுமதி ஆவது நிச்சயம் குறையும். இந்தியாவின் மொத்த ஏற்றுமதியில் 17.6% (44.1 பிலியன் யு.எஸ். டாலர்கள்) இந்தத் துறைதான் ஈட்டித் தருகிறது. நேரடியாகவும் மறைமுகமாகவும் மூன்றரை மிலியன் நபர்களுக்கு வேலை வாய்ப்பு அளிக்கும் துறை இது என்பதால், இந்தப் பாதிப்பு கணிசமாக இருக்கும்.

தோல் பொருட்கள் ஏற்றுமதி, நமது மொத்த ஏற்றுமதியில் ஐம்பது சதவிகிதத்துக்கு மேல் இருக்கிறது - குறிப்பாக ஐரோப்பிய யூனியனுக்கும் அமெரிக்காவுக்கும். இந்தத் துறையும் நிச்சயம் பாதிப்புக்கு உள்ளாகும்.

விமானப் போக்குவரத்துத் துறை ஏற்கெனவே பாதிப்புக்கு உள்ளாகிவிட்டது. யு.எஸ்.ஏ, நார்த்வெஸ்ட் ஏர்லைன்ஸ் தில்லியிலிருந்து சேவையை விலக்கிக் கொண்டுவிட்டார்கள். எனவே நியூயார்க்குக்கும், சிகாகோவுக்கும் தில்லியிலிருந்து நேரடி விமான சேவை கிடையாது!

செப்டெம்பர் 11 சம்பவம் காரணமாக மட்டுமே கான்சல் செய்யப்பட்ட டிக்கெட்டுகள் வகையிலும், ஓட்டல் பில் வகையிலும் சுமார் 10 கோடி ரூபாய் இழப்பை ஏர் இந்தியா

அடைந்திருக்கிறது. சியாட்டில் நகரிலுள்ள போயிங் விமான நிறுவனம் உட்பட, பல விமான கம்பெனிகளில் இருந்து கிட்டத்தட்ட ஒரு லட்சம் பணியாளர்களை வீட்டுக்கு அனுப்பி வருகிறார்கள். இதில் சுமார் பத்தாயிரம் பேருக்கு மேல் இந்தியர்கள்.

நேரடி அன்னிய முதலீடுகள் என்று பார்த்தால், அமெரிக்கர்கள்தான் இந்தியாவில் அதிக முதலீடு செய்திருப்பவர்கள். 91-2001 வரையிலான பத்தாண்டுகளில் மட்டும் 535 பிலியன் டாலர்கள்! இதுவும் குறைய வாய்ப்பு இருக்கிறது. தெற்கு கொரியா, தைவான், ஹாங்காங், பங்களாதேஷ் ஆகிய நாடுகளுக்கு நாம் நூல் ஏற்றுமதி செய்கிறோம். இது கட்டாயம் பாதிக்கப்படும். கம்ப்யூட்டர் மென்பொருள் ஏற்றுமதி யு.எஸ்.ஸுக்கு மட்டும் 62 சதவிகிதம். இதுவும் குறையும். இது பலத்த அடியாக இருக்கும். சிலிகான் வேலி பகுதியில் தவிர, பிற கம்ப்யூட்டர் கம்பெனிகளிலும் ஆட்குறைப்பு கணிசமாக இருக்கும். இது இந்தியாவைப் பெரிதும் பாதிக்கும் அம்சம்.



தாலிபான் போர்: இந்தியப் பொருளாதாரம் என்னாகும்?

ஷ்ரிம்ப் எனப்படும் மீன் உணவு வகை ஏற்றுமதி யு.எஸ்.ஸுக்கு மட்டும் 40%. தவிர, கேரளத்திலிருந்து ஐரோப்பிய யூனியனுக்கு 20% ஏற்றுமதி ஆகிறது. இவை குறையும்.

கிரானைட் கற்கள் தமிழகத்திலிருந்துதான் அதிகம் ஏற்றுமதி ஆகின்றன. இதுவும் பாதிக்கப்படும்.

ரப்பர், மலைத்தோட்டப் பயிர்கள் ஏற்கெனவே கேரளத்திலிருந்து ஏற்றுமதியாவது குறைந்து வருகிறது. இந்தப் போர் சூழ்நிலையில் இன்னும் குறையும்.

'நமது அந்நியச் செலாவணி கையிருப்பு கணிசமாக இருக்கிறது. நமக்குப் பாதிப்பு எதுவும் பொருளாதார ரீதியாக இருக்காது' என்று நிதியமைச்சர் யஷ்வந்த் சின்ஹா சொன்ன இரண்டாம் நாளே 584 மிலியன் டாலர் அந்நியச் செலாவணி குறைந்து, 41 பிலியன் டாலரைத் தொட்டு விட்டது! அரசியலில் ஸ்திரமற்ற சூழ்நிலை, காஷ்மீர் விவகாரம் அடைந்து வரும் தீவிரம் எல்லாவற்றையும் கணக்கில் எடுத்துக் கொண்டு பார்த்தால் நமக்குப் பாதுகாப்பான சூழல் இருப்பதாகச் சொல்ல முடியாது. சற்றே பின்னடைவு ஏற்பட்டாலும், மீண்டும் துள்ளியெழுந்து பழைய நிலையை அடையும் பக்குவம் அமெரிக்கப் பொருளாதார அமைப்புக்கு உண்டு. நம் நிலைமை அப்படி இல்லை!

தொழில்நுட்ப உத்தியிலும், நவீன கருவிகள் வைத்திருப்பதிலும் அமெரிக்காவைவிட இன்னொரு நாட்டைக் காண்பது அரிது. அப்படிப்பட்ட நாட்டையே, மூளைச்சலவை செய்யப்பட்ட, கடின இதயம் படைத்த பயங்கரவாதிகள் தகர்க்கத் துணிந்து விட்டால், தொழில்நுட்பமோ, கருவிகளோ அவர்களைத் தடுத்து நிறுத்திவிட முடியாது என்பதை எல்லோரும் புரிந்து கொண்டிருப்பார்கள். பயங்கரவாதத்தை ஒடுக்க மாற்று என்ன? பழிக்குப் பழி அல்லது போர் மட்டுமே வழி என்றால் மனிதகுல அழிவு தவிர, பொருளாதாரச் சீரழிவுக்கும் நாம் தயாராக இருந்தாக வேண்டும் என்பதுதான் வருத்தத்துக்குரிய செய்தி.

சந்திப்பு: **சாருகேசி**

நடக்குமென்பார்; நடக்கும்!

அக்னிசர்மா பக்கம்

அக்டோபர் 10 முதல் 16 வரை

மேஷம் : சூரியன், ராகு, புதன் கிரகங்களின் சஞ்சாரம், அனுகூலமாக இருப்பதால், எடுத்த காரியத்தில் வெற்றி, அதிகாரிகள் பாராட்டு, பொருளாதாரத்தில் உயர்வு என்று அமோகமான பலன்கள் ஏற்படும். கலைத் துறைக்காரர்களுக்குக் கொஞ்சம் சிரம தசைதான். அஷ்ட திக்குகளிலிருந்தும் எதிர்ப்புகள் வரும். தந்தை மூலம் அனுகூலம் உண்டாகும். மாணவர்கள் 'எள்' என்றால் எண்ணெய் ஆகி, பாட்டிலில் புகுந்து, லேபிள்கூட ஒட்டிக் கொள்வார்கள். அவ்வளவு சுட்டி! வார இறுதியில சிறு சலசலப்பு வரும். கிரக வழிபாட்டால் எதையும் தாங்கும் இதயம் பெறலாம்.

ரிஷபம் : 'அள்ளித்தந்த வானம்' பிரபு தேவாவின் ஆசை போல, கையைத் தட்டினா காசு மழைக் கொட்டும் வாரமாக உங்களுக்கு அமைந்துவிட்டதில் எங்களுக்கும் மகிழ்ச்சி. வியாபாரிகள் வளர்ச்சி காண்பார்கள். அடிமேல் அடி வைத்து அன்னநடை போட்டுக் கொண்டிருந்த அதிர்ஷ்ட வாய்ப்புகள், ஓடோடி வந்து நிர்மலா பெரியசாமி ஸ்டைலில் 'வணக்கம்' சொல்லும். ரேஸ், லாட்டரி, பந்தயம் இனங்கள் லாபம் கொண்டு வரும். சனி வக்ர நிலையில் உலவுவதால், வயிறு சம்பந்தமான உபாதைகள் ஏற்படும். உஷார்.

மிதுனம் : ஓரளவு உதவி, ஏனோதானோ உடல்நலம், சுமாரான பண நிலவரம் என தேசலாய் ஏழு நாட்கள் அமையப் போகிறது. முன்பே தெரிந்துவிட்டதால், ஆகாயம் அளவுக்கு எதிர்பார்த்து கோட்டை, கிட்டை கட்டி டுவின் டவர் போல் இடிந்து விழாமல் பார்த்துக் கொள்வீர்கள். தொழிலாளிகள், பொது நலப் பணியாளர்கள் புகழ் பெறுவார்கள். எதிலும் பதற்றம், அவசரம் கூடாது. 'பெரியவர்களின் வாக்கு அமுதம்' என தெரிந்து அவர்கள் சொல்படி நடக்கவும். வாழ்க்கை ஒளிமயமாக இருக்கும்.

கடகம் : அடிச்சிட்டீங்க லக்கி பிரைஸ். இனி வரப் போகும் 168 மணித் துளியும் பொற்காலமாகப் போகுது. கோர்ட், விவகாரம் வழக்கு, வியாஜ்ஜியம் என அலைந்து திரிந்து கொண்டிருந்த விவகாரத்துக்குக் கனத்த முற்றுப்புள்ளி விழும். அரசுப் பணியாளர்கள் நோக்கம் நிறைவேறும். பெண்களால் ஆடவர்களுக்கு அனுகூலம் உண்டாகும். சிக்கனம் அவசியம். கைப்பொருள் பறிபோகலாம். ஜாக்கிரதை.

சிம்மம் : வெளிநாட்டுத் தொடர்பு, வெளிநாட்டிலிருந்து நல்ல செய்தி, வெளிநாட்டுக்குப் போகும் அமைப்பு என கடல் தாண்டிய 'விஸா' விஷயங்கள் நடக்கப் போகிறது. மருத்துவர்களுக்கு மதிப்பு, அந்தஸ்து உயரும். பெண்களால் ஆடவர்கள் அனுகூலம் அடைவார்கள். ரசாயனத் துறையைச் சேர்ந்தவர்கள் சுபிட்சம் அடைவார்கள். பணவரவுக்குப் பஞ்சமில்லை. நல்ல கல... கல... கல... . வீண் சண்டை, சச்சரவுகள் வந்து சேர்ந்து, ஓர் உலுக்கு உலுக்கி நிம்மதியைப் பதம் பார்க்கும். பக்தி மார்க்கத்தில் மனத்தைச் செலுத்த, அமைதி உள்ளொளி பெருக்கும்.

கன்னி : பேச்சாற்றல் அதிகரிக்கும். குடும்ப நலம் சீராக இருக்கும். அக்கம் பக்கத்தில் உள்ளவர்களால் அனுகூலம் கிடைக்கும். செவ்வாய் 4ல் கேதுவுடன் இருப்பதால், அவ்வளவு நல்ல பலனில்லை. தீயவர்கள் நட்பை விட்டு விடுவது நல்லது. அதனால் பல சங்கடங்களைத் தவிர்க்கலாம். தாய் - தந்தை நலனில் இதுவரை அசட்டையாக இருந்த நீங்கள், இனி முழு கடமை செலுத்த வேண்டும். சட்ட வல்லுனர்களுக்கு ஏற்றமான காலம். சாதுக்கள் தரிசனம் சர்வ தோஷத்தையும் போக்கும்.

துலாம் : குரு 9ல் இருந்தாலே அதீத பலன்கள்தான். அதிலும் ராசியைப் பார்ப்பது நல்ல அதிர்ஷ்டமான அமைப்பு. இதனால் வரும் நன்மைகளைச் சுருக்காகப் பட்டியலிட்டால், வெற்றி, திறமை, புத்திசாலித்தனம், துணிவு என நிறைய வருது. ரியல் எஸ்டேட் லாபம் கொண்டு வரும். புதிய சொத்துக்கள் சேரும். டூ வீலரோ, ஃபோர் வீலரோ, வாகனத்தால் நலம் வரும். மக்கள் பாக்கியம் ஏற்படும். அரசாங்கப் பணியாளர்களுக்குச் சிறு பிரச்னைகள் வரும். பொறுமையாகச் சமாளிக்கணும்.

விருச்சிகம் : சூரியன் 11ல் தனி ராஜ்ஜியம் அமைத்து, கோலோச்சுவதாலும், சனி வக்கிரம் என்பதாலும் மத்திமப் பலன்களை மட்டுமே எதிர்பாருங்கள். வெளிநாட்டுத் தொடர்புகள் அளவோடு பலன் தரும். பிற மதம், மொழி பேசுவோர் மூலம் பிரச்னை ஏற்படும். பக்குவமாகச் சமாளிப்பது நல்லது. ஸ்பெகுலேஷன் பக்கம் தலை வைத்துக் கூட படுக்காதீர்கள். சூடான வார்த்தைகளைத் தவிர்த்தால் பி.பி. ஏறாமல் இருக்கும். நல்லவர்கள் சகவாசம் நன்மை தரும். புதன் வக்ரம் என்பதால், எழுத்துத் துறைக்காரர்களுக்கு ஏணி வைச்ச மாதிரி திடீர் உயர்வு கிடைக்கும்.

தனுசு : சுபகாரியங்களில் பங்கு கொள்ள சந்தர்ப்பம் கனிந்து வந்திருக்குறது. விருந்து, உல்லாசம், கேளிக்கைனு ஜாலியான வாரம். புதிய பதவிகள், பொறுப்புகள் கூடும். 'நோ வேகன்ஸி' போர்டு பார்த்து ஏமாற்றத்துடன் திரும்பிய காலம் இனி வராது. நல்ல உத்தியோகம் கிடைக்கும். கடிதப் போக்குவரத்து நல்ல செய்தி கொண்டு வரும். வாசலிலேயே காத்திருங்கள். கூட்டுத் தொழில் செய்பவராக இருந்தால், வளர்ச்சி காணலாம். தனுசு ராசிக்காரர்கள், கேது, சனி, செவ்வாய் கிரகஸ்துக்கு ப்ரீதி செய்வது நன்மை சேர்க்கும்.

மகரம் : ராகு மட்டும் 6ல் பந்தாவாக வீற்றிருக்கிறார். மற்றதெல்லாம் 'ஓ.பி.எஸ்.' போல டம்மியாக உட்கார்ந்திருக்கிறது. அதனால் சாதாரண வாரமாகத்தான் இருக்கும். 'தம்' கட்டி சமாளிங்க. 'போகணும்... போகணும்'னு தள்ளிப் போட்டுக்கிட்டிருந்த பயணம் வந்து சேரும். அதனால் நல்ல பலனும் எதிர்பார்க்கலாம். சனி 5ல் வக்கிரம், குரு பலமும் குறைவு. அதனால் மக்கள் நலனில் அதிகமான அக்கறை தேவை. வீண் சண்டைச் சச்சரவில் மாட்டிக் கொண்டால், ஜகா வாங்கிடுங்க. சுவாசம், நெஞ்சு சம்பந்தப்பட்ட கோளாறுகள் நேரலாம். கவனம்.

கும்பம் : குரு, செவ்வாய், கேது ஆகியோரது அவியல் கூட்டணி படு ஸ்ட்ராங்காக இருப்பதால், எதிரிகள் எட்டு கிலோ மீட்டருக்கு ஓடிப் போய் ஒளிவாங்க. பொருளாதார நிலையில் கண்ணே பட்டுடும். உடன்பிறந்தவர்கள் அனுகூலமுண்டு. அதனாலே, 'பையா அண்ணாத்தே, தம்புடு' என்று காக்கா பிடிச்சு வைச்சுக்கோங்க. குடும்பத்தில் மகிழ்ச்சி, குதூகலம் நிறைந்திருக்கும். கூட்டுத் தொழிலில் எச்சரிக்கை தேவை.

மீனம் : குரு 10ம் இடத்தில் இருப்பதாலும், 10ல் உள்ள கிரகங்களை ஃப்ரெண்ட்லியாக பார்ப்பதாலும், இதுவரை நீங்கள் பட்ட கஷ்டமெல்லாம் தவிடு பொடியாகப் போகுது. சிவப்பு நிறம் லாபம் கொண்டு வரும். வீட்டில் கால் வைக்க இடமிருக்காது. அந்த அளவுக்கு நூதனப் பொருட்கள் வந்து குவியும். கேளிக்கை, விளையாட்டு விஷயங்களைக் குறைத்துக் கொண்டால், பர்ஸும் இளைக்காது. உடல் ஆரோக்கியமும் நன்றாக இருக்கும். பெண்களுக்கு ஒன்னும் பிரச்னை இல்லை. மாமூலான வாழ்க்கை. தான தருமம்னு நிறைய செய்யுங்க. கடவுள் கண் திறந்து பார்ப்பார்.

கடக ராசிக்காரரான கலை விமர்சகர் இந்திரனுக்கு அடிச் சாச்சாம் லக்கி பிரைஸ்!





குறையொன்றுமி

நம்மைப் பாவனமாக்குவதனாலே பகவானுக்குப் பூதாத்மா என்று பெயர் எனச் சொன்னேன். அவனை நாம் உள்ளுக்குள்ளே இறுத்திக் கொள்வோமானால், சமஸ்த பாபங்களும் போய்விடும்.

ஸ்ரீமத் பாகவதத்திலே ஆறாவது ஸ்கந்தத்திலே பரீக்ஷித் மகாராஜா சுகப்பிரும்மரைப் பார்த்துக் கேள்விகள் கேட்கிறான். அதிலே ஒரு கேள்வி:

“சுவாமி! பிராயச்சித்தம் என்று சில கர்மாக்கள் சொல்லப்பட்டிருக்கின்றன - பாபத்தைப் போக்குவதற்காக. பிராயச்சித்தம் எதற்காகச் செய்வது? யானையைக் குளிப்பாட்டி விட்டால் அது மீண்டும் மண்ணை அள்ளித் தலையில் போட்டுக் கொள்கிறதே! அந்த மாதிரிதானே மனிதன் பிராயச்சித்தம் செய்தாலும் திரும்பவும் பாபத்தைப் பண்ணுகிறான். அப்படியானால் பிராயச்சித்தத்தினால் பிரயோஜனமில்லையே. அது வீண் தானே?”

‘அடியேன் மனத்தில் இவ்வாறு தோன்றுகிறது. அதைத் தெளிவிக்க வேண்டும்’ என்று சுகபிரும்மத்தைப் பார்த்து பரீக்ஷித் கேட்டதும் அவர் ரொம்ப சந்தோஷப்பட்டார்.

இந்த மாதிரி நுணுக்கமாகக் கேள்விகள் கேட்பாரைக் கண்டால் மகான்களுக்கு ரொம்பப் பிடிக்கும். சிஷ்யனானவன் பிரச்னமதியாக இருக்க வேண்டும் - அதாவது கேள்விகள் கேட்கும் புத்தி உடையவனாக இருக்க வேண்டும். அந்தக் கேள்விகள் பரீக்ஷார்த்தமாக இருக்கக் கூடாது; சாஸ்திரரீதியாக இருக்க வேண்டும்.

பிரச்னோபநிஷத் என்ற உபநிஷத்தானது கேள்வி எப்படிக் கேட்கவேண்டும் என்பதைச் சொல்லிக் கொடுக்கிறது!

பரீக்ஷித்தின் கேள்வியைக் கேட்ட சுகர் சொல்கிறார்:

“பிராயச்சித்தத்தினுடைய தன்மையை நீ தெரிந்து கொள்.

“ஒருத்தர் பிராயச்சித்த கர்மாவாக ஏகாதசி உபவாஸம் இருந்து, துவாதசி பாரணை பண்ணி, யாத்ரா தானம் பண்ணி, க்ஷேத்ராடனம் கிளம்புகிறார். புண்ய நீராடிவிட்டுத் திரும்பி வந்து தசமி ராத்திரி உபவாஸம்; ஏகாதசி நிர்ஜல உபவாஸம்; துவாதசி பாரணை பண்ணி அதற்கப்புறம் சஹஸ்ரநாமம் சொல்லி, கீதையைப் பாராயணம் பண்ணி, ராத்திரி யோகம் என்ற நிலையில் பகவானை தியானம் பண்ணிக் கொண்டே இருந்தால்... பாபங்கள் அகலும். ஆனால் உபவாஸம் இருந்தவருக்கு உணவு உள்ளே போனதுமே உறக்கம் வருகிறது. அப்புறம் இரவெல்லாம் எவ்வாறு தியானம் செய்வார்? ஆனால் சாஸ்திரமோ ‘தூங்காதே!’ என்கிறது.

“இதற்கு என்ன பண்ணலாம், என்று கேட்டால், ஒரு வழி இருக்கிறது.

“பகலவனைக் கண்ட பனிபோல் பாபம் நம்மைவிட்டு விலக வேண்டுமானால் நாராயண நாமத்தைப் பாராயணம் பண்ண வேண்டும்.”

“- வாசுதேவ பராயணா!”- திருஷ்டாந்தத்தோடு சொல்கிறார் சுகபிரும்மம்.

ஒரு மஹரிஷி காட்டு வழியே வருகிறார். மூங்கி

முக்கூர் லக்ஷ்மிநரசிம்மாச்சார்யார்



லை 33

லெல்லாம் ஒன்றோடு ஒன்று தீப்பிடித்து எரிகின்றன. காட்டைத் தகிக்கிறது அக்னி! மஹரிஷி பார்த்துக் கொண்டேயிருக்கிறார். 'ஐயோ! இவ்வளவு பசுமையான காடு அழிந்து கருகிப் போய்விட்டதே!' என்று ரொம்ப வருத்தம் அவருக்கு.

க்ஷேத்திராடனமெல்லாம் முடித்து, மூன்று மாதம் கழித்து அந்த வழியிலேயே திரும்புகிறார். பார்த்தால், அந்த இடமெல்லாம் - கரிக்கட்டையாக இருந்த இடமெல்லாம் - பசுமையாக ஆகிவிட்டது! அப்போதுதான் அவர் மனத்திலே ஒன்று தோன்றியது: அக்னி இருக்கிறதே, அது எல்லாவற்றையும் எரித்தது - எதையெதை என்று பார்த்தால், பூமிக்கு மேல் இருக்கும் படியான மரத்தை எரித்ததே தவிர பூமிக்குள்ளே இருக்கும்படியான வேரை அழிக்கக் கூடிய சக்தி அக்னிக்கு இல்லை. வேர் உள்ளே இருந்ததனாலே, மழை பொழிந்ததுமே முளைத்துவிட்டன மூங்கில்கள்!

அந்த மாதிரிதான். எத்தனையோ பிறவிகள் நாம் அடைந்து, 'துர்லபோ மனுஷோ தேகோ' என்று சொல்லப்படுகிறது மனித ஜன்மாவை அடைந்திருக்கிறோம். பாபத்தைத் தூண்டக் கூடிய வாஸனா பலம் உள்ளுக்குள்ளே வேர் மாதிரி இருக்கிறது.

பிராயச்சித்த கர்மா இருக்கிறது பாருங்கள்.. அது மேலே இருக்கிற மூங்கில்கள், செடி கொடிகளை அழிப்பது போல, பாவத்தைப் போக்குமெயொழிய , பாபங்களைச் செய்வதற்கு நம்மைத் தூண்டக் கூடிய, உள்ளே இருக்கிற கெட்ட வாசனைகளைப் போக்கடிக்காது. அந்த சக்தி பிராயச்சித்த கர்மாக்களுக்குக் கிடையாது. பாபங்களை வேரோடு களையவேண்டுமானால், வாசுதேவ பராயண: எம்பெருமானை உள்ளுக்குள்ளே நிலைபெறச் செய்ய வேண்டும். விடாமல் அவனை நினைக்க வேண்டும்.

பிரஹலாதனுக்கு இந்த அறுபடாத நினைவு சித்தித்தது. சதா சர்வ காலம், சந்தத தாரையாக விடாமல் அவனை யார் நினைக்கிறார்களோ, அத்தகையவர்களை, மறுபடியும் பாபம் செய்கிற சித்தம் ஏற்படாமல் ரக்ஷிக்கிறான் பரமாத்மா! ஆகையினாலே, பரமாத்மாவை மனத்தில் தியானம் பண்ண, நாம் கெடுதல் நீங்கி, பவித்ரமாகிறோம்.

பவமான சூக்தம் என்றே ஒன்று உண்டு. புண்யாகவசனத்தின்போது அதை ஜபிப்பார்கள். மங்களத்தைக் கொடுக்கும்படியான ஸ்தோத்திரம். அத்தனை மந்திரங்களுக்கும் ஸ்தோத்திரங்களுக்கும் உள்ளீடாய் உள்ளே வாஸம் பண்ணுகிறவன் பரமாத்மாவானதனாலே நம் பாவத்தைப் போக்கிப் பாவனமாக்குகிறான். அவன் பவித்ரன் ஆனதனாலே நம்மைப் பாவனமாக்குகிறான்.

பராசர பட்டர் பகவத் குணதர்ப்பணம் என்ற நூலிலே அழகாகச் சொல்கிறார்:

பள்ளிக்கூடத்தில் ஒரு பையன் வீட்டுப் பாடம் எழுதாமல் போகிறான். 'உபாத்யாயர் கையை நீட்டு!' என்று அதட்டுகிறார். இந்தக் கையிலே ஆறு அடி; அந்தக் கையிலே ஆறு அடி! பிரம்பினால் பளீர் பளீரென்று அரைகிறார்! துடிக்கிறான் மாணவன்!

பிரம்பு இருக்கிறதே... அந்தப் பிரம்பின் சம்பந்தம் மாணவனுக்கும் இருக்கிறது; அடிக்கிற ஆசார்யனுக்கும் இருக்கிறது. ஆனால், கஷ்டத்தை அனுபவிப்பவன் ஆசார்யனா? சிஷ்யனா?...

சிஷ்யனுக்கல்லவா கஷ்டம்! ஆசார்யருக்கு எந்த கஷ்டமும் இல்லை. பிரம்பின் சம்பந்தம் இருவருக்கும் இருந்தாலும் கஷ்டம் ஒருவருக்குத்தான்.

நம் சரீரத்திலே உள்ளுக்குள்ளே எம்பெருமான் உட்கார்ந்திருக்கிறான்.

உபநிஷத் அழகாகச் சொல்கிறது:

சரீரம் பெரிய விருக்ஷம். அதிலே கிளைகள். கிளையிலே ஜீவாத்மா பரமாத்மா என்று இரண்டு பக்ஷிகள் உட்கார்ந்து கொண்டிருக்கின்றன.

அந்த சரீரத்துக்குரியவருக்குத் தலைவலி வருகிறது. ரொம்ப அவஸ்தைப்படுகிறார்.

ஆனால் அவருக்கு உள்ளே உறைகின்ற பகவானுக்கு உண்டோ அதெல்லாம்...?

வியாதி வருகிறது. சரீரத்துக்குள்ளே உட்கார்ந்திருந்தாலும் பகவான் பரம பவித்ரமாகவே இருக்கிறான். ஜீவாத்மாவுக்குச் சமமாக அவனுக்கும் அந்த சரீர சம்பந்தம் இருந்தாலும் பகவானுக்கு எந்த கிலேசமும் கிடையாது.

இதனால்தான் விஷ்ணுபுராணத்திலே கிருஷ்ணாவதாரமே தத்வபரமாய்க் காட்டப்படுகிறது.

சிறந்த விஷயங்கள், தத்துவங்கள் தெரிந்து கொள்ள வேண்டுமானால் விஷ்ணு புராணத்தைப் படிக்கவேண்டும்.

பாரத தேசத்தின் எல்லையை நிர்ணயிக்கிற சமயத்திலே, விஷ்ணு புராணத்தைப் பார்த்தே அதைச் செய்திருக்கிறார்கள் - அவ்வளவு முக்கியமான கிரந்தம் அது.

அப்படிப்பட்ட விஷ்ணு புராணத்தில் தத்துவம் நன்கு பிரகாசிக்கிறது. அந்த தத்துவத்தை நாம் நன்கு தெரிந்துகொள்ள வேண்டும். அதிலே, கர்ப்பத்தில் சிசு வளருகிற அவஸ்தையெல்லாம் விவரிக்கப் படுகிறது. ஆனால் தேவகியின் கர்ப்பத்தில் பகவான் உதித்தானே அவனுக்கு ஏதாவது அவஸ்தை உண்டா, என்றால் கிடையாது.

மனித சிசுவுக்குத்தான் எல்லா அவஸ்தைகளும். உபநிஷத் சொல்கிறது. கர்ப்பத்திலே இருக்கும் சிசு பகவானைப் பார்த்துக் கேட்பதாகச் சொல்கிறது.

ஏனென்றால், அப்போது கர்ப்பத்திலே இருக்கிற காலத்தில் அதற்கு நல்ல ஞானம்! ஹ்ருதய புண்டரீகத்திலே பகவான் எழுந்தருளியிருக்கிறான் என்பதை உணர்ந்து உள்ளுக்குள்ளே அது தியானம் பண்ணுகிறதாம். 'ஐயோ! என்னைப் படுகுழியிலே தள்ளி விட்டாயே! இப்படியெல்லாம் நான் அவஸ்தை படவேண்டுமா!' என்றெல்லாம் விசாரப்படுகிறதாம்.

பகவானும் அதோடு பேசுகிறான். 'நீ பண்ணிய பாவத்துக்குப் பலனைக் கொடுக்க வேண்டியது என் பொறுப்பாக இருக்கிறது.

அருள்வாக்கு

கறக்கிற காலத்திலும் ஸரி, கறவை நின்றுபோன பிற்பாடும் ஸரி கோமாதாவின் வயிற்றுக்குப் போதிய ஆஹாரம் போடாமல் வாடவிட்டால் அது நமக்குப் பெரிய களங்கம். இந்த விஷயத்தில் நாமெல்லாரும் பெரிய குற்றவாளிகளாக இருக்கிறோம்.

பிற தேசத்தில் வளர்க்கிற பசுக்களையும், நம் தேசத்திலுள்ள பசுக்களையும் பக்கத்தில் பக்கத்தில் நிறுத்தி வைத்து ஒப்பிட்டுப் பார்த்தால் நாம் அவமானப்படும்படியே இருக்கும். மற்ற தேசத்தார் பசுவைத்

தெய்வமாக சொல்லாவிட்டாலும், நடைமுறையில் அவற்றின் வயிற்றுக்கு யதேஷ்டமாகப் போட்டு அவற்றைத் தளதள என்று வைத்துக் காப்பாற்று கிறார்கள். நாமோ நமக்குப் பால் கொடுப்பதற்காக அதற்கு அதம பக்ஷமாக எவ்வளவு தீனி தேவையோ அவ்வளவே போடுகிறோம்.



பசுவைப் புஷ்டியாக வைத்துக் காப்பாற்றுவதற்கானவற்றைச் செய்யாமல் பசுவதையைச் சட்டத்தின் மூலம் தடுக்க வேண்டும் என்று நாம் வெறுமனே முழக்கிப் பிரயோஜனமில்லை. பசு வதையை ஆதரிப்பவர்கள் நாம் வைத்திருக்கும் கறவை நின்று போன கோக்களைக் காட்டி, 'இப்படி இவற்றை எலும்பும் தோலுமாக, குற்றுயிரும் குலை உயிருமாக வைத்திருப்பதைவிட ஒரேயடியாக ஹத்தி செய்து விடுவது அவற்றுக்கே விமோசனந்தானே!' என்று கேட்டால் நாம் வாயைத் திறக்க யோக்யதையில்லாத நிலையாகத்தான் இப்போது இருக்கிறது.

— ஜகத்குரு காஞ்சி காமகோடி
ஸ்ரீசந்திரசேகரேந்திர சரஸ்வதி
சங்கராச்சார்ய ஸ்வாமிகள்

ஆகையினால் நீ இப்படித்தான் அவஸ்தைப் படவேண்டும். வேறு வழியில்லை' என்று பண்ணிய தப்பையெல்லாம் சொல்லிக் கொண்டே வருகிறான். அதுவும் கேட்டுக் கொண்டிருக்கிறது. பகவானோடு பேசுகிறது.

அப்புறம் அந்த சிசு பிறக்க வேண்டிய காலமும் வந்துவிடுகிறது. பிரசவித்து விடுகிறாள் தாயார். குழந்தையின் சிரஸ் வெளியிலே வந்தவுடனேயே, பூலோகத்திலே ஒரு வாயு இருக்கிறது – சடம் என்று ஒரு வாயு! அது தலையிலே ஓர் அடி அடிக்கிறது. அடித்தவுடனே, இத்தனை நேரம் ஞானத்தோடு பகவானுடன் பேசிக் கொண்டிருந்ததே... அது மொத்தமும் போய்விடுகிறது! அழ ஆரம்பிக்கிறது குழந்தை! என்ன அழுகை...? 'குவா குவா' என்று அழுகிறதாம். சமஸ்கிருதத்திலே குவா என்றால் எங்கே என்று அர்த்தம். இதே 'குவாஸௌ? குவாஸௌ?' என்ற கேள்வியைத்தான் ஹிரண்ய கசிபு கேட்டான்!

குழந்தையுடைய வாழ்க்கையின் ஆரம்பமே கேள்விதான்.

"இத்தனை நேரம் ஒருவனுடன் பேசிக் கொண்டிருந்தேனே... அவன் எங்கே?" என்று கேட்கிறதாம்.

இனிமேல் குழந்தை பெரிதாகி, அக்ஷராப்யாஸம் பண்ணி வைத்து, வேதாந்த பாடமெல்லாம் கற்று, அப்புறம் பகவானைப் போய் அடைவது என்பது எவ்வளவு பெரிய காரியம்! ஞானத்தைச் சம்பாதித்துக் கொள்வது ரொம்ப கஷ்டம். சாஸ்திரத்தில் உபதேசம் பண்ணலாம். இதரர்களுக்குச் சொல்லலாம். நிறைய படித்தும் வைத்துக் கொண்டிருக்கலாம். ஆனால் அனுஷ்டானத்தில் அது வரவேண்டாமா?

விஷயத்தை நன்கு புரியும்படி எடுத்துச் சொல்லக் கூடியவர்கள் பலர் இருக்கலாம். ஆனால் அவர்களே சொல்கிற விஷயத்தை அனுஷ்டிக்கிறார்களா என்று பார்த்தால் அப்படிப்பட்ட அனுஷ்டானம் மகான்கள் யாருக்கோ ஒருத்தர் இரண்டுபேருக்குத்தான் ஏற்படும்.


ஆகவே எத்தனை ஜன்மாக்கள் எடுத்து எம்பெருமானை அடைவது என்பது இலேசில் முடிவாகாத காரியம்.

அதேபோல் அந்திமப் பிரயாணமும் ரொம்ப கஷ்டம். ஆயிரம்பேர் நின்று கொண்டு ஏக காலத்திலே சூலாயுதத்தை எறிவார்கள். கர்ப்போபநிஷத்தே இதையும் விவரிக்கிறது. பிராணன் போகிற தறுவாயில் இருக்கிற கஷ்டத்தைச் சொல்லி முடியாது. மறுபடி கர்ப்பத்துக்கே போய்விடலாம் போலிருக்கும் – அவ்வளவு கஷ்டம்! ஆயிரம் பேர் இரண்டு கரத்திலும் சூலம் தாங்கித் தாக்கினால் இரண்டாயிரம் சூலங்கள்!

– அப்படித்தான் பிராணன் போகிற போது கஷ்டமாயிருக்குமா என்று கேட்டால், தெரியாது என்கிறது உபநிஷத்! அவரவரும் அனுபவிக்கப் போவதுதானே. முன்னமே சொல்லி பயமுறுத்துவானேன் என்ற கருணை!

– இந்த மாதிரி அவஸ்தையெல்லாம் நமக்குத்தான். பகவான் பிறந்திருக்கிறான். பல அவதாரங்கள் எடுத்தும் இருக்கிறான். ஆனால் இந்த மாதிரி சம்பந்தம், அவஸ்தையெல்லாம் இல்லாமல் பரமாத்மா வாஸம் பண்ணுகிறான் என்பதனாலே பூதாத்மா என்று அவனுக்குப் பெயர்.

(வளரும்)



மயில் பாண்டி!

மாலை நான்கு மணி ஆகிவிட்டால் போதும் எங்கே சவாரியில் இருந்தாலும் 'கட்' அடித்துவிட்டு தென்திருப்பரங்குன்றம் வந்துவிடுவார் ஆட்டோ பாண்டி!

"ஆமாங்க கொஞ்ச நேரம் தாமதமானாலும் நாமளே பசி தாங்க மாட்டோம். அதுங்க தாங்குமா? அதாங்க" என்கிறார்.



பாண்டி குறிப்பிடும் 'அதுங்க' என்பது குரங்குகளும் மயில்களும்!

திருப்பரங்குன்றம் பின்பக்கமிருக்கும் தென் திருபரங்குன்றத்தில் மயில்களும் குரங்குகளும் அனாயாசமாக அலைந்து கொண்டிருக்கின்றன. இதில் வெள்ளை மயிலும் உண்டு.

"ஆரம்பத்தில் இங்க ஒரு வெள்ளை மயில் தாங்க இருந்தது. இப்ப நான்கு மயிலாயிட்டுது. இந்த மாதிரி அரிய மயில் வகை எல்லாம் ஆஸ்திரேலியாவுல மட்டும்தான் உண்டுன்னு சொல்றாங்க" என்று பேசிக்கொண்டிருந்தவரின் முதுகில் குரங்குகள் வந்து செல்லமாக ஏறி விளையாட, 'பொறுங்கப்பா' என்று கூறிவிட்டு பார்சலை எடுக்கிறார் பாண்டி.

வாழை, பப்பாளி, கொய்யா போன்ற பழங்களைக் குரங்குகளின் வாயில் ஊட்டி விட, மற்ற குரங்குகள் அடிதடிக்குள் இறங்காதது ஆச்சர்யம்!

"ஆரம்பத்துல நான் வந்து கொடுக்கும்போது ஒன்னொன்னும் அடிச்சுக்கும். நான் மூணு பிரிவா பிரிச்சு, ஒவ்வொரு குருப் குரங்குகளுக்கும் தனித் தனியா இந்தப் பழங்களைக் கொடுக்க ஆரம்பிச்சேன், அப்புறம் பழகிப் போச்சு. இப்பல்லாம் நோ சண்டை!" என்று சிரிக்கிறார் பாண்டி.

இங்கே குரங்குகளுக்குப் பழம் கொடுப்பதைக் கண்ட மயில்கள் அங்கே கத்த, 'வர்றேன், வர்றேன்' என்று சொல்லி விட்டுச் செல்கிறார் அவற்றுக்கான உணவுடன்.

இந்தப் பழங்களுக்காக தமது சொந்தப் பணத்தையே செலவழிக்கிறார் இவர்.

ஒருமுறை குரங்கு ஒன்று வயிற்றுப் போக்கு வந்து அவதிப்பட வெட்னரி டாக்டரை அழைத்து வந்து வைத்தியம் செய்திருக்கிறார் இவர்.

"இந்தக் குரங்குகளையும், மயில்களையும் வேடிக்கைப் பார்க்க வரும் மக்கள் ஒரு கைப்பிடி அளவு அரிசி கொண்டு வந்தா போதும்ங்க, மயில்களுக்கு இரையாகும்." என்கிறார் இந்த மயில் பாண்டி!

இந்தக் குரங்குகளில் ஒன்றிற்குப் பார்வை கிடையாது. அது இங்கிருக்கும் சமண குகையை விட்டு வெளிவருவதில்லை. அந்தக் குரங்கிற்கு மட்டும் உள்ளே சென்று தினமும் ஏதாவது உணவு கொடுத்து வருவாராம் மயில்பாண்டி.

- மது

● அ. ராஜா ரஹ்மான், கம்பம்.

? உள்ளாட்சித் தேர்தலில் அ.தி.மு.க. அணிகளும் தி.மு.க. அணிகளும் மாறிவிட்டது பற்றி...?

! பொதுத் தேர்தல் முடிவுகளை மாற்றியமைக்க முடியாது என்றாலும் அந்த முடிவு அறிவுபூர்வமானதல்ல உணர்ச்சிபூர்வமானது என்பதை நிரூபிக்க ஒரு வாய்ப்பு. அந்த வாய்ப்பை இன்றைய எதிர்க்கட்சிகளின் அணி சரியாகப் பயன்படுத்திக் கொள்ளவேண்டும்.

● கார்த்திக் அமர்த்யா, மயிலாடுதுறை.

! 'டம்மி'க்குச் சரியான தமிழ்வார்த்தை என்ன?

! பன்னீர் மணக்கும் பதிலைத்தானே எதிர்பார்க்கிறீர்கள்!

● வசந்தாகாந்த், கருப்பம்புலம்.

? தினத்தந்தி பரிசு பெறும் பேராசிரியர் சுப்புரெட்டியார், எழுத்தாளர் வாசவன் ஆகியோரை வாழ்த்துங்களேன்...?

! முதுபெரும் ஆராய்ச்சியாளருக்கும் முதுபெரும் தரமான எழுத்தாளருக்கும் உரிய கௌரவம் தரப்பட்டிருக்கிறது. பாராட்டலாம், தினத்தந்தியையும்!

● நானாரானா, சென்னை – 34.

? பாஸ்போர்ட் பெற்றுக் கொண்டுதான் பிற மாநிலத்தவர் மும்பைக்குள் நுழைய வேண்டும் என சிவசேனா வலியுறுத்தி வருவது பற்றி...?

! இந்தியாவின் ஒருமைப்பாட்டுக்கு உலைவைக்கும் தவறான கொள்கை. அது செயலுருப் பெறும்வரை காத்திராமல் மத்திய உள்துறை அமைச்சகம் தொலை நோக்குடன் செயல்பட்டு முளையில் கிள்ளும் நடவடிக்கை எடுக்க வேண்டும்.

● வி. ஜானகி, சென்னை – 4.

? சென்னையில் பூகம்பம் நிகழ்ந்தபோது என்ன நினைத்தீர்கள்?

! 'அம்மாவை ஆட்சியிலிருந்து நீக்கியதை பூமித்தாயே பொறுக்கவில்லை' என்று அ.தி.மு.கவினர் பேசுவார்கள் என நினைத்தேன். அப்படியே நடந்தது!

● மெரின் கிறிஸ்டி,
திருவனந்தபுரம்.


! அரசியல் கேள்விகளுக்கு மட்டும்தான் பதில் சொல்வீர்களா? சமுதாய கேள்விகளுக்குப் பதில் சொன்னால் என்ன?

! எல்லாவிதமான கணைகளுக்கும் தயாராகத்தான் இருக்கிறோம். ஆனால், அரசியல் பொடி தூவிய கேள்விகள் தான் அதிகம் வருகின்றன. ஒரு சந்தேகம்... அரசியல் என்பது சமுதாயம் சார்ந்ததில்லையா?..

● ரேவதி சங்கர், சென்னை – 13.

? போயஸ் தோட்டத்திலேயே முதல்வர் பன்னீர்செல்வத்துக்கு இடமளித்துள்ளாரே ஜெ...?


! ஹவுஸ் அரெஸ்டுக்கு இப்படி ஒரு பெயரா...?



• 'அர்த்தமுள்ள' முதல்வர்



• பாச அரசியல்!



• பிளஸ் ஒன்!



• அபத்தவாதம்!



• ஜெய் பஜ்ரங்!

● ஆர். கவிதா, மதுரை – 3.

? குமரி அனந்தனின் தொண்டர் காங்கிரஸ், காங்கிரஸில் இணைந்ததைப் பற்றி..?

! காங்கிரஸ் உறுப்பினர்களில் ஒரு எண்ணிக்கை கூடியது.

● எம். இராஜேந்திரன், லால்குடி.

? 'மக்கள் வாக்களித்து ஓர் அரசை உருவாக்கிய பிறகும் மக்கள் தீர்ப்புக்கு மதிப்பளிக்க மாட்டேன் என்று

நீதிமன்றங்கள் கூறுமேயானால் தேர்தல்கள் எதற்கு?' என்று முன்னாள் அ.தி.மு.க. அமைச்சர் பட்டாபிராமன் கூறியுள்ளாரே?

! அபத்தமான வாதம். மக்களின் தீர்ப்பை உச்சநீதி மன்றம் ரத்து செய்யவில்லை. அ.தி.மு.க. ஆட்சி தான் தொடர்கிறது. குற்றச்சாட்டும் தண்டனையும் நிலுவையிலிருக்க, ஒருத்தர் சட்டமன்ற உறுப்பினர் பதவி வகிக்கலாகாது என்றுதான் சொல்கிறது. தேர்தலில் நிற்கவே தகுதி இல்லாத ஒருவரை மக்கள் எவ்வாறு தேர்ந்தெடுக்க முடியும்!

● வி.பி.கே. சரவணன், உத்தமபாளையம். ❐

? பஜ்ரங்தள் தீவிரவாத அமைப்பு இல்லை என்று கூறியிருக்கின்றாரே அத்வானி?

! அடிப்படைவாதம், தீவிரவாதம், பயங்கரவாதம் இவற்றிடையே உள்ள இடைவெளி குறைவு. ஒன்று, மற்றொன்றின் எல்லைக்குள் புகுந்து சடுகுடு விளையாடிவிட்டு மறுபடி தனது எல்லைக்குள் திரும்பி அடங்கிவிடும். எச்சரிக்கையாக இருந்து அமுக்கி விடவேண்டும்!

● காசிதாசன், மருதாடு. ✱

? உச்சநீதிமன்றத் தீர்ப்புக்குக் கொடும்பாவி கொளுத்துகிறார்களே. அப்புறம் டான்ஸி

'டம்மி'க்குச் சரியான தமிழ் வார்த்தை என்ன?

கேசுக்குச் சாதகத் தீர்ப்பு வந்தால், அதுமட்டும் எப்படி நியாயமாகும்?

! அப்போது ஷைலாக் போல 'A Daniel has come to judgement' என்பார்கள்!

● கே.என். பாலகிருஷ்ணன், சென்னை - 600 091.

? சட்டங்களில் ஏன் ஓட்டைகளையும் வைத்துள்ளார்கள்?

! ஓட்டைகளை யாரும் வைக்கவில்லை. ஏமாற்ற, ஏய்க்க நினைப்பவர்கள், அவற்றை உருவாக்கிக் கொள்கிறார்கள்.

● ஆர். ராமசாமி, ஸ்ரீவில்லிபுத்தூர்.

? உலக அரசியல் இயக்கங்களில் இல்லாத குடும்ப உணர்வுகள் அ.தி.மு.க.வினருக்கு மட்டும் இருக்கிறது என்று ஜெயலலிதா கூறியதைப் பற்றி...?

! அதுதான் அ.தி.மு.க. அரசியலின் மிகப் பெரிய குறைபாடு. ஜனநாயகத்துக்கு மிகப்

❐ ரூ. 100/- பரிசு பெறுபவர்:
வி.பி.கே. சரவணன்,
தர்மர்கோயில் தெரு,
உத்தமபாளையம் – 625 533.

✱ ரூ. 50/- பரிசு பெறுபவர்:
காசிதாசன்,
மருதாடு அஞ்சல், 604 405

பெரிய பின்னடைவு. ஜனநாயகம் என்பது பாசத்தின் பாற்பட்டது அல்ல. அறிவு பூர்வமான அணுகுமுறையே அதன் அடிப்படை.

● வி. சிவா, மதுரை - 16.

? கூட்டணி கட்சிகளை மதிக்காமல் உள்ளாட்சி தேர்தலிலும் அ.தி.மு.க. தன்னிச்சையாக வேட்பாளர்களை அறிவித்துள்ளதே?

! அ.தி.மு.க. அப்படித்தான் நடந்து கொள்ளும் என்பது நமக்குத் தெரியும். ஆனால்,



• விஷ முளை!

பட்டும் புத்திவராமல் மறுபடி மூக்குடைவோரை நினைத்தால்தான் பரிதாபம்!

● எம். சம்பத், வேலாயுதம்பாளையம்.

? புதிய முதல்வர் பன்னீர்செல்வம், ஜெயலலிதாவின் கட்டளைக்கு இணங்காமல், சுயமாய்ச் செயல்பட ஆரம்பித்தால் என்ன ஆகும்...?

! ஒரே ஆண்டில் தமிழகத்துக்கு மூன்றாவது முதல்வர் கிடைப்பார்.

● கே. சின்னையா, கேளம்பாக்கம்.

? உள்ளாட்சி தேர்தலில் மூன்றாவது அணி தேறுமா?

! மிகக் குறைந்த அளவில் வெற்றி பெற்றால்கூட "புதிய முயற்சிக்கு நல்ல ஆரம்பம்" என்று கூறிக் கொள்ள வாய்ப்பு இருக்கிறது. முட்டை போட்டால்தான் ஆபத்து. தன்னம்பிக்கை இழந்து, சோர்ந்து மறுபடி முதுகு சவாரிக்குத் திரும்பிவிடும். ○

சலனமற்று இருந்த மின்கம்பி மீண்டும் ஊஞ்சலாடியது. சாம்பல் நிறங்கலந்த மணிகாகமும் இருள் மினுங்கும் அண்டங் காகங்களும் வரிசையாய்... போட்டோவிற்குக் காட்சி தருவது போல் அமர்ந்திருந்தன. பட்டமிளகாய்க் கண்ணீரை வரவழைக்க, பழையதுக்கு ஒரப்பேத்த மிளகாயைக் கடித்துக்கொண்டே, தம்பியோடு தானுமாய் ரசித்துப் பார்த்துக்கொண்டிருந் தாள் சிறுமி.

தற்காலிகமாய் அழுகை நின்று போயிருந்தாலும், எப்பொழுது வேண்டுமானாலும் அவன் அழ லாம் என்பதால், அவசர அவ சரமாய்க் கஞ்சிக் குடித்துக் கொண்டிருந்தாள். நல்ல வேளை, கவனம் முழுவதும் காகங்கள் பக்கமே இருந்தன. இல்லையென்றால் கஞ்சிக் குடிக்கவே விட மாட்டான். புழுதி படிந்த விரல்களைச் சோற்றுக்கிண்ணியில் நுழைத்து அலசுவான். ஊட்டி விட்டாலோ திங்கவே மாட்டான், தூ தூவென்று கீழே துப்பு வான். எரிச்சல்பட்டு அடித்துவிட்டாலோ அவ்வளவுதான். குட்டிக் கரணம் போட்டாலும் அழுகையை நிறுத்த முடியாது. அம்மா ஒருத்தி யால்தான் அவனை ஓச்சி விட முடியும். தம்பியை விட்டுவிட்டு அம்மா வேலை வித்துக்குப் போகும் போதெல்லாம், அலறி அழுது தெருவையே கூட்டி விடுவான். பூ, பூனை,



கிழிந்த
நேச

ஒளி எதையாவது காட்டி அவன் கவனத்தைத் திருப்ப வேண்டும். குரலில் கடுமையோ, எரிச்சலோ கொஞ்சம் கலந்திருந்தாலும் அவ்வளவுதான், அம்மாவின் மாராப்பைத் தவிர அவனை அமுத்திவிட யாராலும் முடியாது.

பாப்லோ அறிவுக்குயில்

தடவிக் கொடுப்பது போலிருந்த இளம் வெயில், சூரியன் மேலேர ஏற, எங்கும் அனலைத் துப்பும் ராட்சஸ சர்ப்பமாய் நாவைச் சுழற்றிக் காங்கலால் விளாசிக் கொண்டிருந்தான். கோடை காலம் முடிந்திருந்தும், உக்கிரம் குறையாமல் சீறிக்கொண்டிருந்தான் 'உறுமச் சூரியன்.'

பள்ளிக்கூடத்திலிருந்து பிள்ளைகள் வருகிறார்களென்று முன்கூட்டியே அறிவிப்பதுபோல் சிரிப்பொலியும், அலுமினிய தட்டுகளின் தாள ஒலியும் தெருவையே கூச்சலாக்கி இருந்தது.

"யே லெச்சுமி ஸ்கூலுல இன்னைக்கு மேசிக்குக் காட்டுனாங்கடி..."

"அப்புடியா, என்னத்த அப்புடி காட்டுனாங்க ரஞ்சிதா...?"

"ம்.. அகக்கு புகக்கு, எனந்தப்பயம் நான் கேட்டப்ப குடுத்தியா நீ...?"

"ஏய்... ஏய் பொசாய பன்னியோடம் உட்டு வாப்பா, எங்கவூட்டுத் தோட்டத்துல உலுக்கித் தாரேன்."

"சத்தியமா?"

"சத்தியமா தாரேம்பா... ஸ்கூலுல நடந்த மேசிக்க சொல்லுப்பா.."

"நம்பக்கூட மூணாப்பு படிச்சானே சுதாகரு, அவன கூப்டுத் துணிக்குள்ள கைய உடச் சொன்னாரு, வுடச் சொன்னாரா? - அவனும் உட்டான், இப்ப கைய வெளியயெடுத்து எல்லாத்துக்கும் தெரியிராப்புல காட்டச் சொன்னாரு... காட்டினானா, எல்லோரும் மணலு மணலுன்னு சொன்னாங்க, இப்ப துணிய சுதாகர புடுச்சிக்கச் சொல்லி, மந்திரக் கோலால துணிப்பைய மூணுவாட்டி தடவியபடியே வாயிக்குள்ள செபிச்சாரா அப்புறம் ஒரு தாட்டி சுதாகர கைய வுடச் சொன்னாரா?.."


"கைய உட்டானா?" ஆர்வத்தால் கண்கள் விரிய லெட்சுமி கேட்டாள்.


"அதான் சொல்லிக்கிட்டே வரேன்ல.. வுடச் சொன்னாரா?.. இவனும் கைய வுட்டுப் பாத்து, கொஞ்சபோது அள்ளி வெளியே எடுத்தான். மேசிக்குக் காரரு வாயில போட்டுப் பாருன்னாரு.. இவனும் வாயில போட்டுப்பாத்துட்டு சீனின்னு சொன்னான். நம்ப ரேணு டீச்சரும் வாயில போட்டுப் பாத்திட்டு சீனிதான்னு சொன்னாங்க."

"அப்ப நாமகுடுத்தாலும் அந்தய்யா மண்ணெ சீனியாக்குவாரா?"

"ஆக்குவான் ஆக்குவான் அவருகிட்டதான் மந்திரக் கோலு இருக்கே!"

நாய்க்குட்டிய போல கூடவே ஓடியாந்த நிழலு, இப்ப காலுக்கடியில் பதுங்கிக் கிடப்பதைக் கண்டதும், ரெண்டாம்பெல் அடிக்காங்காட்டியும் 'தட்ட' வூட்ல வெச்சிட்டு போவுணும்னு, "நாழியாயிடுச்சி லெச்சுமி" கூவிக் கொண்டே ஓடினாள்







''நம்ம ராஜாகுட்டிக்குப் பிரமாத ரசனைங்க.. எதை, எப்ப, எப்படிச் செய்யணுமோ அப்படிச் செய்துட்டது.''

''அப்படி என்ன செஞ்சான் குழந்தை, இன்னிக்கு?''

''நீங்க வெளியே கிளம்பிப் போனதும் நீங்க எழுதி வைச்சிருந்த சிறுகதையைச் சுக்குச் சுக்கா கிழிச்சுட்டான்!''

– லலிதா செல்லப்பா

ரஞ்சிதம்.

இதுவரை மகிழ்ச்சியோடு இருந்த லெட்சுமியின் முகம், மலர்ந்திருந்த பூ வெயிலில் வாடியதுபோல், சுருங்கிப் போயிருந்தது.

வாசலிலேயே கோணியில் தூங்கிப் போயிருந்த தம்பியை, தோளில் தூக்கிப் போட்டுக் கொண்டு உள்ளே சென்று, கொடிக் கயிறில் கிடந்த அம்மாவின் சேலைத் துணியை உருவி, திண்ணையை ஒரு விசிறு விசிறிட்டுப் படுக்க வைத்தாள்.

குழந்தை சிசுவாய் இருந்தவரை காட்டு வேலைகளுக்கெல்லாம் போகாமலிருந்த பாவாயி, குழந்தை தவழத் தொடங்கியதும் பழையபடி நடவுகளைவெட்டென்று போகத் தொடங்கியதும், குழந்தையைப் பார்த்துக்கவும், வீட்டுவேலை செய்யவும், தோதாக இருக்குமென்று லெட்சுமியைப் பள்ளிக் கூடத்தைவிட்டு நிறுத்திவிட்டாள். நான்காம் வகுப்புக்குத் தேர்ச்சியாகி வந்து பத்து நாள் பள்ளிகூடம் போயிருப்பாள், போகவேண்டாமென்று நிறுத்தி இப்ப ஒரு மாதமாகிறது. ஆரம்பத்தில் தம்பியைத் தூக்கி வைத்துக் கொண்டு விளையாடவும், ஆடு மேய்க்கும் பிள்ளைகளோடு சேர்ந்து கொண்டு 'கூட்டாஞ்சோறு' ஆக்கித் திங்கவும், ஊரைக்கோலி திரியவும் ஆசையாய் இருந்தது லெட்சுமிக்கு.

தன்சோடி பிள்ளைகள் சிரிப்பும் கும்மாளமுமாய்ப் பள்ளிக்கூடம் போவதைப் பார்க்கும்போதும் - தம்பியோடு மல்லுக்கட்டும் போதும் - உலைவைக்க விறகு ஒடிக்கப் போய் பீக்கருவை முள்குத்தி இரத்தம் வந்த போதும் உணர்ந்தாள், ரேணு டீச்சர் சொன்னதில் எவ்வளவு 'நெசம்' இருக்குதென்று.

'நாளைக்கு நீ அம்மாவாட்டம் கூலி வேலைக்குப் போயி வெயில் மழைன்னு கிடந்து சாவணும். துணிமணிக்கும் சோத்துக்கும் பிச்சைக்காரியப்போல ஆண்டைங்க வீடுகள்ல கையேந்தி நிக்கணும் - இப்படித்தான் நீயும் நிக்க ஆசப்படுறியா? இல்ல என்னப்போல படிச்சி, யாரோட தயவையும் பாக்காம கௌரவமா வாழ ஆசப்படுறியா?' டீச்சர் சொல்லிவிட்டுப் போனது உறுத்திக் கொண்டே இருந்தது.

தருமாசுபத்திரிக்குக் காயிலுபாக்க போயிருக்கிற அப்பா வந்ததும் சொல்லணும். பள்ளியோடம் போவும்போது வேணும்னா தம்பியையும் தூக்கிக்கிட்டுப் போரேம்பான்னு சொல்லிப் பார்ப்போம்... அப்பா மாட்டேன்னா சொல்லிடப் போறார்! ஆனால் அம்மாவ நெனைச்சாதான் பயமாருக்கு. தம்பிப்பய பொறந்திருந்தப்ப அம்மா வஞ்சியத இப்ப நெனைச்சாலும் உச்சிமுடிய புடுச்சித் தூக்கி செவுட்டுல அறைஞ்சாப்ல வலிக்கிறது. "பொட்டாச்சி நீ பள்ளியோடம் போயி என்னடி கிழிக்கப்போற, தம்பிய வெச்சிக்கிட்டு ஊட்டுவேல செஞ்சி கத்துக்க, போற வூட்லியாவது வசவு வாங்காமலாச்சும் குப்பகொட்டலாம்..."

ரஞ்சிதம், மஞ்சுளா, கற்பகம், ஜெயந்தி இவ ஜோடி பிள்ளைங்களெல்லாம் வெள்ளைச் சட்டையும் நீலப்பாவாடையும் போட்டுக்கொண்டு, கெலிப்பும் கும்மாளமுமாய்ப் பள்ளிக்கூடம் போவும்போது, நாம் மட்டும் கிழிஞ்சுபோன பாவாடையைப் போட்டுகிட்டுத் தம்பியை வெச்சிக்கிட்டு ஊட்டு வேல செஞ்சி லோல்படும்போது, நம்ப டீச்சர் சொன்னாப்ல, படிச்சி டீச்சராவ முடியுமா? இவதான பள்ளியோடம் பக்கமே போவப் புடாதுன்னு முனியாட்டம் குதிக்கிறாளே! அம்மாமேல் கோவம் கோவமா வந்தது. 'எங்கே இப்படியே வேலவித்து செஞ்சே பொழைக்க வெச்சிடுவாளோ?'

நினைத்தவுடன் கண்ணீர் ததும்பி வழிந்தது.

அம்மாவின் காங்கல் வார்த்தைகளால் கிழிந்து போயிருந்த மனத்தில்... டீச்சரின் நம்பிக்கையூட்டும் பேச்சு சாமரம் விசியதால் காயம் மெல்ல ஆறிக்கொண்டே வந்தது. பூவரசில் குந்தியிருந்த சாம்பல் கலந்த பழுப்பு நிற 'கொட்டாபுளி குருவிகள்' சேர்ந்து எழுப்பிய ஒலியிழை, கிழிந்து கிடந்த மனசைத் தைத்து, புத்துணர்வூட்டியது. நம்பிக்கை, முட்டிக் கொண்டு வெளிவந்து தன் பசுந்தளிர் இதழால் புன்னகை செய்யும் கடலைச் செடியைப்போல், மெல்ல மெல்ல வேர்ப்பிடித்திருந்தது, லெட்சுமியின் மனத்தில்.

பள்ளியோடத்தை நிறுத்தியபோது மாட்டிய பை. இன்னும் அதே ஆணியில தான் தூங்கிக் (தொங்கி) கிட்டிருக்கு. நூலாம்படையை அறுத்ததும், பைக்குள்ளிருந்த எட்டுகாலி தலைதெறிக்க சுவரின் வேறொரு திசைக்கு ஓடியது. சிலேட்டை எடுத்தாள். எப்போதோ புடுச்சி வெச்ச, 'ந' வடிவ குருவி, இன்னும் மறையாமல் சிலேட்டில் வாலாட்டிக் கொண்டிருக்க, லெட்சுமி எச்சில் துப்பி துடைத்தாள். வாலாட்டியபடியே குருவி கருமையில் மறைந்து போயிருந்தது. பையைத் துழாவினாள். புழுக்கோண்டு மாக்குச்சி கீழே விழுந்தது. விரல் நுனியால் இறுக்கிப் பிடித்துக் கொண்டு எழுதினாள். விரலிலிருந்து தூள் தூளாய் உதிர்ந்து எழுத்து உருப்பெற்றிருந்தது. 'அம்மா'வென்று. 'வேலைக்குப் போனவ வரட்டும் அழுது அடம் பிடிச்சாவது நாளைக்குப் பள்ளி யோடம் போறேம் பாரு..'

இவள் சொல்வது சரிதான் என்பது போல கொண்டைப்பூ விரிய குரல் கொடுத்தபடியே பறந்தது மரங்கொத்தி.

தூக்கங் கலைஞ்சு தம்பி சங்கு வெக்கத் தொடங்கிட்டான். தம்பியைத் தூக்கிக் கொண்டு வாசலுக்கு வந்தாள் லெட்சுமி. பின்கம்பியில் தனியாய் அமர்ந்து இறகைக் கோதிக் கொண்டிருந்த காகமொன்று இவளைக் கண்டதும் பயந்துபோய் எங்கோ பறந்துபோனது. காகத்திலிருந்து உதிர்ந்து, வெயிலில் கருமை மினுங்க, காற்றில் ஏதோ இறுக்கியபடியே பறந்தது. ஒற்றை இறகு! கண்ணில் நீர் தளும்பும்வரை பார்த்துக் கொண்டே நின்றாள் லெட்சுமி. ○

கையொரு மூலை; காலொரு மூலை!

The world must be made safe for atleast fifty years என்று இரண்டாவது உலகப் போரின் முடிவில் சர்ச்சில் சொன்னார். அவர் விதித்த கெடு முடிவடையப் போகிறதே என்று பயமாயிருக்கிறது. ஏனெனில் –

வானளாவிய நியூயார்க் டவர்களைத் தரைமட்டமாக்கியது ஒரு தற்கொலைப் படை. அது விமானத்தின் மூலம். அந்த மரண ஓலங்கள் ஓயுமுன்னே ஸ்ரீநகர் சட்டமன்றம் இன்னொரு தற்கொலைப் படையினால் தாக்கப்பட்டிருக்கிறது. இம்முறை காரின் மூலம்.

குச்சி குச்சியாய்க் கருகிக் கிடந்த எலும்பு கையொரு மூலை, காலொரு மூலை என்று தெருவெல்லாம் சிதறியிருந்தன உடல்கள். நெஞ்சைப் பிளக்கும் கோரத்தின் நடுவே, ஒரு முஸ்லீம் பெரியவர், யாரைப் பலி கொடுத்தாரோ தெரியவில்லை. மடேர் மடேரென்று தலையில் அறைந்து கொண்டே ஓடினார். தந்தையின் சடலத்தை அடையாளம் காட்ட முடியாமல் தவித்த ஒரு மகன் அவருடைய சட்டைப் பையிலிருந்த ஐ.டி கார்டைப் பார்த்து விம்மி வெடித்தான். காஷ்மீரச் சிங்கத்தின் மகனான பரூக் அப்துல்லா சட்ட மன்றத்தில் அழுது கொண்டே பேசினார்.

கொடுமைடாப்பா!



வெளுத்துக் கட்டி உதறி உலர்த்தப் போகிறார்கள் என்ற எதிர்பார்ப்பைத் தூண்டிய விஜய்யின் புதிய அவதாரமான ஸ்டார் விஜய், தொடக்க நாளன்று புதுமையாக எதையும் சாதித்ததாகத் தோன்றவில்லை. வாடிக்கையான ஆடல் பாடல்களே திரையை ஆக்கிரமித்திருந்தன. ஒளிப்பதிவு பிரகாசமாக, துல்லியமாக இல்லாமல் மசமசவென்று இருந்தது.

புதிய தொடர் 'மருமகள்' இன்னும் புதிய கதையாக இருந்திருக்கலாம். சர்வாதிகாரம் படைத்த பணக்கார மாமியார். அவர் இடும் கட்டளைகளுக்கு அடிபணியும் கணவன், பிள்ளைகள், மகன், மாப்பிள்ளை. எதிர்த்துக் கேட்க முடியாமல் மனசுக்குள் பொருமும் புதிய மருமகள். இரண்டாவது மருமகள் வந்து மாமியாரின் கொட்டத்தை அடக்கப் போகிறாள் என்பது அடுத்து வரப் போகும் கதை என்று ஆரம்பத்திலேயே புரிந்துவிட்டது. A run of the mill family stuff.

ஆறுதல் தரும் நபர்கள் இருவர். 1. எதிர்ப்பு பேச்சில் காட்டாமல் முகத்தில் காட்டும் முதல் மருமகள் உமா. (கமலா காமேஷின் பெண்) 2. மாமியாருக்கு வெகு அழகாக ஜால்ரா போடும் நிழல்கள் ரவி.

தபோவன சுவாமிகளிடம் ஒருவர் வந்து, தன் பிள்ளை தப்பான வழிகளில் போகிறான் என்றும் அவனைத் திருத்த வேண்டுமென்றும் கேட்டுக்கொண்டார். அந்த இளைஞரைத் தன்னோடு வைத்துக்

• கோடீஸ்வரி

கொண்டார் சுவாமிகள். இதை படி, பூஜை செய், சினிமா, டீ.வி பார்க்காதே என்றெல்லாம் எதுவும் அவனுக்குச் சொல்லவில்லை. 'தினம் காலையில் பதினைந்து நிமிடம் எங்காவது ஓரிடத்தில் தனிமையாக உட்கார்ந்திரு' என்று மட்டும் சொன்னார். அவனும் அப்படியே செய்தான். முதல் கொஞ்ச நாள் சூரியோதயத்தைப் பார்ப்பதும், பறவைகளின் கீச்கீச்சைக் கேட்பதும், நிர்மலமான நீலவானத்தை ரசிப்பதும் நல்ல பொழுதுபோக்காக இருந்தன. பிறகு அந்தக் காட்சிகள் பழகிவிட்டன. ஆனால் தனியே உட்கார்ந்திருப்பதை விடவில்லை. அந்த நேரத்தில் தான் செய்த தவறுகளையும், இனி செய்யாதிருப்பதற்கான வழிமுறைகளையும் ஆராய்ந்தான். சிறிது காலத்தில் அவன் வாழ்க்கை மாறிவிட்டது.



• அப்துல்லா



• சிவாஜி கணேசன்

மேற்படி சம்பவத்தைப் 'பாரதி'யில் கூறிய சுவாமி மித்ராணந்தா, தினம் பதினைந்து அல்லது இருபது நிமிடம் தனியாய் உட்கார்ந்திருப்பது மிக நல்ல பழக்கம் என்று வற்புறுத்திச் சொன்னார். இப்படிப் பழக ஆரம்பித்தால் வாரத்தில் ஒரு மணி நேரம், மாதத்தில் ஒரு நாள் என்று தனிமையில் சிந்தனை செய்து வாழ்க்கையில் நல்ல திருப்பம் ஏற்படுத்திக் கொள்ள முடியும் என்றார்.

I never found the companion that was so companionable as solitude.

இந்தியா சுதந்தரம் அடைந்த ஆண்டு எது? காந்திஜியின் மனைவி பெயர் என்ன? சென்னையில் மிருகக் காட்சி சாலை எங்கே இருக்கிறது? ஐ.நா. சபையில் பாடிய தமிழ்ப் பாடகி யார்?

– எந்த மழலைக் குழந்தையும் பதில் சொல்லக் கூடிய மேற்கண்ட கேள்விகளை, படித்த குடும்பத் தலைவிகளிடம் கேட்டு அசத்தோ அசத்தென்று அசத்தி வருகிறார் 'கோடீஸ்வரி' குஷ்பு. Perhaps this is a ploy. இத்தனை சுலபமாக இருக்கிறதே என்று தாய்க்குலம் வந்து விழ வேண்டும் என்ற நோக்கத்துடன் விரிக்கப்பட்ட வலையாகவும்' இருக்கலாம். ஆனால் கேள்விகளுக்குச் சரியான (!) பதில் வந்ததும், 'ரைட்! அப்ஸல்யூட்லி கரெக்ட்!' என்று குஷ்பூ போடும் கூச்சல் கும்மிடிபூண்டி வரை கேட்கும் – டீ.வி இல்லாமலே.

இது ஒரு புறமிருக்க, black sunday என்பது எதைக் குறிக்கும் என்று ஒரு திடீர்க் கேள்வி கேட்டார். ஆடியன்ஸ் உள்பட அனைவருமே விடை தெரியாமல் முழிக்க, 'பாப்ரி மசூதி இடிக்கப்பட்ட தினம்!' என்று முழங்கினார் குஷ்பு. இது அரசியல். Treading on dangerous grounds (உண்மையில் மாதவராவ் சிந்தியாவும் ராஜேஷ் பைலட்டும் விபத்தில் காலமானது ஞாயிற்றுக் கிழமைகளில்தான் என்பதை வைத்துச் செய்தியாளர்கள் கறுப்பு ஞாயிறு என்று அதைத்தான் குறிப்பிடுகிறார்கள்.)

சிவாஜி கணேசனின் நினைவைப் போற்றும் வகையில் ஒரு மெகா நிகழ்ச்சி நடத்தியது ராஜ் டீ.வி. 'இமயத்துக்கு இந்திய அஞ்சலி' என்ற தலைப்பில், பல பெரும் புள்ளிகள் கலந்துகொண்டார்கள்.

விழாவுக்கு ஒவ்வொருவராக வந்துகொண்டிருந்த நட்சத்திரங்களிடம் தலா இரண்டு வரி பேட்டி நடந்தது. சரோஜா தேவி சொன்னது a gem of a statement. A real classic:

'சிவாஜி இருந்திருந்தால் இந்த விழா எவ்வளவோ நன்றாயிருந்திருக்கும். இல்லாமல் போய் விட்டாரே!' என்று பெருமூச்சு விட்டார் அவர்.

'அம்மணி! அஞ்சலி செய்வதே சிவாஜி இல்லாததால்தான்!' என்று காமெராக்காரர் பிற்பாடு அவர் காதோடு சொல்லியிருப்பார் என்று நம்புவோமாக.

வினோத்

தீக்காயங்களுடன் ஒரு தட... தடா!

தலிபானோட புர்கா ஆணையைச் சாதகமாக்கிக்கிட்டு ஆஃப்கானிஸ்தானுக்குள்ளே புகுந்துட்டார் ஒரு பிரிட்டிஷ் ஜர்னலிஸ்ட். கேட்டுக் கேட்டுப் பார்த்தும் ஆஃப்கானிஸ்தானுக்கு விஸா கிடைக்கலை; ஏமாத்தத் துணிஞ்சுட்டாங்க 'சண்டே எக்ஸ்பிரஸ்' பேப்பரோட ரிப்போர்ட்டர் யுவான் ரிட்லி (Yvonne Ridley). புர்கா வெறும் புருடான்றதைக் கண்டுபிடிச்சுக் கைது பண்ணி வைச்சிருக்கு தலிபான். அவங்களையும் கூடப் போன இரண்டு உதவியாளர்களையும் விடுவிக்கச் சொல்லி சி.பி.ஜே. அமைப்பு கோரிக்கை வைச்சிருக்கு. கோரிக்கை வைச்சா அப்படியே குளிர்ந்து போய் தாலிபான் சொன்னதைக் கேட்டுடும் பாருங்க!

சரி, சி.பி.ஜே.ன்னா என்னன்னு தெரியுமா?... கமிட்டி டு புரொடெக்ட் ஜர்னலிஸ்ட்ஸ். 'கமிட்டி டு புரொடெக்ட் ஃப்ரம் ஜர்னலிஸ்ட்ஸ்'னு ஒண்ணு ஆரம்பிச்சு எங்களைக் காப்பாத்தினா தேவலைன்னு சில பிரபலங்கள் ரியாக்ட் பண்ணுவாங்க, தெரியும்.

ஜோக்கெல்லாம் ஒரு பக்கம் இருக்கட்டும். மாதவராவ் சிந்தியாவோட பிளேன் கிராஷ்ல பரிதாபமாய்ச் செத்துப் போன நாலு ஜர்னலிஸ்ட்களுக்கு என்ன பாதுகாப்பு இருந்தது! சிந்தியாவோட சேர்ந்து அவங்களுக்கும் காங்கிரஸ் அஞ்சலி செலுத்தியிருக்குன்றது கொஞ்சம் ஆறுதல். ஜர்னலிஸ்ட்ஸ் வெல்ஃபேர் ஃபண்ட் அமைக்கறதுன்னு போன வருஷ பட்ஜெட்ல அறிவிப்புச் செய்த திட்டத்தை இந்தச் சம்பவத்துக்கப்புறம் தூசிதட்டி எடுத்து துரிதப்படுத்த முயற்சி பண்ணிக்கிட்டிருக்கு மத்திய அரசு.

செப்டெம்பர் 11 சம்பவங்களைப் பத்தி நான் கேட்டிருந்த கேள்விக்குச் சரியான பதில் எதுவும் வரலை. நான் தேடறது லைகோ அனலிடிகல் ஆன்ஸர். எழுதியிருக்கிற ஒண்ணு இரண்டு பேரும் 'ஜிஹாத்'தான் காரணம்னு சிம்பிளா முடிச்சுட்டாங்க.

கல்கி தலையங்கத்துல டாட் ஹண்ட்டர் பத்திப் படிச்சு த்ரில் ஆகியிருப்பீங்க. இன்னொரு வீரர் டபிள்யூ டி ஸீல சிக்கிக்கிட்டு தீக்காயத்தோட எண்பது மாடி இறங்கி நடந்து வந்த மனு டிங்க்ரா உதவி கிடைக்காதுன்னு தெரிஞ்சு போனதுமே எப்படியாவது தப்பிக்கணும்னு இறங்க ஆரம்பிச்சவருக்கு அஞ்சு நிமிஷத்துல உடம்பு டீஹைட்ரேட் ஆகியிருக்கு. கூட இருந்தவங்க இன்னும் நாலஞ்சு மாடிதான் பாக்கி இருக்குன்னு பொய் சொல்லி நடக்க வைச்சுட்டாங்க; அவரும் அதை நம்பி இறங்கிட்டாரு!



உடம்புல எக்கச்சக்க தீக்காயத்தோட ஒரு மனுஷனுக்கு இவ்வளவு முயற்சியும் வேகமும் எங்கேயிருந்து வருது! எவ்வளவு தடவை வேணாலும் சொல்லலாம் - தி ஹியூமன் ஸ்பிரிட் இஸ் அமேஸிங்.

தனிப்பட்ட முறையில் தன்னைக் காப்பாத்திக்கறதுக்கு மட்டுமில்லே, மனித குலத்தை உத்தாரணம் பண்றதுக்காகவும் தலைமுறை தலை

முறையா போராட்டம் நடத்திட்டிருக்கு. அவென்டிஸ்ன்ற ஃப்ரெஞ்சு மருந்து கம்பெனி வெளியிட்டிருக்கிற இந்த விளம்பரத்தைப் பாருங்க-டயாபடீஸ் தொடர்பானது. 'சர்க்கரை நோயைக் கட்டுப்படுத்த நிறைய ரிசர்ச் பண்றோம். உலகம் முழுக்க 142 மில்லியன் மக்கள் இந்த நோயால அவதிப்படறாங்க. அவங்களுக்கு வாழ்க்கையைக் கொஞ்சமாவது எளிமையாக்குவோம், எட்செட்ரான்னு சபதம் பண்ணுது இந்த அட்வர்டைஸ்மென்ட். (படம் ரொம்ப கவித்துவமா இருக்கில்லே!) இப்போ டயாபடீஸுக்கான இன்ஸுலின் மருந்தை ஊசி மூலமாதான் ரத்தத்துல செலுத்தியாகணும். ஏன்னா மாத்திரை வடிவத்துல இன்ஸுலினை வயித்துக்குள்ள தள்ளினால் வயித்துல



சுரக்கற அமிலம் அதை முறிச்சுடும். இன்னும் நாலஞ்சு வருஷத்துல, அமிலத்தை அவாய்ட் பண்ணி, வயிற்றைத் தாண்டி, நேர சிறு குடலுக்குப் போயிடற மாதிரி ஒரு மாத்திரையைத் தயாரிச்சுடுவாங்கன்னு மருத்துவ உலகம் எதிர்பார்க்குது. அவென்டிஸ்ஸோ வேற கம்பெனியோ அதைச் செய்யற நாள் வில் பி எ ஹாப்பி டே ஃபார் இன்ஸுலின் டிபண்டன்ட்ஸ்.

இப்படி டயாபடீஸ் ரிசர்ச்சை மட்டும் விளம்பரப்படுத்தி அவென்டிஸ் விளம்பரம் பண்ணியிருக்கே, மருத்துவ உலகத்துல எவ்வளவு பேர் எவ்வளவு ரிசர்ச் பண்ணியிருந்தா இன்னைக்கு இத்தனை அட்வான்ஸ்ட் ஸ்டேஜஸ் அஃப் மெடிசனுக்கு நாம வந்திருப்போம்னு கொஞ்சம் டீப்பா யோசிச்சுப் பார்த்தேன். மெடிகல் காலேஜ்ல நாம படிக்கறதெல்லாம் வெறும் ஜுஜுபின்னு தோணிப் போச்சு.

வெளிவந்த ஒரே மாசத்துல முதல் பதிப்பு முழுக்க விற்றுப்போன புக் எது தெரியுமா...? ரீசன்டா ஸ்ரீ ராமகிருஷ்ண மடம் வெளியிட்ட பகவத் கீதை. முதல் பதிப்பு ஜூலை 2001; இரண்டாம் பதிப்பு ஆகஸ்ட் 2001! இருநூறு ரூபாய் புத்தகம், அறிமுக விலையிலே 120 ரூபாய்க்குக் கொடுத்தாங்க.

கொஞ்சம் கூட உறுத்தாத தமிழ்ல விரிவான, அர்த்தங்களோட, ரொம்ப அழகான படங்களோட பார்க்கவே கம்பீரமாகவும் கௌரவமாகவும் இருக்கு. படிக்கறதுக்கு...? கேட்கவே வேண்டாம். ஒரு சின்ன சாம்பிள் படிக்கறீங்களா...:

'**வி**ழாக் காலங்களில் வாண வேடிக்கைகளைக் காண்கிறோம். கீழே இருந்து வாணங்கள் சர்ரென்று மேலே கிளம்பி பல்வேறு வண்ண ஜாலங்களைச் சிதற விட்டு மறைகின்றன. அவற்றால் எந்தத் தொந்தரவும் இல்லை. ஆனால் அதே வாணம் செல்லும் வழியில் ஒரு வைக்கோல்போர் இருப்பதாக வைத்துக் கொள்வோம். அப்போது என்ன நடக்கும்? வைக்கோல் முழுவதும் தீப் பிடித்து எரியும். எரிவதைத் தடுக்க வேண்டுமானால் நாம் செய்ய வேண்டியதெல்லாம், வாணம் செல்லும் வழியில் வைக்கோல்போர் அல்லது அது போன்ற எரியும் பொருட்கள் எதுவும் இல்லாமல் பார்த்துக் கொள்வதுதான்.

இப்போது ஆசைகள் விஷயத்திற்கு வருவோம். நமது மனத்திலும் எத்தனையோ ஆசைகளும் வேகங்களும் (impulse) உணர்ச்சிகளும் (emotion) இது போன்ற பலவும் மனது (unconscious mind) கிளம்பி உணர்வு மனத்தில் (conscious mind) தொடர்ந்து வந்த வண்ணம் உள்ளன. இவையெல்லாம் வருவதற்காக நாம் கவலைப்பட்டுக் கொண்டிருக்க வேண்டியதில்லை. நாம் உவமையில் கண்ட வாணங்கள் போல் இவை வந்தது போலவே சிதறி மறைந்து விடும். நாம் செய்ய வேண்டியதெல்லாம் சங்கல்பம் என்ற வைக்கோல் போர் அந்த ஆசை என்னும் வாணத்துடன் சேராமல் பார்த்துக் கொள்ள வேண்டியதுதான். இதுவே இங்கு சங்கல்பத்திலிருந்து தோன்றிய ஆசைகளை அடக்குதல் என்று கூறப்பட்டது.'

— சுமி



பாரதமே பூஜையறை!

மெல்லிசை மன்னர் மேடையில் இருந்தார்– ஆனால் மெல்லிசைக் கச்சேரி அல்ல; சுதா ரகுநாதனும் இருந்தார், ஆனால் கர்னாடக இசைக் கச்சேரி அல்ல... இந்த இருவருடன் தூர்தர்ஷன் ஏ. நடராஜன் சேர, கலை ரசனை பற்றிய கருத்தரங்கம் - கச்சேரியைக் காட்டிலும் மைலாப்பூர் பைன் ஆர்ட்ஸ் அரங்கில் கூட்டம்! கலையுலகப் பிரமுகர்கள் ஏராளம்!

கல்கி-ஸ்ரீ கிருஷ்ணா ஸ்வீட்ஸ் இணைந்து நடத்திவரும் 'நில்! கவனி! வெற்றிகொள்!' இளைஞர் திருவிழா வரிசையில் செப்டெம்பரில் நடந்த நிகழ்ச்சி.

பொருத்தமான, பாபனாசம் சிவனின் பாடல் ஒன்றையே இறைவணக்கமாகப் பாடினார்கள் சிறுமிகள் ஷோபனாவும் ரம்யாவும்.

"பாதமே துணை பரமசிவா!
... .
சங்கீதமே முழங்கும்
திருமயிலாபுரி..."
உறையும் கிருபாநிதே
இறைவா கபாலி
நின் (பாதமே)

✱ தானும் ஒரு சமையல் கலைஞன் என்று கூறிக் கொண்டு வரவேற்புரை ஆற்றிய ஸ்ரீ கிருஷ்ணா ஸ்வீட்ஸ் முரளி,

"இந்த உலகை ஒரு வீடாக உருவகப்படுத்தினால், இந்தியாதான் அந்த வீட்டின் பூஜை அறை. எத்தனை மகான்கள் வாழ்ந்த புண்ணிய பூமி இது. அவர்கள் பலரும், ஆடிப்பாடி, இசை மூலமாகவே பக்தி வளர்த்தனர் என்பது குறிப்பிடத் தக்கது" என்றார்.



• எம்.எஸ்.வி.

கீதம்

குயிலுரை!

கடவுள் மனிதனைப் படைத்த





மேட்டருக்குத்தான் மீட்டர்!

மேற்கத்திய இசையில் கூட, வார்த்தைகளுக்கு முக்கியத்துவம் தரப்பட்டு வருவதை மறந்துவிடக் கூடாது. ஆனால் நாம் அதை முழுமையாகக் கடைபிடிப்பதில்லை. புதுமை என்ற பெயரில், முயற்சிகள் செய்யலாம். ஆனால் அவை பழமை மாறாமல், சிதையாமல் இருக்கும்படி அமைய வேண்டும்' என்று தன் உரையை ஆரம்பித்தார் எம்.எஸ்.வி.

* சங்கீதத்துக்கு சாகித்யம்தான் உயிர். கர்நாடக இசை இன்றும் சிரஞ்சீவித்துவத்துடன் இருக்கிறது என்றால், அதற்கு சாகித்ய ஜீவன் இருப்பது தான் காரணம். பாட்டுக்குத்தான் மெட்டு! மேட்டருக்குத்தான் மீட்டர்!

* பழைய பாட்டு, புதுப் பாட்டு என்று வகை பிரிப்பதில் எனக்கு உடன்பாடில்லை; 'நல்லபாட்டு, இல்லைன்னா நிப்பாட்டு!'



நில்,
கவனி,
வெற்றிகொள்!

முழங்கிய மயிலாபுரி!

போதே கலைகளையும் படைத்துவிட்டார். கடவுளின் படைப்புகள் ஒவ்வொன்றிலும் ஒவ்வொரு விதமான அழகு அமைந்துள்ளது. அவற்றை ரசிக்கத் தெரிந்து கொண்டால் கலைகளை ரசிப்பதும் சுலபமாய்க் கைவரும்.

* 'கர்நாடக இசை நமக்குப் புரியாது' என்று முன் கூட்டியே தீர்மானித்துக் கொள்ளாதீர்கள். என்ன புரிகிறதோ அது புரியட்டும். தொடர்ந்து கேட்கக் கேட்க, உங்களையும் அறியாமல் நீங்கள் அதில் லயித்துப் போவீர்கள். கச்சேரிக்கு வந்துதான் கர்நாடக இசை கேட்க வேண்டும் என்கிற நிலைமை இன்று இல்லை. கேஸட், சிடி, வெப்சைட் என்று பல சாதனங்கள் வந்து விட்டன.

* கலை என்பது மக்களின் குணாதிசயங்கள் மீது பாதிப்பு ஏற்படுத்தக் கூடிய ஒரு விஷயம். நல்ல சங்கீதத்தைக் கேட்கக் கேட்க, மனத்தில் அமைதி ஏற்படும்; கெட்ட எண்ணங்கள் அகலும்.

* கர்நாடக இசையில் புதுமை, கற்பனை செய்து பார்க்கலாம். ஆனால் அவை மரபு, பாரம்பரியம் என்ற வட்டத்துக்குள்ளேயே தான் இருக்க வேண்டும்.

* ரசனையை வளர்த்துக் கொள்ள வேண்டும் என்கிற பொறுப்பு ரசிகர்களுக்கு எவ்வளவு உண்டோ அதே அளவு ரசிகர்களின் ரசனையை வளர்க்க வேண்டிய பொறுப்பு கலைஞர்களுக்கும் உண்டு.



வாழ்வே கலை!

"எந்த ஒரு விஷயத்திலும் கலை நயம் தேவை. எதைச் செய்தாலும், படுக்கையை உதறி மடித்து வைத்தாலும், கலையுணர்வோடு செய்தால் வாழ்வில் அர்த்தம் கூடும். எது மக்களை மகிழ் விக்கிறதோ அதுதான் கலை! 'காதுகளுக்கு இன்பம்; மூளைக்கு மகிழ்ச்சி; இதயத்துக்கு ஆனந்தம் தருவது சங்கீதம்' – இது அமரர் கல்கியின் விளக்கம்" என்று ஆரம்பித்தார் தொலைக்காட்சி நிலைய முன்னாள் இயக்குனர் ஏ. நடராஜன். தொடர்ந்து அவர் பேசியவை :

* ஷிமோகாவில் ஒரு கச்சேரி. மூணுமணி நேரமும் மகுடிக்குக் கட்டுப்பட்ட பாம்பு போல ரசிகர்கள் ஆழ்ந்து போனார்கள். கச்சேரி முடிந்து கெஸ்ட் ஹவுஸ் திரும்பி, இரவு படுத்த வயலின் சந்திரசேகரனுக்குத் தூக்கம் வரவில்லை. புரண்டு புரண்டு படுத்துக் கொண்டிருந்தவரிடம் "ஏதாவது பிரச்னையா?" என்று கேட்டபோது, "இன்னிக்குக் கச்சேரி ரொம்ப பிரமாதமாக அமைஞ்சு போச்சு, அந்த ஆனந்தத்துல தூக்கம் வரலை" என்றார். உயர்ந்த கலை மனத்தை நிறைத்து, புலன்களை ஜெயிக்கும்.

* திருச்சி அகில இந்திய வானொலியில் மதுரை சோமுவின் கச்சேரி ஒலிபரப்பாகிக் கொண்டிருந்தது. இரவு மணி ஒன்பது. நாட்டைக் குறிஞ்சியில் ஆலாபனை. சென்னையிலிருந்து டெலிபோன். பேசியவர் நடிகர் திலகம் சிவாஜி. சோமுவின் கச்சேரியில் மிகவும் லயித்துப் போய் (நேரடி ஒளிபரப்பு என நினைத்துக் கொண்டு) கச்சேரி முடிந்தவுடன்,

---

கேள்வி – பதில்

சுரேஷ் மயூரநாதன் என இருவர் – தீவிரவாதத்தை இசையின் மூலம் கட்டுப்படுத்த முடியுமா? என்று சந்தேகம் எழுப்ப, சுதா ரகுநாதன், "நல்ல இசை மனத்தில் நல்ல வைப்ரேஷன்களை ஏற்படுத்தும்; கெட்ட எண்ணங்களை விரட்டும். இதனால் மனம் மென்மையடையும், மேன்மையடையும். ஆனால் இசையைக் கேட்கவே மாட்டேன் என்று தீவிரமாக இருக்கும் தீவிரவாதியை மாற்றுமா என்று தெரியவில்லை" என்று பதிலளித்தார்.



• ஷோபனா - ரம்யா இறை வணக்கம்

* ரவிச்சந்திரன் என்ற வாசகரின் கேள்வி: கலை கண்ணால் ரசிக்கவா? மனத்தில் ரசிக்கவா? நடராஜன் பதில்: கண்ணால் பார்த்து, மனத்தில் ரசிக்கலாம்.

* குழந்தையின் குரல் என்ன ராகம்? என்று ராமநாதன் கேட்க, சுதா பதில்: "மழலைராகம்" (அரங்கில் சிரிப்பு)

* இசையால் நோயைக் குணப்படுத்த முடியுமா? (லட்சுமண குமார்).

பதில்: இது குறித்து தொடர்ந்து ஆராய்ச்சிகள் நடந்து கொண்டிருக்கின்றன. இறுதி முடிவுக்கு வரவில்லை. ரத்தக் கொதிப்பு அடங்க ரீதிகௌளை, சஹானா, ஆனந்த பைரவி... டிப்ரஷனிலிருந்து மீள சில ராகங்கள். வயிறு சம்பந்தப்பட்ட நோய்களுக்கு ஸ்ரீரஞ்சனி. போகிற உயிரை பைரவி பிடித்து நிறுத்தும் என்கிறார்கள். இதை நம்புகிறவர்களுக்குப் பல உதாரணங்களைச் சொல்லலாம். நம்பாதவர்களுக்கு நிரூபித்துக் காட்ட முடியாது!

சோமுவுக்கு என் பாராட்டுக்களைச் சொல்லி விடுங்கள்' என்றார் சிவாஜி. ஆனால், அன்றைய தினம் மாலை ஏழேமுக்காலுக்கு ஒலிப்பதிவு செய்யப்பட்ட கச்சேரி அது என்பதால், சோமு, தமது நண்பர் வீட்டில் தங்குவதற்குப் புறப்பட்டுப் போய்விட்டார்.

நிலைய இயக்குனர், உடனடியாக சோமு தங்கியிருந்த நண்பர் வீட்டுக்குச் சென்று சிவாஜி பாராட்டிய விஷயத்தைத் தெரிவியுங்கள் என்று சொல்லிவிட்டார். சைக்கிள் ஓட்டத் தெரியாத நான், இரவு ஒன்பது மணிக்கு, இரண்டு பர்லாங் தூரம் நடந்து போய், சோமுவைச் சந்தித்து, சிவாஜியின் டெலிபோன் பாராட்டு பற்றிச் சொன்னபோது, அகமகிழ்ந்து போனார்.

இந்த சம்பவத்திலிருந்து நான் தெரிந்து கொண்ட விஷயம்: நல்ல விஷயங்களைப் பாராட்டத் தயங்கவும் கூடாது; பாராட்டுவதைத் தள்ளிப் போடவும் கூடாது. ரசனையும் பாராட்டும் கைகோத்துச் செல்ல வேண்டும்.

■ அண்மையில் பாகிஸ்தானில் லாகூர் நகரில் நடைபெற்ற ஒரு கலை விழாவுக்குச் சென்றிருந்தபோது, 1938 ஜனவரி பதினைந்தாம் தேதியிட்ட பத்திரிகை கட்டிங் ஒன்றைக் காட்டினார் ஓர் அன்பர். அதில் சென்னையிலிருந்து லாகூர் சென்று கச்சேரி செய்த சிறுவர்கள் ராஜம் (16) பாலசந்தர் (9) இருவரது அபார திறமை பற்றிக் பாராட்டப்பட்டிருந்தது. அந்தக் கச்சேரியின் போது கஞ்சிரா வாசித்துப் பாராட்டு பெற்ற சிறுவன் பாலசந்தரின் வாழ்க்கையில், ஒரு ரசிகர் எப்படி திருப்புமுனையை ஏற்படுத்தினார் என்பது மிகவும் சுவாரசியமானது.

கஞ்சிரா வாசித்ததைப் பாராட்டி, உடனடியாக அந்தச் சிறுவனுக்கு ஏதாவது பரிசளிக்க வேண்டும் என்று விரும்பிய ஒரு ரசிகர், தம் வீட்டுக்கு ஓடோடிச் சென்று, தம் மகனுக்காக வைத்திருந்த சிதாரை எடுத்து வந்து, சிறுவனுக்குப் பரிசளித்தாராம். சிதாருடன் சென்னை திரும்பிய சிறுவன், சீக்கிரமே அதில் திறமைபெற்று, அதன்பின் வீணைக்கு மாறினான்– அந்தச் சிறுவன் வேறுயாருமில்லை, வீணை ஜீனியஸ் எஸ். பாலசந்தரேதான்!

நடராஜன் சொன்ன நவாப் கதை!

நிகழ்ச்சிக்கே சிகரம் வைத்தாற்போல இருந்தது, ரசனை என்பதற்கு, விளக்கமாக, நடராஜன் கூறிய குட்டிக் கதை.

லக்னோவில் ஒரு நவாப். அபாரமான கலாரசிகர். அவர் எல்லா பிரபல கலைஞர்களையும் அழைத்து, கச்சேரி பண்ணச் சொல்லி, ரசிப்பார். மக்களும் திரளாகக் கூடி ரசிப்பார்கள். அவர் எவ்வளவோ முயற்சி செய்தும், ஒரு குறிப்பிட்ட வித்வான் மட்டும்



நவாப்பின் அழைப்பை ஏற்க மறுத்துக் கொண்டே இருந்தார்.

கடைசியில், ஒரு கண்டிஷனுடன் கச்சேரிக்கு ஒப்புக் கொண்டார். "என் கச்சேரியின்போது, ரசித்து, யாராவது தலையை ஆட்டிவிட்டால், அவரைச் சிரச்சேதம் செய்துவிட வேண்டும்'' என்பதுதான் கண்டிஷன்.

கண்டிஷனுடன் கச்சேரி அறிவிப்பு செய்ய, தர்பார் மண்டபம் நிறைந்தது. கச்சேரி ஆரம்பித்தது. ஆங்காங்கே தலையை ஆட்டுபவரது தலையைக் கொய்ய கத்தியுடன் சேவகர்கள் நின்று கொண்டிருந்தனர்.

கச்சேரி முடிந்தவுடன், வித்வானுக்கு ஏராளமான பரிசுகளைக் கொடுத்து, "உங்கள் அனுமதியுடன், கச்சேரியின்போது தலையை ஆட்டி, ரசித்த பதினேழுபேரின் தலையைக் கொய்ய ஆணையிடுகிறேன்'' என்றார் நவாப்.

"உயிர் போய்விடும் என்று தெரிந்தும், ரசித்துத் தலை ஆட்டியவர்கள்தான் கலை ரசனை உடையவர்கள். மற்றவர்கள் உயிருக்குப் பயந்து, உட்கார்ந்து கொண்டிருந்தவர்கள். அந்த பதினேழுபேரைத் தவிர மற்றவர்கள் தலையைக் கொய்து விடுங்கள். எனக்களித்த பரிசுகளை இந்தப் பதினேழு பேருக்குமே கொடுத்து விடுங்கள்'' என்றார் வித்வான்!

தொகுப்பு: **எஸ். சந்திரமௌலி**
படங்கள்: **யோகா**



12 B

வீட்டு வாடகை, மளிகை கடை பாக்கி உட்பட ஓர் இரண்டரை மணி நேரம் எல்லாவற்றையும் மறந்து விடல் நன்று. டைட்டிலில் ஆரம்பித்து வணக்கம் போடுவது வரை, காது, கண்களைத் தீட்டிக் கொண்டு கவனிக்க வேண்டும். தவறினால் படத்தின் நாயகன் ஒரு நொடி அவகாசத்தில் பேருந்தைத் தவற விடுவது போல, படத்தின் திரைக்கதை புரியாமல் போய், சிவப்பு சிக்னலில் மாட்டிக் கொண்டவர் மாதிரி பின்தங்க நேரும்.

வேலை இல்லா பட்டாதாரி ஷாம், 12 B பேருந்தைப் பிடித்து சரியான நேரத்திற்குள் இன்டர்வியூவுக்குப் போயாக வேண்டும். ஆனால் பேருந்தைத் தவற விட்டு விடுகிறார். ஒருவேளை, ஷாம் பேருந்தைப் பிடித்திருந்தால் அவர் வாழ்க்கையின் திசை வழி எப்படிப் போயிருக்கும்? பேருந்தைப் பிடிக்க முடியாத ஷாமின் வாழ்க்கை எப்படி இருந்திருக்கும்? என்று இரண்டு இணையான டிராக்குகளில் படத்தைச் சுவாரஸ்யமாய் நகர்த்தியிருக்கிறார்கள். அட! இரண்டுமே கற்பனையாச்சே என்று யோசிக்க வாய்ப்பில்லாமல், டிராஃபிக் ஜாமில் சிக்காத 12 B மாதிரி படம் விரைகிறது. காரணம் புதிய காட்சி அமைப்புகள்.

அறிமுக நாயகன் ஷாமுக்குக் கனமான பாத்திர(ங்கள்)ம். ப்பூஊ... என்று அநாயாசமாக ஊதித் தள்ளி அசத்தியிருக்கிறார். துள்ளல் குறையாத துறுதுறு ஜோதிகாவோ நடிக்கவும் செய்திருக்கிறார். சிம்ரன்தான் பாவம். படம் நெடுகிலும் சோகமே உருவாக வந்து உருக வைக்கிறார். இப்படியொரு மார்டன் டைப் படத்தில் அக்காள் மகளைக் காதலிப்பவராக வந்து, தோற்றத்திலும் ஷாமைப் போல குழப்புகிறார் பாலிவுட்களில் ஷெட்டி!

பஸ் டிக்கட்டுக்கே வீட்டு ஓனரிடம் பத்து ரூபாய் கடன் வாங்கும் ஷாமின் அம்மா, அப்பல்லோவில் சிகிச்சை பெறுவது, கற்பனையான இரண்டு ஷாம்களும் ஹோலி தினக் கொண்டாட்டத்தில் தோன்றுவது போன்ற லாஜிக் இல்லாத காட்சிகள் குழப்புவது உண்மை.

விவேக்கின் டாபிகல் நகைச்சுவை அவ்வப்போது கொஞ்சம் எல்லை தாண்டி விரசமாகி விடுவதை அவர் கவனிக்க வேண்டும்.

ஹாரிஸ் ஜெயராஜின் இசையில் தனித்துவம் தெரிந்தாலும் மேற்கத்திய வாசனைதான் பிரதானம்.

ஒரு முதல்தர ஒளிப்பதிவாளராக நிமிர்ந்து நிற்கும் ஜீவா, பார்முலா படங்களைப் பார்த்துப் புளித்துப் போன தமிழ் ரசனைக்குப் புதிய அனுபவமாக அமையட்டும் என்று முதல் படத்திலே முயன்றிருப்பதைப் பாராட்டலாம். படத்தின் தொடக்கத்தில் 'அவர் சின்ஸியர் தாங்க்ஸ் டு' என்று நன்றி கார்டு போடுகிறார்கள். அதில் 'ஸ்லைடிங் டோர்ஸ்' மற்றும் 'ரன்லோ ரன்' ஆகிய ஹாலிவுட் மற்றும் ஜெர்மன் பட இயக்குனர்களுக்கும் நன்றி தெரிவித்திருக்கலாம்!

- விஷுவல்தாசன்

● அபவ் ஆவரெஜ்

Printed and published by K. Rajendran at the Bharathan Press on behalf of Bharathan Publications Private Limited. Editor : Mrs. Seetha Ravi
Address : 47, Jawaharlal Nehru Road, Ekkaduthangal, Chennai - 600 097.
Telephones : Editorial : 2345624; Circulation Manager, Subscription and Advertisement : 2345623; Chief Administrative Officer : 2345622; Fax: 2345621.
Annual Subscription : India : Rs. 330/-; Overseas : Rs. 2000/- (Air Mail)
Half Yearly Subscription : India : Rs. 165/-; Overseas : Rs. 1000/- (Air Mail)


"சமச்சீரான சத்துணவிற்கு, வீட்டு உணவைத் தவிர,
ஸெரிலாக்கும் மிகவும் அவசியமானது என்று நான் கருதுகிறேன்."
Nestlé
CERELAC
Infant Cereal with Milk
Wheat
உங்கள் குழந்தைக்கு ஸெரிலாக் அனுகூலத்தை அளியுங்கள்.
IMPORTANT NOTICE : MOTHER'S MILK IS BEST FOR YOUR BABY. INFANT FOOD SHALL BE INTRODUCED ONLY AFTER 4 MONTHS OF AGE.
महत्वपूर्ण सूचनाः माँ का दूध आपके बच्चे के लिए सर्वोत्तम है। ४ महीने के बाद ही उसे शिशु आहार देना शुरू करें।



Registered with the Registrar of Newspaper of India under No. 1041/57 •
Registered No. TN/Chief PMG 141/2001 • Licensed to post without